# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

OFFICE OF THE STATE EDITOR
GAZETTEER UNIT
7 - JAN 1972
169



திருவேங்கடமுடையான்

| மாலை 15 | விரோதிகிருது - மார்கழி - ஜனவரி 1972 | மணி 4 |
|---|---|---|

தமிழ் நாட்டு அரசின் அறநிலைய



தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பில், சென்னை—திருமயிலைக் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் தருமையாதீனத்தின் 25-ஆம் குரு முதல்வர் அவர்களின் அருள்நலம் போற்றும் சிறப்பியற் கூட்டம், உயர் நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள், நினைவு மலரை வெளியிட்டு உரை நிகழ்த்துதல். (9—12—71)

## பொருளடக்கம்


(1) சிவபெருமானின் திருவுருவங்கள்
(2) அடியார் பெருமை
(3) திருமுறை அருச்சனை
(4) சத்தி நிபாதம்
(5) ஆழ்வார்கள் வரலாறு
(6) ஞாயிறு போற்றுதும்
(7) திருப்புகழ்ப் பெருமை
(8) மூவர் தேவாரம்
(9) சிறப்பியற் கூட்டம்
(10) கடவுளியல் விளக்கும் காட்சி
(11) நினைவு அஞ்சலி
(12) மதிப்புரைகள்
(13) ஆலயத் தூய்மைச் சுழல்கோப்பைப் பரிசு
(14) தமிழ்நாடு தெய்விகப் பேரவை
(15) குடமுழுக்கு விழா
(16) கண்ணகிக் கோட்டம்
(17) வழிபாட்டுக்கு அயல் மொழி-வங்காளிக் குழந்தையின் வியப்பு
(18) சென்னைப் பட்டணத்துச் சட்டம்
(19) திருவருளும் வேண்டும்
(20) காவிரிக் கோட்டம்
(21) ஆண்டாள் பெருமை
(22) ஐங்கறி யமுது


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா. பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை- 34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துகொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.




7 - JAN 1972

மாலை 15 ] விரோதிகிருது — மார்கழி — ஜனவரி, 1972 [ மணி 4

# சிவபெருமானின் திருவுருவங்கள்

[ ந. ரா. முருகவேள், M. A., M. O. L. ]

முன்னுரை :

இறைவனுக்கு உருவம் இல்லை என்று சில மதங்கள் கூறுவதுண்டு. ஆயினும், நமது இந்துமதம் கடவுளுக்கு உருவம் உண்டு என்னும் கொள்கையுடையது. கடவுள், தாம் குறித்தது ஒன்று ஆக மாட்டாத குறைவை உடையவரல்லர். அவர் நெறிப்பட நிறைந்த ஞானமும், ஐவகைத் தொழிலும் உடைய நிலைமையர்; விருப்பு வெறுப்புக்கள் இல்லாதவர். ஆதலால், அவர் உயிர்கள் மீது கொண்டுள்ள கருணையினால், அவ்வுயிர்களுக்கு நலம் புரிதற் பொருட்டுத் தாம் நினைக்கின்றபடியெல்லாம், திருவுருவங்களை எடுத்துக்கொள்ள வல்லவராவர். இறைவன் நம்மைப்போல் வினைவயத்தினால் உருவங்களை எடுப்பவர் அல்லர். நம்முடைய உருவம் எழுவகைத் தாதுக்களால் இயன்றிருப்பது, அழிந்துபடும் இயல்புடையது. இறைவனது திருவுருவம் இத்தகைய குறைபாடுகளை யுடையதன்று. அடியவர்களுக்கு அருள்செய்வதன் பொருட்டுத் தாம் நினைத்தபடியெல்லாம் வடிவங்களை எடுத்துக்கொள்ளும் வல்லமை இறைவனுக்குரிய இயல்பாகும்.

இறைவன் ஒரு நாமமும், ஓருருவமும் இல்லாதவன். ஆயினும் அடியார்களின் பொருட்டு அவன், பல வடிவமும் பல பெயரும் கொள்கின்றான்.

"ஒருநாமம் ஓருருவம்
ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ"

என்பது திருவாசகம் அம்முறையில் தனக்கென ஒருருவம் இல்லாத இறைவன், அடியார்களுக்கு அருள் செய்தல் குறித்து, வெவ்வேறு திருவுருவங்களை மேற்கொள்ளுகின்ருன். ‘ நானுவித உருவாய் நமையாள்வான் ’ ‘ பலபல வேடம் ஆகும் பரன் நாரிபாகன் ’ என்பன தேவாரம். இறைவன் தன் இயல்பில் இத்தகையவன், ‘ இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எழுதிக் காட்டொணுதவன் ’ என்பது உண்மையேயாயினும், அவ் இறைவனை நம் பழம்பெரும் சான்ருேர்கள் வெவ்வேறு வடிவங்களில், பல்வேறு நிலைகளில் கண்டு அறிந்து பணிந்து போற்றியுள்ளனர். அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண், அவர் நினைந்த வடிவுடன் விரைந்து சென்று அருள் புரியும் இயல்பினன், இறைவன் !

“ ஆர் ஒருவர் உள்குவார்
உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற
அருளும் தோன்றும் ”

என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம். இங்ஙனம் சிவபெருமான் தன் அடியவர்களின் பொருட்டு அவ்வப்போது எடுத்தருளிய வடிவங்கள் அளவிலவாகும். அவற்றுள் மிகவும் முதன்மையானவையாகக் கூறப்படும் 25 திருவுருவங்களைப் பற்றி மட்டும், ஈண்டுச் சுருக்கமாகக் காண்போம்.

## (1) உமாமகேசர் :

சக்தியும் சிவமும் மலரில் மணம் போலவும், தீயில் வெம்மை போலவும், மணியில் ஒளி போலவும் பிரிவற்று விளங்குவனவாகும், இங்ஙனம் சிவத்தினின்று பிரிவற்று விளங்கும் சக்தியே, படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களும் முறையே நிகழ்ந்து, உயிர்கள் அனைத்தும் உய்தி பெறுவதன் பொருட்டு, உமாதேவியாக வடிவம்கொண்டு விளங்கும், பிரமன் திருமால் உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னும் ஐவரும் தமது திருமுன்னிலையில், ஐந்தொழில்களில் முறையே தத்தமக்குரிய தொழிலைச் செய்து நிற்கத், தாம் அவற்றைக் கடைக்கணித்துக் கொண்டு அசைவற்று இருக்கும் நிலையில், சிவபெருமான் தமது இடப்பாகத்தில் உமாதேவியாரை உடன்கொண்டு, எழுந்தருளியிருக்கும் நிலையே, உமாமகேசர் வடிவம் எனப்படும்.

## (2) சுகாசனர் :

திருக்கயிலாயத்தில் உமாதேவியார் சிவாகமங்களினது தத்துவங்களைத் தமக்குப் போதித்தல் வேண்டும் என்று வேண்டிக்கொண்டருள, சிவபெருமான் அம்மையாரைத் தமது அருகில் இருத்தி, வலக்காலைத் தொங்கவிட்டுக்கொண்டும், இடக்காலை அரியாசனத்தின்மீது மடக்கிக்கொண்டும் அமர்ந்திருந்து, ஒரு திருமுகமும் ஆறு திருக்கைகளும் உடையவராய், வலத் திருக்கை ஒன்றில் சின்முத்திரையைக் காட்டிக்கொண்டு, வேத சிவாகமத் தத்துவப் பொருள்களை உபதேசிக்கும் நிலையே சுகாசன வடிவம் எனப்படும். சுகாசனமாவது, சுவத்திகம் கோமுகம் பதுமம் வீரம் கேசரி பத்திரம் முக்தம் மயூரம் சுகம் என்னும் ஒன்பது வகை ஆசனங்களுள் ஒன்று. எவ்வாறு அமர்ந்தால் சுகமும் திடனும் உண்டாகுமோ, அவ்வாறு அமர்வது, சுகாசனம் எனப்படும்.

## (3) இடபாரூடர் :

சிவபெருமான் திரிபுர அசுரர்களை எரிப்பதற்காகச் சூரிய சந்திரர்களே சக்கரமாகவும், பூமியே தேராகவும், மேரு மலையே வில்லாகவும் கொண்டு, போருக்குப் புறப்பட்டுப் பூமியாகிய தேரின்மீது ஏறும்போது, விநாயகர் வழிபாடு புரியாத குற்றத்தால், அத்தேர் அச்சு ஒடிந்து முறிந்தது. அந்நிலையில் திருமால் எருது (இடபம்) வடிவம் கொண்டு அவரைத் தாங்கி நின்றனர். இந்நிலையே இடபாரூடர் வடிவம் எனப்படும்.

“ தடமதில்கள் மூன்றும்
தழல்எரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினன்
திருமால்காண் சாழலோ ”

—மணிவாசகர்.

## (4) இடபாந்திகர் :

எல்லா உலகுகளும் உயிர்களும் ஒடுங்கி அழிகின்ற கடையூழிக் காலத்தில், நாமும் அழிய நேரிடுமே என்று அஞ்சிய அறக்கடவுள் (தரும தேவதை), யாது செய்வதென்று ஆராய்ந்து, எருது (இடபம்) வடிவம் கொண்டு, தம்மைத் தஞ்சமடைய, சிவபெருமான் அற வெள்விடையாகிய அதன்மீது ஏறி இவர்ந்து அருள்புரிந்த நிலையே, இடபாந்திக மூர்த்தம் எனப்படும். தம்மை அன்புடன் வழிபடுகின்ற மெய்யடியவர்க்குச் சிவபெருமான் தரும

148693

N 71. 44. 4



தேவதையாகிய அறவெள்விடையின் மீதே அமர்ந்து வந்து காட்சி தந்து அருள்புரிவார். இம்மூர்த்தத்திற்கு இடபாந்திகம் எனப் பெயர் வழங்கும்.

## (5) புஜங்க லலிதர் :

காசிப முனிவரின் மனைவியாகிய கத்துரு, விநதை என்னும் இருவரும், அழகிற் சிறந்தவர் யார் என்பது பற்றித் தம்முட் பூசலிட்டுக் கொண்டனர். காசிபர் கத்துருவே அழகில் சிறந்தவள் என்று தீர்ப்பளித்தார். ஒப்பந்தத் தின்படி விநதை கத்துருவுக்கு அடிமையாயி னள். இந்திர உலகத்திலுள்ள அமுத கலசத் தைக் கொண்டுவரின், நினது அடிமைத் தளையை நீக்குவேன் எனக் கத்துரு விநதைக் குக் கூறினுள். விநதை தன் புதல்வனுகிய கருடனை அனுப்பி அமுத கலசம் கொணரச் செய்து, தன் அடிமைநிலை நீங்கினுள். கருடன் திருமாலுக்கு ஊர்தியாகிச் சிவபெருமானின் அருளையும், சிறந்த வலிமையையும் பெற்றனன். அஃது அறிந்த கத்துரு, கருடனுல் தன் புதல் வர்களாகிய பாம்புகளுக்குத் தீங்கு நேருமோ என நினைந்து, சிவபெருமானை வழிபட்டாள். சிவபிரான் அவளது வேண்டுகோளின்படி, அவளது புதல்வர்களாகிய பாம்புகளைத் தமது திருமேனியில் பலவகை மாலைகளாகவும் அணி கலன்களாகவும் அழகுற அணிந்துகொண்டு அருள் செய்தனர். இந்நிலையே புஜங்கலலிதம் எனப்படும்.

## (6) புஜங்கத்திராசர் :

ஒரு சமயம் தாருகவனத்து முனிவர்கள் வேள்விகளே எல்லா நலன்களையும் தரும், தெய்வம் என ஒன்று வேண்டுவதில்லை என இகழ்ந்திருந்தனர். அந்நிலையில், அவர்களது செருக்கை அடக்கி ஆட்கொள்ளச் சிவபெரு மான் பிட்சாடன வடிவமும், திருமால் மோகினி வடிவமும் கொண்டு சென்று, அவர்கள் மதி மயங்கித் தடுமாறி வருந்தச் செய்தனர். அத ஞல் சினம்கொண்ட தாருகவனத்து முனிவர் கள், சிவபிரானுக்குத் தீங்கு செய்ய விரும்பி, அபிசாரயாகம் என்னும் கொடிய வேள்வியைச் செய்து, பூதப்படை முயலகன் உடுக்கை மான் மழு வெண்தலை புலி அக்கினி அலகை சூலம் முதலியவைகளைத் தோற்றுவித்து, அவற்றைச் சிவபிரானுக்குத் தீங்கு செய்யுமாறு ஏவினர். சிவபெருமான் அவைகளையெல்லாம், ஒவ் வொரு வகையில் தமக்கு உரியவையாகுமாறு செய்து கொண்டார். அதுகண்ட முனிவர்கள் மேலும் சினம் கொண்டு கொடிய பாம்புகளை வேள்வியினின்று தோற்றிச் சிவபிரான்மீது ஏவினர். சிவபெருமான அவற்றையெல்லாம் தமக்கு மாலையாகவும் கங்கணமாகவும் பிற வாறும் அணிந்து கொண்டருளினர். இந் நிலையே புஜங்கத்திராச வடிவம் எனப்படும்.

## (7) கங்காதரர் :

ஒரு சமயம் சிவபெருமான் திருக்கயிலாயத் தில் ஒரு சோலையில் தனியே எழுந்தருளியிருந் தனர். அப்போது அங்குவந்த உமாதேவியார் அவர்தம் இரு திருக்கண்களையும் விளையாட் டாகத் தன் கைகளால் மூடினள். சூரிய சந்தி ரர்களே சிவபெருமானின் இருகண்களாக விளங்குதலின், அப்போது உலகம் முழுவதும் ஒளியிழந்து இருளில் அழுந்தி நின்றது. அத ஞல் உயிர்கள் அனைத்தும் பெரிதும் அல்ல லுற்றன. உயிர்களின் துன்பத்தைப் போக்கச் சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணைத் திறந் தருளினர். உலகில் இருள் நீங்கி ஒளி பரவி உயிர்கள் இன்புற்றன. தான் விளையாட்டாகச் செய்த செயலால் உயிர்களுக்கு நேர்ந்த துன் பத்தை நினைத்து அம்பிகை தான் புரிந்த குற் றத்திற்கு அஞ்சி நடுங்கினுள். அச்சத்தால் அம்பிகையின் திருமேனியில் வியர்வை அரும்ப, அஃது அம்பிகையின் கைவிரல்கள் பத்தினின் றும் கங்கை என்னும் வெள்ளமாகப் பெருக் கெடுத்து ஓடியது. அப்பெரு வெள்ளத்திற்கு அஞ்சித் தேவர்களெல்லாம், சிவபிரான்பால் அடைக்கலம் புகுந்தனர். அப்பெரு வெள்ளத் தைச் சிவபெருமான் தடுத்து நிறுத்தித் தமது சடைமுடியில் ஏற்றருளினர். இந்நிலையே கங்காதர மூர்த்தம் ஆகும்.

## (8) கங்கா விசர்ச்சனர் :

கோசல நாட்டில் அயோத்தி நகரில் சகரன் என்னும் அரசன் அசுவமேதம், என்னும் வேள்வி ஒன்றை இயற்றினுன். அவன் தன் வீரத்திற்கும், வெற்றிக்கும் அறிகுறியாகப் பல நாடுகளுக்கும் சென்று சுற்றிவருமாறு விடுத்த குதிரையினை, அழுக்காறு காரணமாக இந்திரன் கவர்ந்து சென்று, பாதல உலகில் தவம் புரியும் கபில முனிவருக்குப் பின்புறம் கட்டிவைத்து மறைந்து போயினுன். குதிரையை எங்கெங் கும் தேடிவந்த சகரனின் புதல்வர்கள் அறுபதி னுயிரவர், அது பாதலத்தில் கபில முனிவரின் பின்புறம் இருப்பது கண்டு, அவரே கவர்ந்து

வந்ததாக எண்ணிப்போர் செய்ய முனைந்தனர். அதனால் அவர்கள், தவநலஞ்சான்ற அவர்தம் சினப் பார்வையால் எரிந்து சாம்பலாயினர். பின்னர் அவர்கள் வழியில் வந்த பகீரதன் என்பவன், தன் முன்னோர்களாகிய அவர்கள் விடுபேறு அடையச் செய்தல் வேண்டுமென்று விரும்பிச், சிவபெருமானை நோக்கி நெடுங்காலம் தவம் புரிந்தனன். சிவபெருமான் அவன் விரும்பியபடி, அவனது முன்னோர்களின் சாம்பலின் மீது கங்கை நீரின் புனித வெள்ளம் படியும்படி செய்வதற்காக, அதனைத் தமது சடைமுடியில் ஏற்றுத்தாங்கி, அதன் பெருக்கத்தால் இவ்வுலகம் அழிவுறாதபடி, அதனது ஒரு சிறு திவலையை மட்டும் இந்நிலவுலகில் பாய்ந்து பரவிப் பெருகுமாறு விடுத்தருளினர். இத்திருவுருவமே கங்கா விசர்ச்சன மூர்த்தம் எனப்படும்.

## (9) திரிபுராந்தகர் :

முன்னொரு காலத்தில் தாரகாசுரன் என்பவனின் புதல்வர்களாகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்துன்மாலி என்னும் அசுரர்கள் மூவரும் பெருந்தவம் புரிந்து, பறந்து திரிந்துலவும் தன்மையுடையனவும், பொன், வெள்ளி, இரும்பு என்பவற்றால் அமைந்தனவுமாகிய மூன்று பெரும் கோட்டைகளைப் பெற்றனர். அவற்றைக் கொண்டு அம்மூவரும், தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெருங் கொடுமைகள் புரிந்து வந்தனர். அவர்களின் செருக்கை அடக்கி அழித்தருளச் சிவபெருமான் திருவுளம் கொண்டு, தேவர்களெல்லோரும் படைகளாகவும், சூரிய சந்திரர்கள் சக்கரமாகவும், உலகம் தேராகவும் அமைய, அத்தேரின் மீது ஏறித் திரிபுர அசுரர்கள் மீது போர் செய்யப் புறப்பட்டார். அப்போது தேவர்களெல்லாம் இவர் நம்முடைய துணையைக் கொண்டன்றோ, போர் புரியச் செல்கின்றார்; நம்முடைய உதவியின்றி இவர் திரிபுர அசுரர்களை அழிக்க இயலுமோ? என்று எண்ணிச் செருக்குற்றனர். இதை அறிந்த சிவபெருமான், தேவர்களின் அறியாமையை நினைந்து ஒரு சிறிது புன்முறுவல் தோன்றச் சிரித்தார். அச்சிரிப்பினாலேயே திரிபுரங்களும் அழிந்தன. திரிபுர அசுரர்களும் எரிந்து சாம்பலாயினர். இங்ஙனம்சிவபெருமான் செய்தருளிய நிலையே, திரிபுராந்தக மூர்த்தம் எனப்படும்.

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம் செற்றமை யார்அறி வாரே

—திருமந்திரம்

## (10) கலியாண சுந்தரர் :

ஒரு சமயம் முனிவர்கள் சிலர் வேதசிவாகமங்களில் தமக்குள்ள ஐயங்களைப் போக்கி, அவற்றின் நுண்பொருள்களை விளக்கியருளுமாறு சிவபெருமானை வேண்டிக் கொண்டனர். அதன்படி சிவபெருமான் அவர்களுக்குச் சரியை கிரியை யோகம் பற்றிய செய்திகளை விரிவாக விளக்கி, வேத சிவாகமங்களின் ஞான பாதப்பொருள் சொல்லிக் காட்டுவது அன்றுதலின், மௌனநிலையை மேற்கொண்டு யோக நிலையில் அமர்ந்து சின் முத்திரையைக் காட்டியருளினர். அங்ஙனம் சிவபெருமான் யோக நிலையில் அமர்ந்திருந்த ஒரு சில கணங்கள் உயிர்களுக்குப் பல ஊழிக் காலமாயின. அப்போது உயிர்களெல்லாம் போக நுகர்ச்சியின்றி வறிதே செயலற்றுக் கிடந்தன. அதுகண்ட பிரமன் திருமால் முதலியோர் உலக உயிர்கள் போக நுகர்ச்சியில் தலைப்பட்டு இன்புறுமாறு செய்தருளல் வேண்டும் என விண்ணப்பித்துக்கொள்ள, இறைவன் உயிர்கள் எல்லாம் இன்புறுதற் பொருட்டும், உலகில் இல்லற வாழ்க்கை நடைபெறுதற் பொருட்டும், மலையரையனுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்து வந்த உமாதேவியாரைத் திருமணம் புணர்ந்து கொண்டருளினர். இந்நிலையே கலியாண சுந்தர மூர்த்தம் எனப்படும்.

'' மலையரையன் பொற்பாவை
வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான்
என்னுமது என்னேடீ!
உலகறியத் தீவேளாது
ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம்
கலங்கிடுங்காண் சாழலோ!

## (11) அர்த்த நாரீசுவரர் :

முனிவர்களிற் சிறந்த பிருங்கி என்பவர், ஒருசமயம் திருக்கயிலைக்குச் சென்றார். அங்கே சிவபெருமானும் உமாதேவியாரும் ஒருங்கே எழுந்தருளியிருந்தனர். பிருங்கி முனிவர் அவ்விருவரையும் ஒரு சேர வணங்காமல், அம்மையை விட்டு விட்டுச் சிவபெருமானை மாத்திரம் வணங்கித் துதித்தனர். வண்டின்

உருவம் கொண்டு உமாதேவியாரை நீக்கிச் சிவபெருமானை மாத்திரம் வலம் வந்து பணிந்தனர். இது கண்ட அம்பிகை, தாம் சிவபெருமானின் வேருகப் பிரிந்து தனி உருவம் கொண்டிருத்தலினன்றே, இங்ஙனம் நிகழ்ந்தது என எண்ணி, தாம் இறைவனேடு பிரிவறக் கலந்து ஒன்றி நிற்கும் பெருநிலை பெற விரும்பித் தவம் புரிந்தனர். அத்தவத்திற்கு உவந்த சிவபெருமான், அம்பிகையைத் தம்மிற் பிரிவறத் தம்முடைய இடப்பாகத்தில் பாதியளவு இடம் கொடுத்து, என்றும் தம்முடன் ஒன்றியிருக்கும் நிலையில் ஏற்றுக்கொண்டருளினர். இங்ஙனம் ஒரு திருமேனியில் வலப் பாதியில் சிவபெருமானும், இடப்பாதியில் அம்பிகையும் ஒருவரை ஒருவர் பிரிக்க இயலாமல் விளங்கும் நிலையே அர்த்தநாரீசுவர மூர்த்தம் எனப்படும். ஒரு பாதி ஆணும் மறு பாதி பெண்ணுமாகப் பிரிவின்றி வடிவம் கொண்டிருக்கும் இத்திருவுருவினை 'மாதியலும் பாதியர்' எனவும், 'அம்மையப்பர்' எனவும் உலகம் போற்றும். "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்" என்னும் நிலையில், இறைவன் ஒருவனே எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையுமாக இருந்து உதவி புரிந்து வரும் உண்மையினை இத்திருவுருவம் குறிக்கின்றது. உலகிற் சமுதாய வாழ்க்கையானது, ஆண் பெண் இருபாலாரும் சமநிலையிற் கூடி ஒருவருக்கொருவர் இன்றியமையாதவராய், அன்பினுல் இயைந்து ஒன்றுபட்டு ஒருவரோடொருவர் உற்ற துணையாய் வாழ்ந்து நலம் பெறுதல் வேண்டும் என்னும் உயரிய உண்மையினை இத்திருவுருவம் விளக்குகின்றது.* தமிழ் நாட்டில் திருச்செங்கோடு என்னும் தலத்தில் அர்த்தநாரீசுவரர் திருவுருவம் தானே தோன்றியதாய்ச் சிறந்து விளங்கி வருகின்றது. இதனை இறைவனின் 'தொன்மைக் கோலம்' என்று மாணிக்க வாசகரும், 'முதல்உரு' என்று அருள் நந்தி சிவாசாரியாரும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

> "பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுருத்
> தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்"
>
> —புறநானூறு.

> நீல மேனி வாலிழை பாகத்து
> ஒருவன் இருதாள் நிழற்கீழ்
> மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே"
>
> —ஐங்குறுநூறு.

## (12) சோமாஸ்கந்தர் :

சிவபெருமான் உமாதேவியாருடன், தம் இருவருக்குமிடையில் கந்தன் என்னும் முருகப் பெருமான் இருக்கும் நிலையில் எழுந்தருளி விளங்கும் திருவுருவமாகும். இத்திருவுருவத்தை வழிபடுவோர் கணவனும் மனைவியுமாக மக்கட் பேற்றுடன் இனிய குடும்ப வாழ்வின் நலங்களைப் பெறுவர் என்று நூல்கள் கூறுகின்றன. இது பற்றியே, எல்லாச் சிவாலயங்களிலும் சோமாஸ்கந்த மூர்த்தம் எழுந்தருளச் செய்து வழிபடப் பெறுகின்றது.* திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசப் பெருமான் சோமாஸ்கந்த மூர்த்தியேயாவர். காஞ்சிபுரம் திருக்கழுக்குன்றம் திருமறைக்காடு திருப்புள்ளிருக்கு வேளூர் முதலிய பழம் பெரும் தலங்களிலெல்லாம் கருவறைச் சுவரில் சிவலிங்கத்துக்குப் பின்னர்ச் சோமாஸ்கந்தரின் அழகிய சிற்பம் அமைக்கப் பெற்றிருத்தலைக் காணலாம். இறைவனுக்குரிய சிறப்பியல்புகளாகக் கூறப் பெறும் சத்து சித்து ஆனந்தம் என்பவற்றுள், சிவம் சத்தாகவும், அம்பிகை சித்தாகவும், கந்தன் அல்லது முருகன் ஆனந்தமாகவும் திகழும் பெற்றியை விளக்குவது, சோமஸ்கந்த மூர்த்தம் எனலாம். இங்ஙனமே, உமாதேவியார் அருகிருக்கச் சிவபெருமான் தமது தொடையின்மீது விநாயகரை அமர்த்திக் கொண்டு வீற்றிருக்கும் நிலை, விக்கினப் பிரசாதர் என்னும் திருவுருவமாகும்.

> ஏலவார் குழல் இறைவிக்கும்
> எம்பிரான் தனக்கும்
> பாலன் ஆகிய குமரவேள்
> நடுவுறும் பான்மை,
> ஞால மேல்இரவி னேடு
> பகலுக்கும் நடுவே
> மாலை யானதொன்று அழிவின்றி
> வைகுமாற தொக்கும் —கந்தபுராணம்

* "The image of Artha Nariswara is India's recognition of the mutual relationship of man and woman, the idea of the co-operative, interdependent, separately incomplete but mutually masculine and feminine functions.

The husband and the wife are to each other the best of friends, the essence of all relationship, the fulfilment of all desires, the very life itself. So is the husband to the wife and the wife to the husband."

—Dr. S. Radhakrishnan.

## (13) சந்திரசேகரர் :

பிரமதேவரின் புதல்வனுகிய தக்கன் என்பவன், தன் புதல்வராகிய இருபத்தேழு நட்சத்திரங்களேயும்,சந்திரனுக்கு மணம் செய்து கொடுத்தான். அப்போது தன் மகளிர் அனே வரையும் சமநிலேயில் வைத்து அன்புகாட்டி வாழ்ந்து வருமாறு தக்கன் சந்திரனுக்கு அறிவுரை கூறியிருந்தான். ஆனல் சந்திரனே உரோகிணி கார்த்திகை என்னும் இரு மனேவியரிடத்தில் மட்டுமே பெரும் காதல் கொண்டு, ஏனேயரைப் புறக்கணித்து ஒழுகினன். அதனல் சினம் கொண்ட தக்கன், சந்திரனேச் சபித்தான். அதனல் அவனது கலேகள் ஒவ்வொன்ருகத் தேய்ந்து வந்தன. சந்திரன் ஒளியும் சிறப்புமிழந்து வருந்தி நின்ருன். சிவபெருமானிடம் சென்று, தன்னேக் காத்தருளும்படி வேண்டி அடைக்கலம் புகுந்தான். தன் குற்றங்களே உணர்ந்து வருந்தினன். திருவடியில் வந்து வீழ்ந்து வணங்கி அடைக்கலம் புகுந்த சந்திரன்பால், சிவபெருமான் இரக்கம் கொண்டார். அவனேக் காப்பாற்றினர். அம்மட்டோ! தம் காலில் வந்து விழுந்தவனே எடுத்துத் தம் தலேயின்மீது வைத்துச் சூடிக்கொண்டார். தம்மை வணங்குபவர்கள் எல்லாம் அவனேயும்கூட வணங்கும்படி செய்துவிட்டார். மனிதர்கள் தவறுகள் பல செய்துவிட்டாலும், அவற்றை உணர்ந்து வருந்தி மனம் திருந்தித் தன்னே வந்தடைந்தால், இறைவன் அவர்களேக் காப்பாற்றியருள்வான் என்னும் பெரிய சிறந்த உண்மையினே விளக்குவது, சந்திரசேகரர் என்னும் திருவுருவமாகும்.

நெற்றியிற் கண்ணுடை நிமலத் தெம்பிரான்
உற்றவர்க் கருள்புரி கின்ற உண்மையைத்
தெற்றென உணர்த்தல்போல், திங்களின்கலே
கற்றையஞ் சடைமிசைக் கவின்று பூத்ததே

—கந்தபுராணம்

## (14) பிட்சாடனர் :

தாருகவன முனிவர்களின் செருக்கை அடக்குவதற்காகச் சிவபெருமான் ஏற்றருளிய திருவுருவமே பிட்சாடனர் வடிவமாகும். சிவபெருமான் எல்லா உலகங்களுக்கும் தலேவன். அரசர்களுக்கெல்லாம் தலே சிறந்த பேரரசன். செல்வர்களில் எல்லாம் மேலான மாபெரும் செல்வன். அத்தகைய பெரு நலஞ்சான்ற சிவபெருமான், மிகவும் எளிய நிலேயில் ஒரு பிங்சைக்காரன்போல வடிவம் கொண்டு எழுந்தருளும் எளிய இனிய திருவுருவமே பிட்சாடன மூர்த்தமாகும். எல்லாச் செல்வங்களேயும் உடைய அவன், ஏதும் இல்லாத வறியவன் போல வருகின்ருன். எல்லாத் தலேமையும் சிறப்பும் வாய்ந்த அவன், ஒரு எளியவன் போலத் தோன்றுகின்ருன். வேண்டுவோர் வேண்டுவன எல்லாம் ஈயவல்ல வள்ளலாகிய அவன், ஏற்று இரந்து உண்டு உழலும் எளிய பிச்சைக் காரனகக் காட்சி அளிக்கின்ருன். இறைவன் தான் ஒரு பெரும் செல்வனும், ஒப்பற்ற பெருந் தலேவனும், இணேயற்ற பெரு வள்ளலுமாக இருந்தபோதிலும், ஒருவகையில் தான் மிகப் பெரிய பிச்சைக்காரனுகவே இருத்தலே விரும்புகின்ருன், அவன் நம்மிடம் அன்புப் பிச்சை பெற விரும்புகின்ருன், என்னும் இனிய தத்துவத்தை உணர்த்துவதே பிட்சாடனவடிவம் எனலாம்.*

## (15) நடராசர் :

சிவபிரான் திருவுருவங்களுள் மிகப்பெரும் சிறப்புடையதாக இந்நாளில் எல்லோராலும் மிகப் பெரிதும் விரும்பிப் போற்றப்படுவது கூத்தப் பெருமானின் திருவுருவம் ஆகிய நடராச வடிவமேயாகும். ''நடராச வடிவின் நலங்கள் அளப்பரியன. இத்தகையதொரு சிறந்த வடிவத்தினே, எத்தகைய பெரும் கவிஞனுயினும் இந்நாளில் கருதி உணர்ந்து படைத்தல் இயலாது. நடராச வடிவம் வெறும் கற்பனேக் கவிதையின் விளேவு அன்று, அஃது அறிவியல் உண்மையும் நுண்மையும் அமைந்தது. ஆதலின் காலமும் இடமும் கடந்து, எல்லா நாடு

*'' Hindu mythology looks upon God as an eternal beggar waiting for the opening of the door that he may enter into the darkness and illumine the whole horizon of our being as with a lightning flash. It is not so much man seeking God as God seeking man. He goes out into the dangers of the wilderness to lead us out of it. God so loves the world that he gives Himself to it. He expects us to recognise and respond to his call and Co-operate with Him. He wants us to look upon him as our friend, lover and Comrade. He is for ever saving the world.''

—Dr. S. Radhakrishnan,
An Idealist View of Life.

மொழி சமயம் சார்ந்த மக்கள் அனைவராலும் வியந்து போற்றப்படத் தகுந்ததாய், அது விளங்குகின்றது.*

நடராச வடிவின் ஒவ்வொரு பகுதியும் பற்பல நுட்பங்களை உள்ளடக்கிக்கொண்டு, ஒப்புயர்வற்றுத் திகழ்கின்றது. உலகம் ஆகிய அண்டம் (Macrocosm) அமைந்திருக்குமாறு போலவே, நம் உடம்பு ஆகிய பிண்டமும் (Microcosm) அமைந்துள்ளது. இறைவன் அண்டவெளியில் திருநடம் புரிவது போலவே, நம் உடம்பு ஆகிய பிண்டத்தின் கண்ணும் திருநடம் புரிந்தருள்கின்றான். அண்டவெளி நடனம் தில்லைச் சிதம்பரத்தில் நிகழ்கின்றது. பிண்டமாகிய உடம்பினுள்ளே நிகழும் நடனம் நம்முடைய இருதயத்தில் நடைபெறுகின்றது. அண்டத்துக்குச் சிதம்பரம்போலப் பிண்டத்துக்கு இருதயம் ஆகிய நெஞ்சப்பை (Heart) இயங்குகின்றது. இருதயத்தின் அசைவும் இயக்கமும் நின்று போய்விட்டால், உடல் செயலற்றுப் பிணம் ஆகும். அவ்வாறே தில்லைச் சிதம்பரத்தில் நடராசப் பெருமானின் திருக்கூத்து நிகழாதொழியின், அண்டங்களெல்லாம் அசைவற்று இயங்காமல் நின்று அழிந்தொழிந்துபோகும். "அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது". அணுக்களும் அண்டகோடிகளும் தத்தம் நிலையிலும் நெறியிலும் ஆடி அசைந்து முறையே இயங்கிக்கொண்டு இருப்பதற்குரிய மூலமுதற் காரணம், நடராசப் பெருமானின் ஆடலும் அருளியக்கமுமே ஆகும்.

## (16) காம தகனர் :

காசிப முனிவருக்கும் மாயை என்பவளுக்கும் புதல்வராகப் பிறந்த சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் ஆகிய மூவரும், தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெரும் தொல்லைகள் விளைத்து வந்தனர். அதனால் துன்புற்ற அவர்கள் சிவபிரானிடம் சென்று முறையிட்டுக் கொண்டனர். அப்பொழுது சிவபெருமான் அவர்களை நோக்கி "எம்மையே அனைய ஒரு புதல்வனைத் தருவோம். அவன் உங்கள் துன்பத்தை அகற்றுவான்" என்று அருளிச் செய்தனர். அதுகேட்ட தேவர்களும் முனிவர்களும் ஒருவாறு ஆறுதலடைந்து திரும்பினர். பின்னர்ச் சிவபெருமான் சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் என்னும் முனிவர்களின் வேண்டுகோட்படி, அவர்களுக்குத் தத்துவ உபதேசம் செய்ய முற்பட்டுச் சின்முத்திரை காட்டி யோக நிலையில் அமர்ந்தனர். அதனால் காலம் பல கழிந்தது. எனவே தேவர்களும் முனிவர்களும் கூடித் திரண்டு, சிவபெருமானை யோக நிலையிலிருந்து மாற்றித் தேவியாரொடு கூடி மகப்பேறு எய்துமாறு செய்யும்படி, காமதேவனை வற்புறுத்தித் திருக்கயிலைக்கு அனுப்பிவைத்தனர். காமதேவன் தனது மலரம்புகளை யோகநிலையில் அமர்ந்திருந்த சிவபெருமான்மீது ஏவினான். பிற உயிர்களைப்போல் தம்மையும் எளிதாக நினைத்துவிட்டமை குறித்துச் சிவபெருமான் காமதேவனைத் தமது நெற்றிக்கண்ணைத் திறந்து சிறிதே நோக்கினார். அவ்வளவில் அவன் எரிந்து சாம்பலாயினன். இந்நிலையே காமதகனர் என்னும் திருவுருவமாகும். உயிர்கள் அனைத்தும் காமவேட்கையை விடுத்து அதனை வெற்றிகொண்டு அடக்கி உய்தல் வேண்டும் என்னும் உயரிய உண்மையினை இத்திருவுருவம் விளக்குகின்றது எனலாம். காமதகனம் "திருக்குறுக்கை" என்னும் சோழ நாட்டுத் தலத்தில் நிகழ்ந்ததாக நூல்கள் கூறும்.

## (17) காலகாலர் :

கவுசிக முனிவரின் புதல்வராகிய மிருகண்டு முனிவர், முற்கல முனிவரின் புதல்வியாகிய மருத்துவதி என்னும் அம்மையை மணந்து, இல்வாழ்க்கை நடத்தி வந்தனர். தமக்குப் புதல்வர்ப் பேறு வாய்க்காமையால் மிருகண்டு முனிவர் காசித் தலத்திற்குச் சென்று, சிவபெருமானை நோக்கிக் கடும் தவம் புரிந்தார். சிவபெருமான் அருளால் அவருக்கு மார்க்கண்டேயர் என்னும் புதல்வர் ஒருவர் தோன்றினார். அவரது வாழ்நாட் காலம் 16 ஆண்டுகாலமே என அறிந்து, தாய்தந்தையர்கள் வருந்தினர். தந்தை தாயரின் கவலையை அறிந்த மார்க்கண்டேயர், "யான் சிவபெருமானைப் பூசித்து இறவாநிலை பெறுவேன், நீவிர் கவலற்க" என்று கூறிச் சிவபூசை செய்து வந்தனர். அவரது வாழ்நாட் காலம் முடிதலை அறிந்த காலன் (எமதர்மன்), அவரது உயிரைக் கவர்ந்து செல்

---

*" No artist of today, however great, could more exactly or more wisely create an image of that Energy which science must postulate behind all phenomena......This is poetry, but nevertheless, the truest science."

—Dr. Anandakumaraswamy,
The Dance of Siva.

லப் போந்தான். அவனது வருகையை அறிந்த மார்க்கண்டேயர், தான் வழிபட்டுவந்த சிவலிங்கத்தைத் தழுவி அணைத்துக்கொண்டு அடைக்கலம் புகுந்தனர். காலன் மிகவும் சினங்கொண்டு, அவர்மீதும் அவர் தழுவி அணைத்திருந்த சிவலிங்கத்தின்மீதும், தனது பாசத்தை வீசிப் பற்றியீர்க்க முனைந்தான். உடனே சிவபெருமான் சிவலிங்கத்தினின்று வெளிப்பட்டு, தமது இடக்காலால் காலனை எற்றிச் சிறிது உதைத்தனர். காலன் நிலைகுலைந்து கீழே விழுந்து மூர்ச்சித்து மயங்கினான். மயக்கம் தெளிந்ததும் தன் தவறுணர்ந்து பிழைபொறுத்தருளும்படி சிவபெருமானை வழிபட்டான். சிவபெருமான் மார்க்கண்டேயரை என்றும் பதினாறு வயதுடன் நீடு வாழ்வோன் (சிரஞ்சீவி) ஆக விளங்கும்படி அருள் புரிந்து, 'இனி என்றும் என்னுடைய அடியார்களை நீ அணுகற்க' என்று காலனுக்குப் பணித்து விடை கொடுத்து அனுப்பினார். இதனால் சிவபெருமானுக்குக் காலகாலர் என்றும், காலசம்மாரர் என்றும் பெயர்கள் வழங்குவனவாயின. இத்திருவுருவை வணங்குபவர்கள், நோயுற் றடராமல், நொந்து மனம் வாடாமல், பாயிற்கிடந்து பதையாமல், இறப்பச்சமும் துன்பமும் சிறிதுமின்றி, தம் வாழ்நாளின் முடிவில் இனிதாக உயிர்துறக்கும் பேறு பெறுவர். காலசம்மாரம் சோழநாட்டில் திருக்கடவூர் என்னும் தலத்தில் நிகழ்ந்ததாகப் புராணங்கள் புகலும்.

''மார்க்கண்டர்க் காக
மறலிபட்ட பாட்டை, உன்னிப்
பார்க்கின் அன்பர்க்கு என்ன
பயங்காண் பராபரமே''

—தாயுமானவர்

## (18) சண்டேச அனுக்கிரகர் :

சோழ நாட்டில், சேய்ஞலூர் என்னும் தலத்தில், எச்சதத்தர் என்பவருக்கும், பவித்திரை என்னும் அம்மையாருக்கும், விசாரசருமர் என்னும் புதல்வர் ஒருவர் தோன்றி வளர்ந்து வந்தார். அவர் சிறுபிள்ளையாகக் கல்வி பயிலப் பள்ளிக்குச் செல்லும் வழியில், இடையன் ஒருவன் பசுக்களைக் கோலால் அடித்துக் கொடுமை செய்தலைக் கண்டு மனம் வருந்தி, அவற்றைத் தாமே அன்புடன் மேய்த்துக் காக்க முற்பட்டார். அவரைக் கண்ட அளவில் பசுக்கள் அன்பினால் தாமே பால் சொரிந்து பொழியும். பசுக்களின் பால் தரையில் சொரிந்து வீணாதலைக் கண்ட விசாரசருமர், தாம் பசுக்களை மேய்த்து வந்த மண்ணி யாற்றுப் பரப்பில், மணலால் இலிங்கம் அமைத்து, பால் சொரிந்து பூசை புரிந்து வரலாயினர். எச்சதத்தன் ஒருநாள் அதனை மறைந்திருந்து கண்டு, சினம் கொண்டு, விசாரசருமர் பூசை புரிந்த அந்த மணல் இலிங்கத்தையும், அருகிலிருந்த பாற்குடத்தையும் காலால் எற்றி இடறினான்.

சிவ பூசையிலேயே மனம் ஒன்றித் திளைத்திருந்த விசாரசருமர், அருகே கிடந்கே கோல் ஒன்று கொண்டு எச்சதத்தனின் காலை நோக்கி வீசினார். அது மழுவாக மாறி அவனது இரு கால்களையும் துணித்தது. அவ்வளவில் சிவபெருமான் வெளிப்பட்டு ''இனி நாமே நினக்குத் தந்தையாவோம்; நாம் உண்டனவும் உடுப்பனவும் சூடுவனவும் ஆகிய நின்மாலியங்கள் நினக்கே உரியனவாகும்; நீ சண்டேசுவரன் என்னும்பதம் பெறுக'' என்று அருளிச்செய்தார். இந்நிலையே சண்டேச அனுக்கிரகர் என்னும் திருவுருவமாகும். கங்கை கொண்ட சோழபுரம் கோயிலில் இத்திருவுருவம் மிக அழகிய சிற்பமாகக் காண்பார் கண்ணையும் கருத்தையும் கவரும் அளவில் மிகவும் சிறந்த வேலைப்பாடுடன் அரிய முறையில் அமைந்துள்ளது. சிவபெருமானின் திருப்புதல்வர்களுள் சண்டேசுவரரும் ஒருவராகத் திகழ்கின்றார். சிவாலயங்களில் நிகழும் பஞ்சமூர்த்திகளின் புறப்பாடு என்னும் நிகழ்ச்சிகளில் சண்டேசுவரரும் ஒருவராக இடம் பெறுவார். பழைய காலத்தில் கோயில் நிகழ்ச்சிகள் செயல்கள் அனைத்தும் சண்டேசுவரர் பெயராலேயே நிகழ்ந்து வந்தமையினைக் கல்வெட்டுக்களால் அறியலாம்.

## (19) தட்சிணாமூர்த்தி :

சிவபெருமானின் திருவுருவம், ஞானம், ஆனந்தம் என்று இருவகைப்படும். நடராசப் பெருமானின் திருவுருவம் ஆனந்தம் எனவும், தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் ஞானம் எனவும் நூல்கள் நவிலும். இவரைத் தென்முகக் கடவுள் என்பர். 'ஆலமர் செல்வர்' என்று சங்க நூல்கள் இவரைக் குறிப்பிடுகின்றன. தட்சிணாமூர்த்தியே எல்லாக் கலைகளுக்கும் ஞானங்களுக்கும் உரிய தலைவராவர். வியாக்கியான தட்சிணாமூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தி, வீணாதட்சிணாமூர்த்தி, மேதா தட்சிணாமூர்த்தி எனப் பல்வேறு நிலைகளிலும் வடிவங்களிலும்

பெரியோர்கள் இவரைப் போற்றுவர், "ஏரிசையும் வடவாலின் கீழிருந்து அங்கு ஈரிருவர்க்கு இரங்கி நின்று நேரிய நான்மறைப் பொருளை உரைத்து ஒளிசேர் நெறி அளித்தோன் நின்ற கோயில்" எனவும், "அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு மொழிந்த வாயான் முக்கண் ஆதி மேயது முதுகுன்றே" எனவும் வரும் திருமுறைப் பாடல்கள் போல்வன, வியாக்கியான தட்சிணாமூர்த்தியைக் குறிப்பிடுவனவாகும். "ஓதத்து ஒலிமடங்கி, ஊருண்டு ஏறி ஒத்துலகம் எல்லாம் ஒடுங்கியபின், வேதத்து ஒலி கொண்டு வீணை கேட்பார் வெண்காடு மேவிய விகிர்தனாரே" என்றாற் போல்வன, வீணா தட்சிணாமூர்த்தியைக் குறிப்பனவாகும்.

மனித குலத்தின் விழுமிய பெருஞ் செல்வமாக விளங்கும் சிந்தனைத்திறன், சிந்தித்து உணரவல்ல உரிமைச் சிறப்பு, சிந்தித்து உணர்வதனால் விளையும் தெளிவு நலம், மோன வரம்பாகிய ஞான நலம், முதலிய அரிய பல நுட்பக் குறிக்கோள்களைத் தட்சிணாமூர்த்தம் தக்காங்கு விளக்கிக்கொண்டு தனிப்பெருஞ் சிறப்புடன் திகழ்கின்றது.* எல்லாச் சைவத் திருக்கோயில்களிலும் கருவறையின் தென்புறச் சுவரில் ஒரு மாடத்தில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியிருப்பார். ஞான நன்னெறியில் வேட்கை உடையவர்கள் இவரை வழிபடு கடவுளாகக் கொண்டு போற்றுவர். வேதாந்த சித்தாந்த சமரச வித்தக ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகள், "சிரகிரி விளங்கவரும் தட்சிணாமூர்த்தியே சின்மயானந்த குருவே" என இவரைப் போற்றித் துதித்திருத்தல் காணலாம். ஆலங்குடி (திருஇரும்பூளை) என்னும் தலத்தில் தட்சிணாமூர்த்தி பெருஞ்சிறப்பு நிலையில் போற்றப்படுகின்றார்.

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைமலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை அலது, உளம் சிந்தி யாதரோ

—கச்சியப்ப முனிவர்

*"The picture of Siva as Dakshinamurthy, Buddha and hundreds of other saints illustrate the truth grasped by Plato and Aristotle also, that the supreme end of man is contemplation, the freedom and the peace of understanding".

—Dr. S. Radhakrishnan.

## (20) நீலகண்டர் :

சிவபெருமானின் சிறந்த அருளின் திறனைத் தெளிவுற விளக்குவது திருநீலகண்டர் என்னும் திருவுருவமாகும். பிறர் நலம்பெறுதலை விரும்பித் தன்னலம் துறப்பவரே, சிறந்த பெரும் சான்றோர் (உத்தமர்) ஆவர்.* உலக உயிர்களெல்லாம் அழிவு எய்தாதபடி, எல்லையற்ற தனது பேரருளின் பெருக்கால் ஆலாலம் என்னும் கொடிய நஞ்சினை விரும்பி ஏற்று உண்டருளிய நிலையிலேயே, சிவபெருமான் திருநீலகண்டர் எனப் போற்றப்படுகின்றார். "ஆலாலம் உண்டிலனேல், அன்று அயன்மால் உள்ளிட்ட மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ" என்பது திருவாசகம். "விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும் உண்ணாத நஞ்சு உண்டு இருந்து அருள் செய்குவாய்" என்பது சிலப்பதிகாரம். "கறை மிடறு அணியலும் அணிந்தன்று; அக் கறை பதினெண்கணனும் ஏத்தவும் படுமே" என்பது புறநானூறு. இத்திருவுருவையே இடைவிடாது தியானித்தும் துதித்தும் வழிபட்டு அருள் பெற்றவர் திருநீலகண்ட நாயனார். திருஞானசம்பந்தரும் இத்திருவுருவைப் பெரிதும் விதந்து போற்றித் திருநீலகண்டப்பதிகம் ஒன்று அருளிச் செய்துள்ளார். எல்லாச் சைவத் திருக்கோயில்களிலும் நிகழும் பிரதோஷதரிசனம் என்னும் நிகழ்ச்சி, இத்திருவுருவத்தின் அருட்சிறப்பை நினைவு கூர்ந்து போற்றுவதே யாகும்.

## (21) வீரபத்திரர் :

பிரமதேவனின் புதல்வனாகிய தக்கன் என்பவன் சிவபெருமானை நிந்தித்தும், அவருக்குரிய அவிப் பாகத்தினைக் கொடாமல் புறக்கணித்தும், அவரை இகழ்ந்து ஒரு பெரும் வேள்வியைச் செய்ய முற்பட்டான். அகந்தை

*"Suffering rinses our spirit clean. According to Hindu mythology, the God Siva undertakes himself to swallow the poison which comes up when the ocean is churned. The God of the Christians gave his son in order to save mankind. Even if they are myths, why should they have arisen if they did not express some deep-seated intuitions in men. The more you love, the more you suffer. Infinite love is, infinite suffering.

—Dr. S. Radhakrishnan
Religion as Life in God.

யின் மேலீட்டால், அங்ஙனம் அவன் தொன்று தொட்டு நிகழ்ந்து நிலவிவரும் சான்றோர்களின் ஒழுகலாற்று வரம்பினைக் கடந்து, தக்கன் செய்த வேள்வியினை அழித்து, அவனைத் தன் மறக் கருணையினால் ஆட்கொள்ளுவதன் பொருட்டுச் சிவபெருமான் தோற்றியருளிய மைந்தரே வீர பத்திரர் எனப்படுவார். விநாயகர் முருகர் என்பவர்களைப்போல, வீரபத்திரரும் சிவபெரு மானின் வேறு அல்லாத, சிறப்பினரே யாவர். தத்தம் செயல்களில் வீரமும் வெற்றியும் வேண்டு வோர், வீரபத்திரரை வழிபட்டுப் போற்றுவர். இலிங்காயதர் என்னும் வீரசைவப் பெருமக்கள், வீரபத்திரரைச் சிறப்பாகப் போற்றி வழிபடுவர்.

விண்பட்ட பூதப்படை
வீர பத்திரரால்
புண்பட்டவா பாடிப்
பூவல்லி கொய்யாமோ!

—மணிவாசகர்

## (22) சங்கர நாராயணர்:

இந்நாளில் சிவநெறி, திருமால்நெறி என வேறு வேருக விளங்கும் நெறிகள் இரண்டும், பண்டைக்காலத்தில் ஒரு கொடியிற் பூத்த இரு மலர்கள் என ஒன்றித் திகழ்ந்தன. இத்தகைய சைவ வைணவ சமரச ஞானச் சான்றுண்மை நெறியினை அனைவர்க்கும் உணர்த்தும் முறை யில், அழகுற அமைந்து விளங்குவதே, சங்கர நாராயணர் என்னும் திருவுருவமாகும். இத் திருவுருவைக் "கேச வார்த்தர்" எனவும் நூல்கள் குறிப்பிடும். வலப்புறத்தில் செந்நிறம் வாய்ந்து மழுப்படையும் அபயகரமும் தாங் கிச் சிவபெருமானும், இடப்புறத்தில் நீல நிறங் கொண்டு சக்கரப் படையும் வரதகரமும் ஏந்தித் திருமாலும், ஓர் உடலாக இயைந்து திகழுவதே சங்கரநாராயணர் திருவுருவம் எனப்படும். அக நானூறு என்னும் பண்டைச் சங்ககால நூலில்,

"வெருவரு கடுந்திறல்
இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த
தோற்றம் போல
அந்தி வானமொடு
கடல்அணி கொளாஅ
வந்த மாலை............"

எனவரும் வரிகளில் இத்திருவுருவம் சிறப்பாகக் குறிப்பிட்டுப் போற்றப்படுகின்றது. "பொன் திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும், நின்றுலகம் தாய நெடுமாலும், என்றும் இருவர் அங்கத்தால் திரிவரேனும், ஒருவன் ஒருவன் அங்கத்து என்றும் உளன்" என்று பொய்கை யாழ்வாரும் இத்திருவுருவைப் புகழ்ந்து போற்றி யருள்கின்றார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சங்கரநாராயணர் கோயில் என்னும் தலத்தில், இத்திருவுருவம் சிறப்பாகப் போற்றப் படுகின்றது.

## (23) எக்ஞேசுவரர்:

எக்ஞம் என்பது வேள்வி எனப் பொருள் படும். உலக உயிர்களுக்குப் பயன்படும் நல்ல அறச் செயல் எதுவும் வேள்வி எனப்படும். திருவள்ளுவர் விருந்தோம்புதலை வேள்வி என்று குறிப்பிட்டிருத்தல் காணலாம். இறைவனை வழி படுவதற்குக் கன்மவேள்வி தவவேள்வி செப வேள்வி தியானவேள்வி என்னும் பல வேள்வி களைச் சமய நூல்கள் கூறுகின்றன. இத் தகைய வேள்விகளுக்குத் தலைவராய் அவற்றின் பயனை அளிக்கின்ற நிலையில் விளங்குபவர் எக்ஞேசுவரர் எனப்படுவர். அவர் கருணை பொங்கித் ததும்பும் திருமுகங்கள் இரண்டும், திருவடிகள் மூன்றும், கூரிய நீண்ட கோடுகள் நான்கும், வழிபடும் அடியவர்களின் மலங்களைப் போக்கியருள்கின்ற திருக்கைகள் ஏழும் உடையவராக விளங்குவார்.

## (24) உக்கிரர்:

இறைவன் கருணையே திருவுருவமானவன். அவனது கருணை அறக்கருணை என்றும், மறக் கருணை என்றும் இருவகைப்படும். அறக்கருணை யாவது அன்பர்களை விரும்பி ஏற்று, அவர்கள் விரும்பும் நலங்களை எல்லாம் அளித்துக் காத்து அருள் புரிதல். மறக்கருணையாவது, கொடிய வர்களைத் தண்டித்துத் திருத்தி ஆட்கொண்டு அருள்புரிதல். இங்ஙனம் கொடுமை அல்லது தீமைகள் உலகிற் பரவிப் பெருகாமல் அழித் தொழித்து உயிர்களைக் காப்பாற்றியருள்பவர், உக்கிரர் எனப்படுவார். இவர் கொக்கின் வடிவம் கொண்ட குரண்டன் என்னும் அசுரனை அழித்தருளியவர். இவர் நான்கு தோள்களும், மூன்று கண்களும் உக்கிரமான தோற்றமும் உடையவர். பாம்பை அரை ஞாணாக அணிந்து, கையில் கபாலம் ஏந்திச் சிவந்து சுருண்ட தலைமுடியை உடையவராய், வெண்ணிறத் திருமேனி வாய்ந்தவராய், சிங்கத்தின் தோலை மேலாடையாகத் தரித்து வெண்தலை மாலைகள் அணிந்து, தண்டாயுதம் ஏந்தி, கூரிய கோரைப்

பற்களை உடையவராய், தலையில் கொக்கின் இறகணிந்து, அச்சுறுத்துகின்ற உங்கார ஒலி செய்பவராய்,வீர நகை புரிந்துகொண்டு அருளானந்த நடனம் புரிபவராய் விளங்கியருள்வார்.

## (25) ஆபற்சகாயர் :

இறைவன் தன்னைத் தொழுபவர்களின் துயரங்களைப் போக்கிக் காத்தலையே, தனக்குரிய தொழிலாகக் கொண்டவன். தன்னுடைய அடியவர்களுக்கு இடுக்கண் (ஆபத்து) நேருங்காலங்களிலெல்லாம், துணை புரிபவர் (சகாயர்) ஆக எழுந்தருளி இடர்களைந்து அருள்புரியும் கடப்பாடு மேற்கொண்டு திகழ்பவர் ஆபற்சகாயர் எனப்படுவர். விநாயகர் முருகர் திருமால் பிரமன், மாகேசுவரி நாராயணி கௌமாரி இந்திராணி காளி அபிராமி வாராகி என்னும் ஏழு மாதர்கள், ஒன்பது கோள்கள், முனிவர்கள், ஆகியோர் அருகே சூழ்ந்து நிற்க, அழகிய பொற்றவிசின் மீது வீற்றிருந்து அருள்பவர், ஆபற்சகாயர் என நூல்கள் நுவலும்.

இவ்வாறே, இலிங்கோற்பவர் சோதிலிங்கேசுவரர் கங்காளர் காலபைரவர் இலகுளீசர் சலந்தராரி அந்தகாரி கவுரிவரப்பிரதர் அசுவாருடர் வடுகர் பைரவர் பாசுபதேசுவரர் சதாசிவர் ஏகபாதர் திரிபாதர் சுரகரேசர் கிராதர் கசாந்திகர் முதலிய, எத்தனையோ பல திருவுருவங்களில், சிவபெருமான் விளங்கியருள்வார் எனச் சமய இலக்கியங்கள் சாற்றுகின்றன.

## முடிவுரை :

சமயம் என்பது தத்துவம் சடங்கு புராணம் என்னும் மூன்று கூறுகளைக் கொண்டதாகும். எல்லாச் சமயங்களிலும் இம் மூன்று கூறுகளும் அமைந்து காணப்படும். இம் மூன்றனுள் ஒன்று குறையினும், சமய இயல்பு நிறைவு பெறுவதில்லை. உலக மக்கள் பலவேறு மனநிலையும் இயல்புகளும் வாய்ந்தவர்கள் ஆதலின், அவர்கள் அனைவரின் மனப்பான்மையையும் ஈர்த்துக் கவர்ந்து நலம் பயக்கும் வகையில், சமயத்தில் இம் முத்திறக் கூறுகளும் அமைந்திருக்கின்றன. அறிவு நலன் மிக்கு முதிர்ந்தவர், சமய தத்துவ நுட்பங்களை உணர்ந்து இன்புறுவர். இடைநிலையினர், சடங்குகளிலும் கிரியைகளிலும் ஈடுபட்டுப் பழகி மனப்பக்குவம் எய்துவர். தத்துவ நுட்பங்களையும், கிரியைகளின் செயல்முறைப் பயன்களையும், எளிய மக்களும் இனிதுணர்ந்து கொள்ளும்படி, கற்பனையும் கவினும் அமையச் சுவைமிக விளக்குவன புராணங்கள் ஆகும். தத்துவம் சடங்கு புராணம் என்பன மூன்றும், சமயத்துறையில் தம்முள் ஒன்றையொன்று இன்றியமையாதனவாகத் திகழ்கின்றன.

மேற்கூறிப் போந்த சிவபெருமான் திருவுருவங்கள், இம்மூன்றிற்குமே உரியனவாக விளங்குகின்றன எனலாம். தமிழ்நாட்டுக் கோயில்களில் அழியாக் கலைப் பெருஞ்செல்வங்களாக அமைந்து திகழும் அரும் பெரும் சிற்ப அமைப்புக்களின் அழகைக் கண்டுணர்ந்து மகிழ்வதற்கு, இத்திருவுருவங்களைப் பற்றிய குறிப்புக்கள் பெரிதும் பயன்படும். “இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே” என்று சொல்லப்பெற்ற, இறைவனின் திருவுருவங்களை எழில்மிக்கவகையில் இனிது வடித்துக் காட்டுகின்ற, ஒப்புயர்வற்ற சிறந்த சிற்பக் கலையின் திறனும் பயனுமாக விளங்கும் இன்னோரன்ன தெய்வத் திருவுருவங்களின் சிறப்பும் நுட்பமும் தெரிந்து தெளிந்து, நாம் அனைவரும் நலம்பல பெற்று இன்புற்று வாழ்வோமாக!

---

“Myths could not be discarded without taking the heart out of the faiths whose essence the myths conveyed. All the sweetness of religion was conveyed to the world by story tellers and image-makers. Without their fiction, the truths of religion would be neither intelligible nor ever apprehensible, and the prophets would prophesy and teachers teach in vain. Myths and icons were indispensible for expressing as much as we could of the ineffable.”

—Dr. K. M. Munshi.

# அடியார் பெருமை

திரு.. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S.

ஆணையாளர், அறநிலையத்துறை.

உலகில் கல்வி செல்வம் புகழ் பதவி முதலிய வற்றால் பெருமை பெற்றோர்கள் பலர் இருப் பினும், அவர்கள் எல்லோரையும்விடப் பெருமை மிக்கவர் அடியவரே யாவர். எல்லோருடைய பெருமையினையும்விட மிக மேலானது, அடி யார் பெருமையேயாகும். கடவுள் எல்லாப் பெருமையும் உடையவரே ஆயினும், அவரை யும்விட மிக்க பெருமையுடையவர்கள் அடிய வரேயாவர். அடியார்களின் பெருமைக்கு நிக ரான பெருமை வேறு எதுவும் இல்லை.

அடியார்களின் பெருமை எத்தகையது என்பதனை, எளிய குழந்தைகளும் எண்ணி உணரும்படி, ஔவைப் பிராட்டியார் அழகுற அருளிச் செய்திருக்கின்றார். "எல்லாவற்றிலும் மிக மிகப் பெரியது இவ்வுலகம்". இவ்வுல கமோ நான்கு முகங்களையுடைய பிரமதேவ னின் படைப்பு. பிரமதேவனோ திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றியவன். அத்திரு மால் திருப்பாற் கடலில் பள்ளி கொள்பவர். அக்கடலோ அகத்திய முனிவரின் உள்ளங் கையில் அடங்கியது. அவ் அகத்தியரோ கும்பம் அல்லது குடமாகிய கலசத்தில் பிறந்தவர். கலசமோ உலகின் ஒரு சிறு கூறு கிய மண்ணிலிருந்து தோன்றியது. அவ்வுல மோ, ஆதிசேடனுகிய அரவின் ஆயிரம் தலை களுள் ஒரு தலையால் சுமக்கப்படுவது. ஆதி சேடனோ, உமாதேவியார் தம் சிறு விரலில் அணியும் மோதிரம். அவ் உமாதேவியோ, சிவ பெருமானின் ஒரு பாகத்தில் ஒடுங்கியிருப் பவள். அந்தச் சிவபெருமானும் தொண்ட ராகிய அடியார்களின் உள்ளத்தில் ஒடுங்கி யிருப்பவர். இவ்வாறு எல்லோரினும் பெரி யோராகிய கடவுளையே தம் உள்ளத்தில் எழுந் தருளி ஒடுங்கியிருக்குமாறு செய்யும் அடியார் களின் பெருமை, நம்மால் சொல்லி அளவிட முடியாததாகும்.

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது.
புவனமோ நான்முகன் படைப்பு.
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்.
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன்.
அலைகடல் குறுமுனி அங்கையி லடக்கம்.
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்.
கலசமோ புவியிற் சிறுமண்.
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்.
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்.
உமையோ இறைவர்தம் பாகத்தொடுக்கம்.
இறைவரோ தொண்டர் உள்ளத்
[தொடுக்கம்.
தொண்டர்தம் பெருமை சொல்லவும்
[பெரிதே"

எனவரும் ஔவைப் பிராட்டியாரின் பாடல், அடியார்களின் அளப்பரிய பெருமையினை மிக வும் அழகுறச் செவ்விதின் விளக்கியிருத்தல் காணலாம்.

இறைவனுடைய திருவடியையே, தமக்குரிய புகலிடமாகவும் அடைக்கலமாகவும் சிக்கெனப் பற்றிக்கொண்டு, அடைந்திருப்பவர்கள் யாரோ அவர்களுக்கே அடியார்கள் என்று பெயர். ''அடி ஆர்பவரே அடியவர் ஆமால்'' என்பது திருமூலர் திருமந்திரம். தொண்டர் சான்றோர் பக்தர் சங்கமர் நீத்தார் சரணர் என்னும் பல சொற்களும் அடியார்களையே குறிக்கும். இறைவனுக்கும் அவனால் படைக்கப்பெற்ற அடியார்களுக்கும் பலவகையான இனிய தொண்டுகளைச் செய்பவர்கள் தொண்டர்; சால்பு என்னும் பலவகையான சிறந்த குணங்களால் நிறைந்தவர்கள் சான்றோர்; இறைவனிடத்தில் எல்லையில்லாத அன்பாகிய பக்தியினை உடையவர்கள் பக்தர்; இறைவனைத் தம் உள்ளமாகிய கோயிலில் எழுந்தருளுவித்து, அவன் அருளை உலகம் எங்கணும் இயங்கிப் பரவச் செய்து வருபவர்கள் சங்கமர்; இறைவன் அருளைப்பெறுவதற்காக உலகப் பற்றுக்களையெல்லாம் நீத்து ஒழித்தவர்கள் நீத்தார்; இறைவனின் திருவடி யாகிய சரணத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு, அவனது அருளின் பெருமையைப் பல இடங்களிலும் சென்று சரித்துப் பரப்பி வருபவர்கள் சரணர் எனப்படுவர். இச் சொற்களினால் அடியார்களின் பலவகை இயல்புகளும், செயல்களும் விளக்கப் பெறுதல் காணலாம்.

திருவள்ளுவர் தமது ஒப்புயர்வற்ற திருக்குறளில் அடியார்களின் பெருமையினை 'நீத்தார் பெருமை' என்று குறிப்பிட்டு விளக்கியிருக்கின்றார். அடியார்களைத் திருவள்ளுவர் ஒழுக்கத்து நீத்தார், இருமைவகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார், 'செயற்கரிய செய்வார், நிறைமொழி மாந்தர், 'குணமென்னும் குன்றேறி நின்றார், 'அந்தணர் அறவோர்' எனப் பலவகைகளால் குறிப்பிட்டு அருளிச் செய்கின்றார். உலகப் பற்றுக்களை யெல்லாம் துறந்த அடியார்களின் பெருமையினை அளவிட்டுக் கூறுதல் இயலாது என்பதனை,

''துறந்தார் பெருமை
துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்
கொண்டற்று''

எனத் திருவள்ளுவர் கூறியிருத்தல் காணலாம். இவ்வுலகத்தில் இதுகாறும் பிறந்து இறந்தவர்களை எங்ஙனம் எண்ணிக் கூறுதல் இயலாதோ அங்ஙனமே, அடியார்களின் பெருமையினை அளவிட்டுக் கூறுதல் இயலாது என்பது கருத்து.

இக் கருத்தினையே வேறொரு வகையில் உமாபதி சிவம் என்னும் சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ''கருங்கடலைக் கையால் நீந்திக் கடப்பதும் எளிது: கடற்கரையின் நொய் மணலை எண்ணி அளவிட்டாலும் அளவிடலாம். கடலில் அடுத்தடுத்து மாறிமாறி எழுந்து தோன்றும் அலைகளையும் ஒன்று இரண்டு என்று எண்ணிக் கூட்டிச் சொல்லிவிடலாம். கடலிலுள்ள மீன்களையும் அளவிட்டு விடலாம். ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களையும் அளவிட்டு விடலாம்: ஆனால் அடியார்களின் பெருமையினை அளவிட்டுக் கூறுதல் ஒரு சிறிதும் இயலாது. அடியார்களின் பெருமையைச் சேக்கிழார் பெருமான் ஒருவர் கூற முடியுமே ஒழிய, தேவர்களாலும் அதனைக் கூறுதல் இயலாது'' என்னும் கருத்தினைப் பின்வரும் பாடல் விளக்குகின்றது.

''கருங்கடலைக் கைநீத்துக்
கொளல்எளிது; முந்நீர்க்
கடற்கரையின் நொய்மணலை
எண்ணிஅள விடலாம்.
பெருங்கடல்மேல் வருந்திரையை
ஒன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடை இலக்கம்
பிரித்துவிட லாகும்.
கருங்கடலில் மீனைஅள
விடலாகும்; வானத்
தாரகையை அளவிடலாம்;
சங்கரன்தாள் தமது
சிரங்கொள்திருத் தொண்டர்புரா
ணத்தைஅள விட, நம்
சேக்கிழார்க் கெளிதலது
தேவர்க்கும் அரிதே''

எனவரும் சேக்கிழார் புராணப் பாடலால், அடியார்களின் பெருமை எத்தகையது என்பதனை யாவரும் எண்ணி உணரலாம்.

இத்தகைய அடியார்களின் பெருமையினைத் திருவாரூர்த் தியாகராசப் பெருமான் சுந்தர

மூர்த்தி சுவாமிகளுக்குப் பின்வருமாறு கூறி உணர்த்துகின்றார்.

''பெருமையால் தம்மை ஒப்பார்;
பேணலால் எம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார்;
ஊனமேல் ஒன்றும் இல்லார்;
அருமையாம் நிலையில் நின்றார்;
அன்பினால் இன்பம் ஆர்வார்;
இருமையும் கடந்து நின்றார்;
இவரைநீ அடைவாய் என்றார்''.

என்பது பெரியபுராணம்.

இங்ஙனம் சிவபெருமான், அடியார்களின் அளப்பரிய பெருமையினை விளக்கியருளிய பின்பே, சுந்தரமூர்த்தி சுவாமிகள். ஞாலம் உய்ய, நாம் உய்ய, நம்பி சைவ நன்னெறியின் சீலம் உய்ய, மூலமான திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந் தருளிச் செய்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத் தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, சேக் கிழார் பெருமான் இயற்றிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் ஆகிய மூன்றிலும், அடியார்களின் பெருமையினை விரிவாக அறிந்து கொள்ளலாம்.

சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் தலைசிறந்ததாகிய, சிவஞான போதத்தின் பன்னிரண்டாம் சூத்திரத்திலும், அடியார்களின் பெருமை விளக்கப்பட்டுள்ளது.

''செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே''

என்னும் சிவஞான போதத்தின் சூத்திரம், நாம் அடியார்களாகிய அன்பர்களுடன் மருவிச் சேர்ந்து பழகுதல் வேண்டும் எனவும், அடியார் களை ஆண்டவன் எனவே மதித்து வணங்கிப் பணிதல் வேண்டும் எனவும், கூறியிருத்தல் காணலாம்.

இவ்வாறே, சிவஞான சித்தியார் எனும் நூலும், ஆண்டவனுக்குச் செய்யும் பக்தியை விட அடியார்களுக்குச் செய்யும் பக்தியே மேலானது என்றும், அடியவர்களிடம் அன்பு இல்லாவிட்டால் ஆண்டவனிடத்து அன்பு செலுத்தியும் பயனில்லை என்றும், அடியார்கள் இடைவிடாது எப்பொழுதும் இறைவனை நினைத்துச் சிவோகம்பாவனை செய்வதனால் சிவ னேயாவார்கள் என்றும் கூறுகின்றது. ''அடிய வர்க்கு அன்பில்லார் ஈசனுக்கு அன்பில்லார்'' ''திருவேடம் சிவனுருவேயாகும்'' 'சிவோகம் பாவிக்கும் அத்தால் சிவனுமாவர்'' எனவரும் சிவஞான சித்தியார் செய்யுட்கள் அடியார் களின் பெருமையினைச் சிறப்புற விளக்கு கின்றன.

சேக்கிழார்பெருமான், பெரிய புராணத்தில் திருக்கூட்டச்சிறப்பு என்னும் பகுதியில், அடி யார்களின் பெருமையினைப் பின்வருமாறு விளக்குகின்றார். அடியவர்கள் இறைவன்பால் எல்லையில்லாத அன்புடையவர்கள். இறை வனைச் சிறிதும் மறவாமல் சிந்தையில் நினைந்து உருகுபவர்கள். தம் உள்ளம் உரை உடல் என்னும் முக்கரணங்களாலும் இறைவனுக்குத் தொண்டு புரிபவர்கள். ஒழுக்க நலத்தாலும், தவ நலத்தாலும், அவர்களின் உடல் மாசிலாத மணிதிகழ் மேனியாக விளங்கும். அதன்மேல் பூசுகின்ற திருநீறு போல, அவர்களின் உள்ள மும் தூய்மையுற்றுப் புனிதமாகத் திகழும். ஐம்பெரும் பூதங்களும் கலங்கி நிலைமாறினாலும், அவர்கள் இறைவனை மறக்கமாட்டார்கள். எவ்வளவு சோதனைகள் நேரினும் தம் அன்பில் உறுதியுடையவர்களாக இருப்பார்கள். குற்ற மற்ற குண மலையாக விளங்குவார்கள். ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும் இயல்புடைய அவர்களுக்குக் கேடும் ஆக்கமும் சிறிதும் இல்லை. இறைவனைக் கும்பிடுதல் ஒன்றே அவர்களின் குறிக்கோளும் இன்பமு மாகும். ஆதலால் மோட்சமாகிய வீடுபேற்றை யும் அவர்கள் ஒரு பொருளாக விரும்பமாட் டார்கள். உருத்திராக்கக் கண்டிகையே அவர் கள் அணியும் மாலையாகும். கந்தையே அவர்கள் உடுக்கும் ஆடையாகும். இறைவ னின் தொண்டைத் தவிர வேறு எதிலும் அவர் கள் ஈடுபடமாட்டார்கள். அவர்கள் ஈர அன்பி னர். யாதும் குறைவிலார். அவர்களின் வீர மும் பெருமையும் விளக்குதல் அரிது.

இத்தகைய அடியார்களின் பெருமையை உணர்ந்தே, எல்லாச் சமயங்களிலும் அடியார் களின் பெருமையும் சிறப்பும் வழிபாடும் வற்

புறுத்தப்படுகின்றன. கடவுள் இயல்பு பற்றிய கருத்து வேறுபாடுகள் பலவகைச் சமயங்களி லும் உண்டு எனினும், அடியார்களின் பெருமை யினை எல்லாச் சமயங்களும் ஒருமுகமாக ஏற்றுக் கொள்ளுகின்றன. மாணிக்கவாசகர் தாம் அடியார்களின் நடுவில் இருக்கும்படி தமக்கு இறைவன் அருள்செய்தல் வேண்டும் என வேண்டிக் கொள்ளுகின்றார். பல பசுக்கள் கூடியுள்ள ஒரு பெரிய மந்தையில், ஒரு குருட்டுப் பசு இருப்பின், அது மற்ற பசுக் களின் கூட்டத்தில் கலந்து கொண்டு புல் வெளிக்குச் சென்று புல்மேய்ந்து திரும்பி வரும். அதுபோல அடியார்களின் நடுவில் இருந்தால் அவர்கள் எய்தும் நலங்களை நாமும் அடைந்து விடலாம். அதனாலேயே அடியார்களின் நடு வேயிருக்கும்படி தமக்கு அருள்புரியுமாறு மாணிக்கவாசகர் இறைவனை வேண்டுகின்றார்.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம்பலத்துஎம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே"

என்பது திருவாசகம். இதனால் அடியார்களின் கூட்டுறவினால் ஏற்படும் நன்மையினை நாம் நன்குணரலாம். எனவே, அடியார்களின் அள வில்லாத பெருமையை உணர்ந்து, அவர் களுடன் கூடிப் பழகி அன்பு பாராட்டி, நாம் இன்புற்று வாழ முயலுவோமாக!



மாயூரம் வட்டம், எண் 2 ரோடு, ஸ்ரீ பிரசன்ன மாரியம்மன் ஆலயக் கும்பாபிஷேக விழாவில், தஞ்சைத் துணை ஆணையர் திரு. V. S. கோதண்டபாணி, B.Sc., B.L. அவர்களும், நாகை உதவி ஆணையர் திரு. பெ. புலியூருடையான் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல். (11—7—71)

# திருமுறை அருச்சனை

**திரு. மா. வெ. மு. நாகராஜ குருக்கள்**

சிறுதையூர், லால்குடி.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தெய்வத் தமிழ்த் திருமுறைகளினுல் அருச்சனைகள் செய்வதைப் பக்தியிற் சிறந்த பெருமக்கள் விரும்பி வரவேற்க வேண்டுவது அவசியமாகும். அருச்சனை என்பது நன்மக்கள் தம் பேரன்பினை இறைவன்பால் தெரிவிக்கும் சாதனமேயாகும். சமயத் தொடர்புள்ள பழக்க வழக்கங்களை—சடங்குகளை நன்கு ஆராய்ந்து பார்த்தால், தூய அன்பு வெளிப்படுவதற்குரிய நெறிமுறைகள் நிரம்பியிருப்பதை உணரலாம். அருச்சனை எனும் கிரியை (செயல்), தெய்வச் சிந்தனைகளால் - மந்திரமொழிகளால் - பணிவுச் செயல்களால்-நன்கு உழுது வைக்கப்பட்ட வயல் ஆகும். இவ் வயலிலே தெளிக்கின்ற வித்து அன்பாகும். இதையே மாணிக்க வாசக சுவாமிகள் ''அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டு'' என்று அருளுகின்ருர்கள். சமயப் பற்று மிக்க நல்ல மனிதனுடைய அறப்பண்பு களையும் அறச்செயல்களையும் அருள்நந்தி சிவாசாரியர் வரிசையாகக் குறிப்பிட்டுக் காட்டும்போது ''அறிவொடு அர்ச்சனை'' பற்றி மிகத் தெளிவாகக் குறித்துள்ளார்கள்.

சிவஞான சித்தியார் என்னும் நூலின்கண், அவர் பின் வருமாறு குறிப்பிட்டிருக்கின்ருர்.

''ஒழுக்கம் அன்பருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம்
அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்க ளானல்
இரங்குவான் பணி அறங்கள்''

''ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம், குற்றமற்ற தவம், தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை அழுக்கற்ற துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆகிய இவைகள், இழுக்கில்லாத அறங்கள் (தர்மங்கள்) ஆகையால், இவ்வறப்பணிகளைச் செய்பவர்களிடம் இறைவன் இரங்கி அருள் புரிவான்'' என்பது இதன் கருத்து.

இப்பாடலில் கூறப்பட்ட ஒழுக்கம் முதலிய அறப்பண்புகளும் அறச்செயல்களும் நம் தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வேரூன்றி வளர்ந்து வருகின்றன. இவற்றினைத் தவருது பேணிப் பாதுகாப்பதற்காகவே அறநிலையங்கள் அமைந்துள்ளன. இங்ஙனம் தெய்வத் தொடர்புள்ள அறங்களில் தனிச்சிறப்புடைய அறிவொடு அருச்சனைபற்றி அடுத்த பாடல் கூறுவதாவது :—

''மனமது நினைய வாக்கு
வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையில் கொண்டங்கு
இச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றிவாழும் செயல்
அறமானல் யார்க்கும்
முனமொரு தெய்வம் எங்குஞ்
செயற்கு முன்னிலை யாமன்றே''

''நாம் விரும்பிய தெய்வத்தை மனத்தால் நினைந்து, வாக்கினுல் மந்திரங்கள் சொல்லி வணங்கிக் கையில் நறுமணமுள்ள மலர்களைக் கொண்டு போற்றி (அருச்சனை செய்து), சினம் முதலிய தீய குணங்களை அகற்றிவாழும் வாழ்க்கை அறமானல், முதல்வனுகிய சிவ பெருமான் எங்கும் அவர்கள் செயல்களுக்கு முன்னின்று நல்லருள் புரிவார்'' என்று இப்பாடலில் சொல்லியபடியே, இந்நாளில் திருக்கோயில்களில் வாயினுல் மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு, கையில் மலர்களை ஏந்தித்

தெய்வத் திருமேனிகளுக்கு அருச்சனைகள் நடைபெறுவதைக் காண்கின்றோம்.

இத்தகைய அருச்சனைகள் வடமொழியில் மட்டுமல்லாமல், நம் தாய் மொழியாகிய தமிழிலும் நடைபெற வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. 1954-ம் ஆண்டிலிருந்தே தூத்துக்குடி, ஈரோடு, அம்பாசமுத்திரம், பேரூர் ஆகிய தலத்து ஆலயங்களில் தமிழ் அருச்சனைகள் நடந்துவருகின்றன. இப்போது எல்லாக் கோயில்களிலும் தமிழ் அருச்சனை நடைபெறவும், பரவிப்பெருகவும் வகை செய்யப்பட்டுள்ளன. திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங்கள் இவற்றால் தமிழில் அருச்சனை செய்வது, சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள், சமயச் சான்றோர்கள், தமிழ்ப் பற்றுமிக்க நல்லறிஞர்கள் ஆகிய எல்லோருடைய கருத்துக்களுக்கும், பேரன்பிற்கும் ஏற்றதாகப் பொருத்தமாகவே அமைகின்றது. நமக்குப் பிரமாணமாகவுள்ள பழம்பெரும் சமய நூல்களிலேயே இதற்குப் போதிய ஆதாரங்கள், சான்றுகள் உள்ளன. எல்லாம் வல்ல இறைவனைப் பற்றிய செய்திகள், தோத்திரங்கள் சாத்திரங்கள் முதலிய நூல்களெல்லாம் வடமொழி தமிழ்மொழி ஆகிய இவ்விரண்டு மொழிகளிலும் எண்ண முடியாத அளவுக்கு, ஏராளமாக உள்ளன. இதன் காரணமாகவே தமிழாகமம் அருளிய திருமூலர் பெருமான்,

''தமிழ்ச் சொல்வட சொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலுமாமே''

என்று தமது திருமந்திரத்தில், தமிழ் மொழி-வடமொழி என்னும் இவ்விரண்டு மொழிகளுமே, இறைவனைப் பற்றி உணர நமக்கு வேண்டுவனவாகும் என்ற கருத்தை உணர்த்தியுள்ளார்.

மேலும் திருமூலரடிகள் ''செந்தமிழ் முதலியவற்றை நன்கு அறிந்து தெளிந்து வழிபாடு செய்தல் வேண்டும், இதனை நந்தி (சிவபிரான்) உரைத்தார் எனவும், தமது திருமந்திரத்தில் சொல்லியுள்ளார்.

''செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடும்
நந்தி இதனை நவமுரைத் தானே''

—திருமந்திரம் 1089

திருக்கோயில்களில் அருச்சனை செய்பவர்கள், தமிழின் தொன்மையையும் தெய்வத் தன்மையையும் நன்கு அறிதல் வேண்டும். இருக்கு முதலிய நான்கு வேதங்களை எவ்வாறு தெய்வ வழிபாட்டிற்கு உரியனவாகப் போற்றுகின்றோமோ, அவ்வாறே தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களையும், சிவபெருமான் விரும்பிக் கேட்ட, சிவ சம்பந்தமுள்ள வாக்குகள் எனக் கருதிச் சிவாசாரியர்கள், அவற்றினை வணங்கி வழிபட்டுச் சிவார்ச்சனைக்குரியனவாகப் போற்றிவருதல் வேண்டும்.



தெய்வச் சேக்கிழார் பெருமான் தமது பெரிய புராணத்திலே, திருஞான சம்பந்த சுவாமிகளை ''வண்தமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்'' எனவும், ''புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரனார்'' எனவும் குறிப்பதிலிருந்து, தேவாரம் தமிழ் வேதம் என்பதை நன்கு உணரலாம். சம்பந்தர் அப்பரடிகளுடன் திருமறைக்காடு கோயிலுக்குச் சென்றது பற்றித் தெரிவிக்கும்போது சேக்கிழாரடிகள், திருநாவுக்கரசரைத் ''தமிழ் மொழித் தலைவர்'' என்றே குறிப்பிடுகின்றார். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தைச் சிதம்பரம் நடராசமூர்த்தியே அந்தணராக வந்து தம் கரங்களால் திருவாசகம் முழுமையும் எழுதித் ''தில்லைச் சிற்றம்பலவன்'' என்று கையொப்பமிட்ட திருவாசகச் சுவடியைக் கோயிற்படியின்மீது வைத்துவிட்டு மறைந்ததாக மணிவாசகர் வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. எனவே, சிவபெருமானிடம் இடையறாத அன்பு கொண்ட தமிழ் நாட்டுச் சமயச் சான்றோர்கள் அனைவரும், தேவார திருவாசகங்களைத் தமிழ் வேதமாகக் கொண்டு, அம்மறைவழி வழக்கங்களை மேற்கொண்டு வருவதனால்தான், ஆலய வழிபாடுகள் தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குகின்றன.

''வகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்'' என்று திருஞானசம்பந்தர் அருளியபடி, இறைவனால் வகுக்கப்பட்ட வடமொழிச் சிவாகமங்களிலேயே, அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமயாசாரியர் நால்வருக்கும் விசேட பூசைகள் திருவிழாக்கள் விதிக்கப்பட்டிருப்பதை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பூர்வகாரணாகமம் மகோற்சவ விதிப்படலத்திலுள்ள சுலோகம் வருமாறு :

''சம்பந்த : சுந்தரச் சைவவித்ருநாமா
த்ரயஸ்ததா பக்தயாகம் த்ரிகாலஞ்ச
த்வாதசம்பரி கீர்த்திதம்''

இதன்பொருள்: சம்பந்தர் சுந்தரர் அப்பர் என்ற மூவருக்கும் முப்போதும் பக்தயாகத்தைச் செய்து பன்னிரண்டுநாள் உத்ஸவம் (திருவிழா) கொண்டாடத்தக்கது''.

சூக்ஷ் மாகமம் பக்தோற்சவ விதிப் படலத்தில்:

''ஸ்ரீமத் வாதபுரேஜாதம்
பக்தம் தேவ்யாக்ரஹ
பிவா தேவாக்ரேவா
விசேஷண ஹஸ்தம்
புஸ்தகசம்யுதம்''
என வருகின்றது.

இதன் பொருள்: ''திருவாதவூரில் தோன்றிய பக்தராகிய மாணிக்கவாசகரைக் கையில் புத்தகத்துடன் கூடியவராகத் தேவி ஆலயத்திலோ, அல்லது சிவபெருமானின் முன்னிலேயிலோ எழுந்தருளச் செய்து, புதிய ஆடைகள் அணிவித்தும் ரட்சாசூத்திரம் சாத்தியும் சிறப்பாகப் பூசைகள் செய்யவும்''.

இவ்வாறெல்லாம் மூலாகமங்களிலேயே தமிழ் வேதம் பாடிய சமயாசாரியர்கள் நால்வருக்கும் திருக்கோயிலிலேயே சிறப்பு வழிபாடுகளும் திருவிழாக்களும் விதிக்கப்பட்டிருப்பதிலிருந்தே, தமிழ் வேத வழிபாடுகளைச் சிவபெருமான் இனிது விரும்பி ஏற்று நல்லருள் புரிவர் என்பது உய்த்து உணரத்தக்கதாகும். திருக்கோயில் வழிபாட்டு முறைகளைத் தெளிவுறக் கூறும் சிவாகமப் பொருள்களும், தேவார திருவாசகம் அருளிய நால்வர் நோக்கமும் கொள்கைகளும், சிவபெருமானையே குறிக்கோளாகக் கொண்டு, நம்மவர்களுக்கு வழிபாட்டு நெறிகளை உபதேசிக்கின்றன. சிவாலய பூசைகளில் நால்வர் பாடிய தமிழ் வேத வழக்கமும் இடம் பெற்ருல்தான், சிவாகம நெறி மேலும் சிறப்புற்று விளங்கும் என்று கருதுதல் வேண்டும். வடமொழிச் சிவாகமங்களில் சொல்லப்படுகின்ற அருச்சனை விதிகளையே, சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் ஆகிய சமயாசாரியர்கள் நால்வரும் தமிழ் மொழியில் இனிய தோத்திரங்களாகப் பாடியுள்ளார்கள்.

சிவாலய வழிபாட்டிற்கு வேண்டுவனவாகிய ஒழுக்க விதிகளில், புலர்வதன் முன் எழுந்து தண்ணீரில் மூழ்கி எழுந்து நியமத்துடன் திருநீறணிதல், திருக்கோயிலைக் கூட்டி, மெழுகிக் கோலம் போடுதல், நறுமணமுள்ள மலர்களைப் பறித்து வருதல், திருவிளக்கேற்றுதல், சிவபெருமானுக்குத் தூய்மைமிக்க தண்ணீராலும், எள்நெய், பசும்பால், நெய், தயிர் பஞ்சகவ்வியம், நெல்லிக்கனி, இளநீர் தேன் பழச்சாறுகள் சந்தனம் முதலிய பொருள்களால் இருக்கு ஓதி (மந்திரம் சொல்லி) அபிடேகம் செய்தல், ஆடை அணிகள் அணிவித்தல், சந்தனமிடுதல், பலவகை மலர் மாலைகளைச் சாத்துதல், மணமுள்ள மலர்களால் சிவபெருமான் திருநாமங்களைச் சொல்லி இறைவன் பொன்னடி போற்றுதல், நறும்புகை (தூபம்) நுகர்வித்தல், நிவேதனம் செய்தல், தீப ஒளி காட்டுதல், மனமுருகப் பாடுதல், ஆடுதல், பிழைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டுதல், திருக்கோயில் வலம் வருதல், வீழ்ந்து வணங்குதல், அஞ்சலிகூப்புதல், பஞ்சாட்சர செபம் செய்தல் முதலிய வழிபாட்டுக் கிரியைகளைச் சமயாச்சாரியர் நால்வரும் தம் தமது தேவார திருவாசகப் பாடல்களிலேயே பல இடங்களிலும் தெரிவித்துள்ளார்கள். இவ்வழிபாட்டு நெறிமுறைகளையே சிவாகமங்கள் மிக விரிவாக வகைப்படுத்தி விதிப்படிச் சொல்லுகின்றன, தேவார திருவாசகங்கள் குறிப்பாகச் சொல்லுகின்றன. சிவாகமங்களுக்கும், சைவத் திருமுறைகளுக்கும் திருக்கோயில் வழிபாட்டு முறைகளில் எவ்வித வேறுபாடும் இல்லையென்பது ஆராய்ந்து பார்ப்பவர்க்கு நன்கு புலனுகும்.

இன்று சிவாலயங்களில், பிள்ளையார் சுப்பிரமணியர் மூலவர் (சிவபிரான்) அம்பிகை, இவர்களுக்குச் செய்யப்பெறும் நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு என்ற அஷ்டோத்திரசத நாமங்களும் சிவாகமங்களில் சொல்லப்பட்டவை அல்ல. இந்த நாமாவளி அருச்சனைகள், மகரிஷிகளால் புராணங்களில் சொல்லப்பட்டனவாகும். உதாரணமாகப் பெரும்பாலும் விநாயகருக்குரிய நூற்றெட்டு அருச்சனை பவிடியோத்தர புராணத்திலும், சிவபெருமானுக்குச் செய்யப்படுகின்ற நூற்றெட்டு அருச்சனை கந்த புராணத்திலும், ஆயிரத்தெட்டு நாமாவளிகள் மகாபாரதத்திலும், அம்பிகைக்குள்ள லலிதாசகசிரநாமம் பிரம்மாண்ட புராணத்திலும் கூறப்பட்டனவாகும். இதே போலத் தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களில் சிவபெருமானைப் புகழ்ந்து பாடிய நாமாவளிகள் ஆகிய திருநாமங்களைச் சொல்லி அருச்சனை செய்வதில் தவறு ஒன்றுமில்லை.

வடமொழி நாமாவளியின் முடிவில் வரும் ''நம'' என்பதற்கு நேரான தமிழ்ச் சொல் ''போற்றி'' என்பதாகும். போற்றுதல்-தொழு

தல் என்ற சொற்கள் வணக்கத்தைத் தெரிவிப் பனவாகும். நம என்ற சொல் நமஸ்காரத்தைத் தெரிவிப்பதாகும். "அஞ்சலிமலர்த்தி முன் போற்றுங் கைகளோ" என்று சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் பாடியிருப்பதி லிருந்தும், "போற்றி" என்ற சொல் நமஸ்கார மாகிய வணக்கத்தைச் சிவபெருமான் திருவடி களில் பணிவுடன் தெரிவிப்பதே என்று தெளி தல் வேண்டும்.

எனவே திருக்கோயில்களில் அருச்சனை புரியும் சிவாசாரியர்கள், தமிழ் அருச்சனை செய் வதற்கு ஆர்வமும் விருப்பமும் மிக்குடையவர் களாக விளங்கவேண்டுவது அவசியம். மேலும் சிவாலய பூசைகளில், அபிடேகம், அருச்சனை நிவேதனம் தீபாராதனை முதலிய கிரியைகளைச் செய்யும்போதும், அன்பர்களுக்குத் திருநீறு முதலிய திருவருட் பிரசாதங்களைத் தரும் போதும், பொருத்தமாக உள்ள திருமுறைப் பாடல்களைச் சொல்லி வந்தால் கோயில் வழி பாடுகள் மேன்மேலும் சிறப்புற்று விளங்கும் இதனுல் சிவனடியார்களுக்கும், வைணவ அடி யார்களுக்கும் தமிழ்ப்பற்று மிகுந்தவர்களுக்கும் நெஞ்சு நெகிழ்ந்து, உருக்கம் மேலிட்டு, மனத் தூய்மையும், இறைவன்பால் பக்திப்பெருக்கும் ஏற்படும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், நம்பியாண் டார் நம்பிகள், அருள்நந்திசிவாசாரியர், உமா பதி சிவாசாரியார் ஆகிய சைவ சமயச் சான் ருேர்கள், திருக்கோயில் வழிபாடு செய்யும் அருச்சகர் மரபில் தோன்றியவர்களே. சோழப் பேரரசர் ஆகிய அபயகுலசேகர இராசராசன், தில்லைநடராசர் கோவிலுள் மறைந்து மண்மூடிக் கிடந்த மூவர் தேவாரச் சுவடிகளைத் திருநாரை யூர் நம்பியாண்டார் நம்பிகளைக்கொண்டே கண்டெடுத்து, ஆகம மந்திர முறைப்படி பதினெரு திருமுறைகளாக வகுக்கப்பட்ட தாகத் "திருமுறை கண்ட புராணம்" சொல்லு கின்றது. மிக்க இளமையிலேயே சிவனருள் நிரம்பப்பெற்ற நம்பியாண்டார்நம்பிகள், இயல் பாகவே தமிழ்ப் பற்றுமிகுந்தவராயும், தமிழ் வேதமுழுமையும் ஓதும் நியமமுடையவராயும் இருந்தமையால், ஞானசம்பந்தராதி சமயாசாரி யர்களின் திருவுள்ளக் குறிப்பு, நோக்கங்களைத் தெளிய உணர்ந்தவராகவும், திருத்தொண்டர் களின் வாழ்க்கை வரலாறுகளை நன்கறிந்தும் விளங்கினுர்கள் என்பதற்கு அவர்கள் பாடிய செந்தமிழ்ப் பாடல்களே இன்றும் நமக்குச் சான்ருக உள்ளன.

சகலாகம பண்டிதராகிய அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், நீண்டகாலம் புத்திர பாக்கியம் இல்லாதிருந்த அன்பர் அச்சுத களப்பாளரின் குறை தீருமாறு தேவாரப் பதிகங்களையே அருளாணையாகக்கொண்டு சுவடியில் கயிறு சார்த்திப் பார்க்க,

"பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர்
ஐயுற வேண்டாவொன்றும்
வேயனதோளுமை பங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர் தம்மைத்
தோயாவாந் தீவினையே"

என்ற சம்பந்தர் தேவாரப் பாடல், கயிற்றில் பட்டுத் தோன்ற, அச்சுத களப்பாளரை நோக்கி, "திருவெண்காட்டு முக்குளநீரில் நீராடி நியமத்துடன் சுவேதவனப் பெருமானை வழிபட்டு வரும்படிச் சொல்ல, அதன்படியே அச்சுத களப்பாளர் ஒழுகிவந்தமையால் மெய்கண்டதேவர் அவருக்குத் திருமகனுராகத் தோன்றினுர்" என்று வரலாற்றுச் செய்திகள் எடுத்துரைக்கின்றன. இதுவன்றியும் அருள் நந்திசிவாசாரியர், "சிவஞான சித்தியார்" "இருபா இருபஃது" ஆகிய சிவாகமப் பொருள் பொதிந்த சித்தாந்த சாத்திர தத்துவ நூல்களை இனிய செந்தமிழ் மொழியிலேயே இயற்றிய தோடு, தமது செய்யுட்களிலே தேவார திரு வாசகங்களிலே வரும் அழகிய சொற்ருெடர் களைப் பொருத்தமாக எடுத்தாளுகின்ருர். இதிலிருந்தும் அவரது தமிழன்பையும் ஆர் வத்தையும் சைவச் சான்ருேர்கள் நன்கு உணர லாம்.

சிதம்பரம் நடராச மூர்த்தியை வழிபாடு செய்யும் தீட்சிதர் மரபில்வந்த உமாபதி சிவா சாரியர், தமிழும் சைவமும் தழைத்து விளங்கு மாறு செய்த தொண்டுகள் ஏராளம். சித்தாந்த அஷ்டகம் எனப் பெயரிய சிவப்பிரகாசம் முதலிய எட்டுவகைச் சாத்திர நூல்களையும், திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம் முதலிய வரலாற்று நூல்களையும் நம்மனோர் உணருமாறு நல்லதமிழில் இயற்றி வழங்கியுள் ளார்கள்.

இவற்றினையெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்தால், சைவநெறி உலகில் பெருகச் செந் தமிழையே பெரியோர்கள் வழியாகக் கொண்ட னர் என்பது நன்கு விளங்குகின்றதன்ருே? எனவே சிவாசாரியர்கள் சிவாகம நெறிகளை நன்குணர்ந்து அதற்கேற்பத் தமிழ் வேத வழக்கங்களைக் கடைப்பிடித்து, தமிழ் அருச் சனைகள் திருக்கோயில்களில் பெருகி வளரும்படி செய்வார்களாக!

தென்னுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

# சத்தி நிபாதம்

**திரு. கே. எம். வேங்கடராமையா, M. A.,**

திருப்பனந்தாள்

உயிர்கள் எண்ணிறந்தன ; அவை மூன்று வர்க்கமாம். அவை விஞ்ஞானகலர், பிரளயா கலர், சகலர் என்பனவாகும். விஞ்ஞானகலர் ஆணவமலம் ஒன்றுமே யுடையார். பிரளயா கலர் ஆணவ மலமும் கன்ம மலமும் உடையார். சகலர் ஆணவம் கன்மம் மாயை எனும் மூன்று முடையவர். இதனைச் சிவஞானசித்தியார்,

"உரைதரும் இப்பசுவர்க்கம்
உணரின் மூன்ரும் ;
உயரும்விஞ் ஞானகலர்,
பிரளயாகலர், சகலர்,
நிரையின் மலம், மலம்கன்மம்,
மலங்கன்ம மாயை."

என்று கூறும். ஆணவ மலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலர், கலை முதலிய தத்துவங்களை விஞ்ஞானத்தால் நீக்கப்பெற்றவர் ஆவர். விஞ் ஞானமாவது மேலான அறிவு ; அதாவது பாச ஞானம் பசுஞானங்களினின்று மேம்பட்ட பதி ஞானம். இவ்விஞ்ஞானகலர்க்கு எடுத்த பிற வியன்றி வேறு பிறவியில்லை. இவர்கட்கு இறைவன் அருள்செய்வதை "முத்திதரும் நன் னெறிவிஞ் ஞானகலர் நாடுமலம் ஒன்றினையும் அந்நிலையே உள்நின் றறுத்தருளி" என்ற போற்றிப் பஃறொடையால் அறியலாம்.

ஆணவம் கன்மம் ஆகிய இரண்டையு முடைய பிரளயாகலர், பிரளயத்திலே கலாதி தத்துவங்கள் நீங்கப்பெறும் சிருஷ்டி காலத் திலே கலாதி தத்துவங்களோடு கூடியிருப்பர். பிரளயாகலர்க்குக் கன்மமலம் உண்டு ; ஆகை யால் ஒரு பிரளயத்துள் சில பிறவிகள் உள. இறைவன் பிரளயாகலருக்கு அருள்புரியும் முறையை, "பின் அன்பு......மேவா விளங்கும் பிரளயா கலருக்குத், தேவாம் மலகன்மம் தீர்த் தருளி" என்ற போற்றிப் பஃறொடையால் அறி யலாம்.

மும்மலமுடைய சகலர்க்கு, இறைவன் சொர்க்காதி போகங்களையும் பதமுத்திகளையும் அளித்துச் சத்திநிபாதம் பதிதற்கு ஏற்ற பக்குவ காலத்தை அருளுவர். ஸ்ரீகுமர குருபரசுவாமி களும், கந்தர் கலிவெண்பாவில்,

" ..............வெந்நிரய
சொர்க்காதி போகமெலாம்
துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்கார ணம்சிறிது நண்ணுதலும்
—தர்க்கமிடும்
தொன்னூற் பரசமயம் தோறும்
அதுவதுவே
நன்னூல் எனத் தெரிந்து நாட்டுவித்து
—முன்னூல்
விரதமுத லாயபல மெய்த்தவத்தின்
உண்மைச்
சரியை கிரியாயோகம் சார்வித்து
—அருள்பெருகு
சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்து
ஆலோகந் தன்னை அகற்றுவித்து—
நால்வகையாம்
சத்திநி பாதம் தருதற்கு இருவினையும்
ஒத்து வருங்காலம் உளவாகி"

என்று சகலர் நால்வகைச் சத்திநிபாதத்தையும் பொருந்துதற்குரியர் ஆவர் என்று கூறி யுள்ளார்.

சத்திநிபாதம் என்ருல் என்ன ? சக்தி-சிவ சக்தி ; நிபாதம்-பதிதல் (அல்லது) வீழ்ச்சி ; அதாவது திருவருள் ஆகிய சக்தியின்விளக்கம்

ஆன்ம அறிவின்கண் உண்டாதல். பரமசிவனுடைய சக்தி எவ்விடத்தும் வியாபகம் ஆகையால் உண்மை ஞானம் யாவர்க்கும் உண்டாகாமல் இருப்பது ஏன்? என்ற வினு எழக்கூடும்.

சூரியனுடைய விரிந்த கதிர் பக்குவமான தாமரை மொட்டை அலர்த்துமேயன்றிப் பக்குவமில்லாத தாமரை மொட்டை அலர்த்தாது. அதுபோலப் பக்குவமுடையார்க்கே சத்திநிபாதம் உண்டாகும்.

பக்குவம் என்பது இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாவது. இருவினையொப்பாவது ஆன்ம அறிவின்கண் நல்வினை தீவினைகளும் அவற்றின் பயனுகிய இன்பதுன்பங்களும் விருப்பு வெறுப்பின்றி ஒப்பத் தோன்றலாம். இதனை மாணிக்கவாசகப் பெருமானும், திருக்கழுக்குன்றப் பதிகத்தில், பின்வரும் பாடலில் கூறுவர்:

"பிணக்கிலாத பெருந்துறைப்
பெருமான்உன்
நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கிலாத தோர்இன்பமே வரும்
துன்பமே துடைத்து எம்பிரான்
உணக்கிலாததொர் வித்துமேல்விளை
[யாமல்
என்வினை யொத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து
காட்டினுய் கழுக்குன்றிலே".

மலபரிபாகமாவது. "மலம் தனது சக்தி தேய்வதற்குரிய துணைக் காரணங்கள் எல்லாவற்ருேடும் கூடுதல்." எனவே சரியை கிரியை யோக சிவ புண்ணியங்களால் இருவினையொப்பு நிகழும்; இருவினையொப்பால் மலபரிபாகம் வரும்; இவ்விரண்டினுலும் சத்திநிபாதம் உண்டாகும்.

சிவஞான முனிவர், திராவிடமாபாடியத்தில், "சத்திநிபாதம் என்னும் சொல்லியல்பு சத்தியினது வீழ்ச்சியென்றவாறு. 'நி' என்பது 'ஏற்றமாக' என்னும் பொருள் குறித்து நின்றதோர் இடைச்சொல். ஓர் அவைக்களத்தின் நடுவே ஒரு கல் வந்து வீழ்ந்தால், அவ்வீழ்ச்சி அவ் அவைக்களத்திலுள்ளாரை ஆண்டு நின்றும் அகல்விக்கும். அதுபோலச் சத்திநிபாதம் நிகழ்ந்த மாத்திரையே, அஃது ஆன்மாவை மனைவி மக்கள் முதலிய உலகத்துழனியின் அச்சம் நிகழ்ந்து, அவ்வுலக வாழ்க்கையினின்று வெரீஇப் போந்து, உண்மைக் குரவனை நாடிச் செல்லுமாறு செய்வித்தலின் அவ்வொப்புமை தோன்றச் சத்தி நிகழ்ச்சி என்னுது சத்தி வீழ்ச்சி என்று ஓதப்பட்டது" என்பர்.

வாகீச முனிவர் அருளிச் செய்த ஞானமிர்தத்தில், இதனைப் பின்வருமாறு கூறுவர்:

"சத்திநிபாதம் என்றது யாவன்ஒருவன்
இடைக்கடி தொருபொருள்
அடுத்துற வீழின்
வெரீஇ அந்நிலை ஒரீஇ வேறிடம்
மருவும்; அற்றென நிருமலன் 1பெருவலி
பதிப்ப 2அறிவன் 3பவபயம் கதுவ
மதித்தனன் தேசிகன் மலரடி அடையும்"

இச்சத்திநிபாதம் கன்ம சமத்துவத்தினல்லது வருவதில்லை. இதனை ஞானமிர்த ஆசிரியர்,

"மோக அனந்தர் முயல்வோர்க்கு
அமோகன்
சக்தியின் அவனை யுணர்த்தல் மற்றது
கருமத்து ஒப்பின் அல்லதை
வருமா ருகின்று மதிக்கும் காலே"
என்பர்.

திருமூலர்,

"இருவினைநேராப்பில் இன்னருட்சக்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தரும்." (செ. 1527)

அருணந்தி சிவாசாரியர், சிவஞானசித்தியாரில்,

"சகலர்க்குக் கன்ம ஒப்பில்
தரையில் ஆசான் மூர்த்தி ஆதார
மாகித்
தரித்து ஒழிப்பன் மலம் சதுர்த்தாசத்தி
நிபாதத்தால்" என்பர்.

சிவாக்கிரயோகிகள். சிவநெறிப்பிரகாசத்தில்
"வினையணைத்தும் துலையொப்ப மலபரி
பாகந் தான்
மேவியிடச் சத்திபதிந்திடும்" (செ. 145)
என்பர்.

---

(1) சத்திநிபாதத்தால்
(2) ஆன்மா
(3) பிறவியச்சம்

இச்சத்திநிபாதம் தான், நான்கு வகைப் படும். மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம்என. இம்மந்தம் முதலாகிய பெயர் ஏன் என்பதைச் சிவாக்கிரயோகிகள், சிவநெறிப்பிரகாசம் செய்யுள் 157-ல் பின்வருமாறு கூறுவர்.

மந்தமாய் மெய்ஞ்ஞானம்
உதிப்பிக்கும் அதனுல்
மந்தசத்தி எனப்பெயராம்;
மற்றதனின் அதிகம்
உந்திடமெய்ஞ் ஞானத்தை
யுதிப்பிக்கும் அதனுல்
உரைத்திடுவர் மந்ததர
சக்தியென உணர்ந்தோர்;
சிந்தையார் விஞ்ஞானம்
சடுதி யுதிப்பிக்கும்
செயலதனுல் தீவிரமாம்
சக்தி யெனத் தெரிப்பார்;
அந்தமாதிகள் இல்லாச்
சிவஞானம் மிகவும்
ஆக்கல் தீவிரதரமாம்
சத்தியென அறைவார்.

சிற்சக்தி சிறிது பிரகாசிக்கும் பொழுது ஆணவ சக்தி அற்பம் நீங்கும் அதிகம் பிரகாசிக்கும் போது அதிகம் நீங்கும். சூரியோதயமும் அந்தகார நிவர்த்தியும் முற்பிற்பாடற ஏக காலத்தில் ஆனது போலச் சக்தி வீழ்ச்சி நிகழ அஞ்ஞான நிவர்த்தியுண்டாகும். வாழைத் தண்டில் தீப்பற்றுவது போன்றது மந்தம். ஈர விறகில் தீப்பற்றுவதுபோன்றது மந்ததரம். உலர்ந்த விறகில் தீப்பற்றுவது போன்றது தீவிரம். கரியில் தீப்பற்றுவது போன்றது தீவிரதரம்.

நிவிருத்தி சக்தி பதிந்த பொழுது மந்தம். அப்பொழுது நித்திய அநித்திய விவேகத்தைப் பண்ணி விஷயங்களிலே விரக்தி வரும். பிரதிட்டா சக்தி பதிந்தபொழுது மந்ததரம். அப்பொழுது முதலுண்டான விவேகமும் விரக்தியும் பிரதிஷ்டிதம் (உறுதிப்படும்). வித்தியா சக்தி பதிந்தபொழுது தீவிரம். சிவ ஞானம் பிரகாசமாம். சாந்திசக்தி பதிந்தபொழுது தீவிரதரம். நிர்விகார ஞானத்தால் உபசாந்தி வரும்.

இந்தச் சக்திமானுயிருக்கிற சிவனுடைய நாமமும் நிவர்த்தீசன், பிரதிஷ்டேசன், வித்தியேசன், சாந்தீசன் என்று வியவகரிக்கப்படும் இவ்விளக்கங்கள் சிவாக்கிர யோகிகள் உரையிற் கண்டவை. அவருடைய சிவநெறிப் பிரகாசத்திலும்,

"சத்திதான் நிவர்த்தி
பதிந்திட்ட போது
தரும் விரத்தி பொய்வாழ்வில்
சாற்றில் அதே மந்தம்;
முத்திதனை இச்சித்து
விரத்திநிலை செய்யும்
மொழி பதிட்டாசக்தியது
முனின் மந்ததரமாம்" (செ. 156)

இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டான காலத்தில் ஆன்மாவினுடைய அறிவை விழிப்பிக்கிற ஈசுவர சக்தி பதியும். அது பதிந்த மாத்திரத்தில், ஆன்மாவை விஷயங்களிலே செலுத்துகின்ற திரோதான சக்தி, பராசக்தி ரூபமாய்ப் பதியத் துக்க சாகரமாகிய வைராக்கியம் உண்டாகும். கண்ணைப் பெற்றவன் காட்சியை விரும்புவது போல ஞான திருஷ்டியைப் பெற்ற ஆன்மா சிவனுடைய பாதாரவிந்தத்திலே இச்சையுண்டாய், 'எப்பொழுது தரிசிப்பேன்? எப்பொழுது பந்தத்தினின்று நீங்குவேன்? யார் தரிசிப்பிக்கிறவர்?" என்ற புத்தியை யுடையவனுய்ச் சம்சாரத்தில் பயப்பட்டிருக்கிறவனைச் சிவன் சத்திநிபாதானுகுணமாக அனுக்கிரகம் பண்ணுவான்.

அனுக்கிரகம் பண்ணுவது எங்ஙனம்?: மந்த சத்திநிபாதத்தை உடையவனுக்கு நிவர்த்தி பிரதிட்டை எனும் இரண்டு கலையில் உண்டான புண்ணிய பாவங்களைச் சோதித்துப் (பிருதிவியாம் ஆகாசபரியந்தம் உண்டான தத்துவங்களைத் தரிசித்து நீங்கும்படி உபதேசித்துப்) பிரகிருதிக்கு மேலாய் இருக்கிற லோகங்களிலே இருக்கும்படி செய்வது. மந்ததர சத்திநிபாதத்தை உடையவனுக்கு நிவிர்த்தி பிரதிஷ்டை வித்தை எனும் மூன்று கலைகளில் புண்ணிய பாவங்களைச் சோதித்து (கெடச் செய்து), (பிருதிவியாதி பிரகிருதிபரியந்தம் உண்டான தத்துவங்களைத் தரிசித்து நீங்கும்படி உபதேசித்து), சுத்தாத்துவாவில் சுத்த வித்தியா தத்துவத்தில் பொருந்தி யிருக்கப் பண்ணுவது. இவற்றைச் சிவநெறிப் பிரகாசம் 160 ஆம் பாடலால் அறியலாம்.

''மந்தமாம் சத்திநிபாதர்க்
கருளாற் குருவும்
மாய்த்தருளி யிருகலையின்
மருவு வினையனைத்தும்
சுந்தரமாம் பிரகிருதி
தனக்கு மேலாய்ச்
சொல்லுபுவ னங்கள்தமில்
தொக்கிருக்க அளிப்பன்;
சிந்தையார் மந்ததர
சத்திபதி போதில்
சிதைந்திடமுக் கலையின்
வினையனைத்தும், மாயா
பந்தமானதும் அறவே
சுத்தமான
பந்தானந்தே சுத்த
வித்தைதனிற் பதிப்பன்''

திருமூலர் சத்திநிபாதம் மந்ததரம் என்ற தலைப்பில் ஐந்து திருப்பாடல்களை அருளியிருக்கின்ருர்.

ஆன்மா ஆணவ மலத்தோடு மயங்கியிருப்பது; மாயை கன்மங்களோடு கூடியது; இறைவன் பக்கம் சாராதது. இத்தகைய ஆன்மாவை இறைவன் தன்வயம் ஆக்குவன்; ஆணவ மலத்தோடு மயங்கியிருந்த நிலையைப் போக்குவன்; கன்ம மலத்தை அச்சமுறுத்தி ஓடச் செய்வன்; இன்பம் விளையச் செய்வன்; அறியாமையைப் போக்குவன்; சிவகுணம் சீவகுணம் ஆகியவற்றை உணர்த்துவன்; திருவருளிலே திகழ்வதற்கேற்ற சிவஞானத்தை வழங்குவன்.

''மருட்டிப் புணர்ந்து
மயக்கமும் நீக்கி
வெருட்டி வினையறுத்து
இன்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக்
குணம்பல காட்டி
அருட்டிகழ் ஞானமது
புரிந்தானே''

—திருமந்திரம்.

சத்திநிபாதம் பெற்றிருக்கலாம். இருப்பினும் ஆணவ மலத்தின் வலிமையாலே உலகத்துழனியிலேயே இருக்க நினைப்பார்கள். அன்னேர் உறுதியான ஞானம்பெறின், பிறவித் துன்பம் இல்லையாகும். இதுவே பின்வரும் திருமந்திரத்தின் கருத்தாகும்:

கன்னித் துறைபடிந் தாடிய ஆடவர்
கன்னித் துறைபடிந் தாடும் கருத்திலர்
கன்னித் துறைபடிந் தாடும் கருத்துண்டேல்
பின்னைப் பிறவி பிறிதில்லை யாமே.

விண்கண்ட தெய்வம் பலகோடியுண்டு. ''விண்கண்ட தெய்வம் பலகோடியுண்டேனும் விளம்பிலுன்போல் கண்கண்ட தெய்வமுண்டோ'' என்பர் குமரகுருபரர். சிருஷ்டி கர்த்தா பிரமன்; அவன் செந்நிறமுடையவன். செய்யன் எனப்படுவான். தேவருலகத்துத் தலைவன் இந்திரன். அவன் கருநிறமுடையவன். கரியன் எனப்படுவான். காக்கும் கடவுள் திருமால். அவன் பச்சை நிறமுடையவன் பச்சையன் எனப் பெறுவான். அழிக்கும் கடவுள் உருத்திரன்' அவன் வெண்மை நிறமுடையவன். வெளியன் எனப்பெறுவான்.

இத்தோலா நல்லிசை நால்வரும் இறைவனைக் கயிலையில் கண்டு தரிசிக்கும் பேறு பெற்றவரே ஆவர். எனினும் அவர்கள் சகலரே. திருநாவுக்கரசரும்,

''நூறு கோடி பிரமர்கள் நுங்கினர்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணில் இந்திரர்
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே''

என்பர். அவர்கள் இன்னும் சிவனை அடைந்திலர். அன்னேர் சத்திநிபாதத்து உத்தமர் அல்லர். நீங்களோ திருவருட் சக்தி வீழ்ச்சியுற்றவர். ஆகலின் அரனை விரும்பி வணங்குங்கள். வணங்கினல் வீடு பெறலாம். இங்ஙனம் பின்வரும் திருமந்திரம் கூறும்:

செய்யன் கரியன்
வெளியன் நற் பச்சையன்
எய்த உணர்ந்தவர்
எய்யலர் இறைவனை

மைவென் றகன்ற
பகடுரி போர்த்த வெங்
கையன் இவன் என்று
காதல் செய்வீரே.

பல காலம் கழிகின்றனவே என்று நினைக்க வேண்டாம். இறைவனும் இறைவியுமே தனி நாயகம் (ஒப்பற்ற தலைமையுடையவர்) ஆவர். சின் முத்திரை போல அவ்விறைவனுடைய திருவடிகளில் உன் தலையை வைத்து முனைப்பு இன்றிக் கிடப்பாயாக. நாடோறும் அவனை இடையறாது வணங்குக. இவ்வுபதேசம் தருவது பின்வரும் திருமந்திரம்:

எய்திய காலங்கள் எத்தனை யாயினும்
தையலும் தானும் தனிநாயகம் என்பர்
வைகலும் தன்னை வணங்கு மவர்கட்குக்
கையில் கருமம் செய்காட்டு அதுவாமே.

அங்ஙனம் தாடலைபோல் வணங்கும்போது புருவ மத்தியில் தீப ஒளிபோல் இறைவன் காட்சி கொடுப்பன்: அவ்விறைவன் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள் ஆவன். அவனே எல்லாம் ஒடுங்குவதற்கு இடமாகிய பரமன். மேலான பரஞ்சுடர். நீண்ட சடையுடையவன். நிலையாக நின்று தரிசித்தால் அறியாமையாகிய இருளைப் போக்குவன். இதோ திருமூலர் வாக்கு.

கண்டு கொண்டோம்
இரண்டும் தொடர்ந்தாங்கொளி
பண்டு பண்டு;
ஓயும் பரமன்; பரஞ்சுடர்
வண்டு கொண்டாடும்
மலர்வார் சடையண்ணல்
நின்று கண்டார்க்கு
இருள் நீக்கி நின்றானே.

இச்சகலர்க்கு இறைவன் அருள் செய்வதைப் போற்றிப் பஃறொடையில் ''நாடும் வினை எல்லையிரண்டும் இடையாப்பில் பல்பிறவி அத்த மதிலன்றே அளவென்று பார்த்திருந்து சத்தி பதிக்கும் தரம் போற்றி'' என்றருள்வாராயினர்.

நாகை வட்டம் குண்டையூர் (திருக்குவளை) திரு. சொக்கநாதசுவாமி கோயில் திருப்பணியினை அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.,B.L., I.A.S. அவர்கள் துவக்கிவைத்தல். (27—8—71)

இராமலிங்கர் பணிமன்றத்தின் சார்பில், அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாட் பெருவிழா நிகழ்ந்த பொழுது, நமது தமிழக முதல்வர் மாண்புமிகு தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள், பணிமன்றத்தின் தலைவர், தொழிலதிபர் திரு. என். மகாலிங்கம் அவர்களைப் பாராட்டிப் பொன்னுடை போர்த்தியும், அன்பியற் பரிசுப் பொருள் வழங்கியும் சிறப்பித்தல். (8—10—71).



திருவண்ணாமலை அருணாசலேசுவரர் தேவத்தானத்தாரால் கட்டப்பெற்ற "ஸ்ரீ உண்ணாமுலையம்மை வழிபடுவோர் விடுதித் திறப்பு விழா"வில், தமிழக அரசின் உணவு - வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு **திரு. ப. உ. சண்முகம்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல். (1—11—71)



செங்கை மாவட்டம் இளையனூர் வேலூர் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில், மகா கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட மாவட்ட ஆட்சியாளர் திரு சீதாராமதாஸ் I. A. S. அவர்களும் ஏனைய பெருமக்களும், கலந்துகொண்டு சிறப்பித்தல்.

# ஆழ்வார்கள் வரலாறு

முன்னுரை :

திருமால் அடியார்களாக விளங்கி, தமிழகத்தில் திருமால் நெறியைப் பரப்பிய பெரியோர்கள் பன்னிருவர் ஆவர். இறையருள் இன்பநலத்திலும், அவனது எல்லையற்ற இனிய மங்கள குணங்களிலும், ஆழ்ந்து திளைத்து நின்ற அப்பெருமக்களை ஆழ்வார்கள் எனத் தமிழ்கூறும் நல்லுலகம் பெரிதும் சிறப்பித்துப் போற்றி வழிபட்டு வருகின்றது.

''பொய்கையார், பூதத்தார்,
பேயார், புகழ்மழிசை
ஐயன், அருள்மாறன்,
சேரலர்கோன்—துய்யபட்ட
நாதன், அன்பர்தாள்தூளி,
நற்பாணன், நற்கலியன்,
ஈதுஇவர் தோற்றத்து
அடைவுஆம் இங்கு''

என்னும் பாடலில், ஆழ்வார்களின் பெயர்களும், அவர்கள் தோன்றிருளிய முறையும் தொகுத்துக் கூறப்பட்டிருத்தல் காணலாம். இதன்படி, பெரியாழ்வாருடன் ஆண்டாளையும், நம்மாழ்வாருடன் மதுரகவிகளையும் ஒருங்கு சேர்த்து இணைத்து, ஆழ்வார்கள் பதின்மர் என்றும் சிலர் கூறுவதுண்டு. இங்கு ஆழ்வார்கள் பன்னிருவரும் பற்றிய வரலாற்றினை, இயன்ற அளவு சுருக்கமாகக் காண்போம்.

## 1. பெரியாழ்வார் :

பாண்டிநாட்டில், ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் திவ்விய தேசத்தில், வேயர் குலத்தில், பதுமையாருக்கும், முகுந்தாச் சாரியாருக்கும், ஆனி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில், கருடஅம்சராகத் தோன்றியருளினுர். இவர் தமது சித்தத்தில் எப்பொழுதும் இடையருது எண்ணி விஷ்ணுவை அன்புடன் வழிபட்டு வந்தவராதலின், இவருக்கு விஷ்ணுசித்தர் என்னும் பெயர் அமைந்தது.

பாண்டியனின் அரசவையில் பரதத்துவ நிச்சயம் செய்து ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள் என்று நிறுவிப் பொற்கிழி அறுத்து, சகலவேத சாத்திர ஞானச்செல்வராகத் திகழ்ந்தமையினுல் ''பட்டர்பிரான்'' என்ற பெயரும் இவருக்கு வழங்கும். இவர் ஸ்ரீவில்லிபுத்தூர் வடபெருங்கோயிலுடையானுக்கு மிக்க அன்பு பூண்டு, திருமாலைகள் புனைந்து சாத்தி வழிபட்டு வந்தவர். திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி என்னும் இரண்டும், இவர் அருளிச்செய்த பிரபந்தங்களாகும். பெருமாளுக்குப் பல்லாண்டு பாடி மங்களா சாசனம் செய்த பரிவின் மிகுதியினுல், ஏனை ஆழ்வார்களினும் பெருமை பெற்றவராதலின், இவருக்குப் பெரியாழ்வார் என்னும் திருப்பெயர் ஏற்பட்டது.

## 2. ஆண்டாள்

ஸ்ரீவில்லிபுத்தூரில், திருவாடிப்பூரத்தில், பூமிப் பிராட்டியார் அம்சமாகத் தோன்றியருளியவர். தம்முடைய திருநந்தவனத்தில் திருத்துழாய்ச் செடியின் கீழ்க் குழந்தையாகக் கிடந்த இவரை, விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார் எடுத்துக் கோதை என்னும் பெயரிட்டு வளர்த்து வந்தார். பெரியாழ்வார் வட பெருங்கோயில் உடையானுக்காகத் தொடுக்கும் மலர்மாலைகளைத் தான் முதலில் சூடி

மகிழ்ந்து, பிறகு எம்பெருமானுக்குத் கொடுத்தவள் ஆதலின், இவருக்குச் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் ஒரு பெயர் உண்டு. தம் அன்பின் மிகுதியாலும், காதல் உணர்வின் சிறப்பாலும், ஆண்டவனையே தன்பால் ஏற்று ஆண்டுகொண்டவள் ஆதலின், ஆண்டாள் என்றே இவர் மிகவும் சிறப்பாகப் போற்றப் படுவார். ''மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்று அணியரங்கத்து அம்மானுக்கே அற்றுத் தீர்ந்த காதலை உடையவளாய் இருந்து, அப்பெருமானுக்கே மணவாட்டியாகும் பேறு பெற்று, அவனோடு ஒன்றிக் கலந்தவள். இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டாகும்.

## 3. குலசேகராழ்வார்

இவர் சேரநாட்டில், திருவஞ்சைக்களம் என்னும் நகரத்தில்: திடவிரதன் என்னும் அரசனுக்குக் கௌஸ்துப அம்சமாக மாசி மாதத்தில் புனர்வசு நட்சத்திரத்தில் திருவவதாரம் செய்தார். தமது குலமரபுக்கு ஏற்ப அரசராய் முடி சூடப் பெற்றுக் குடிமக்களை நன்கு பாதுகாத்து வந்தார். ''பெருமாள்' என்பது சேரஅரசர்களுக்குரிய பட்டப்பெயர். ஆதலின் இவரைக் குலசேகரப் பெருமாள் என்றும் குறிப்பிடுவர். இராமபிரானிடத்தும்; இராமாயணத்திலும் இவர் மிகவும் எல்லையில்லாத ஈடுபாடு கொண்டிருந்தார். ''ஆனை செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்'' என்னும் நிலையிற் பக்தியுணர்வில் திளைத்தவர். ''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே! நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்; அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும் படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே'' என்று அருளிச் செய்தவர் இவர்.

## 4. திருமழிசையாழ்வார்

சென்னைக்கு அருகே பூந்தண்மலிக்கு அணித்தேயுள்ள திருமழிசை (மகிசாரக்ஷேத்திரம்),என்னும் திவ்விய தேசத்தில், தைம்மாதத்தில் மக நட்சத்திரத்தில், பார்க்கவ முனிவர்க்குப் புதல்வராய்த் திருவாழியின் கூறுகத் திருவவதாரம் செய்தருளினர். இவர் அவதரித்த போது உறுப்பொன்றும் காணப் பெருமல் பிண்டமாய் இருந்ததனல், இவரை இவர் தந்தையாரும் தாயாரும், ஒரு பிரம்புப் புதரில் எறிந்து விட்டுப் போயினர். திருவாளன் என்னும் ஒரு வேளாளன், அக்குழந்தையைக் கண்டெடுத்து, தன் மனைவி பங்கயச் செல்வியின்பாற் கொடுத்து, அன்புடன் வளர்த்து வந்தான். ஆனல் அக்குழந்தை பால் பருகாமலும், பசி தாகம் கொள்ளாமலும், ''உண்ணும் சோறு, பருகும்நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்'' என்றபடி, பரம புருஷனையே அனுபவித்து வளர்த்து வந்தது.

திருமழிசையில் தோன்றியதினல் இவருக்குத் திருமழிசையாழ்வார் எனப் பெயர் வழங்குகின்றது. உற்ற வயதடைந்ததும், ''சாக்கியம் கற்றோம் சமண்கற்றோம் சங்கரனர் ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்'' என்றபடி, இவர் உலோகாயதம் பௌத்தம்சமணம் மாயாவாதம் முதலிய பல சமயங்களையும் ஆராய்ந்தார். பின்னர்ச் சைவ சமயம் சார்ந்து, ''சிவ வாக்கியர்'' என்னும் பெயர் பூண்டு சில காலம் சிவ பிரானை வழிபட்டு வந்தார். இவர் பின்னர்ப் பேயாழ்வார் பேருளால் பரம ஸ்ரீவைஷ்ணவராய்த் திருந்தினர். அது முதல் திருமகள் கொழுநனன நாராயணரையே தியானம் செய்து வந்தார். இவர்தம் பக்தியின் சிறப்பினல், இவருக்குப் 'பக்திசாரர்' என்றும் ஒரு பெயர் வழங்கும். திருச்சந்தவிருத்தம் நான்முகன் திருவந்தாதி என்னும் இரு திவ்வியப்பிரபந்தங்கள், இவரால் அருளிச் செய்யப் பெற்றன. இவர் திருவெஃகாவிலுள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் இடத்திலும், திருக்குடந்தையில் உள்ள ஆராவமுதப் பெருமாளிடத்திலும், மிகவும் ஈடுபாடு கொண்டவராவர்.கணிகண்ணர் என்பவர், இவருக்கு மாணவராக இருந்தார்.

## 5. தொண்டரடிப் பொடியாழ்வார்

இவர் திருக்குடந்தைக்கு அருகிலுள்ள திருமண்டங்குடி என்னும் தலத்தில், மார்கழிக் கேட்டையில், திருமாலின் வனமாலையின் அம்சமாய், வேதம் வல்ல ஒரு பிராமணரின் குடியில் தோன்றியவர்; இவரது இயற்பெயர் விப்பிர நாராயணர் என்பது. இவர் ஸ்ரீவைஷ்ணவருக்கு அடிமை பூண்டு ஒழுகி, அவர்களின் திருவடிகளுக்குத் தொண்டு செய்து மகிழ்வதையே, ஒரு பெரும் பேருகக் கருதியிருந்தார். ஆகையால் இவருக்குத் தொண்டிரப் பொடியாழ்வார் (அன்பர்தாள் தூளி) என்னும் பெயர் ஏற்

பட்டது. இவர் திருவரங்கப் பெருமானையே தம் வழிபடு கடவுளாகக் கொண்டவர். திரு வரங்கத்தில் அழகிய மணவாளனுக்குத் திரு நந்தவனப் பணிபுரிந்து வந்தவர். திருமாலே, திருப்பள்ளியெழுச்சி என்னும் இரண்டு பிரபந்தங் களை இவர் அருளிச் செய்துள்ளார்.

## 6. திருப்பாணுழ்வார்

சோழ நாட்டில், உறையூரில் கார்த்திகை மாதத்தில் உரோகிணி நட்சத்திரத்தில், திரு மாலினது ஸ்ரீவத்சத்தின் அம்சமாய்த் தோன்றி யருளியவர். இவர் சிறுகுழந்தையாக இருந்த போது, பாணர் குலத்தில் பிறந்த ஒருவனுல் எடுத்து வளர்க்கப் பெற்றமையால், பாணுழ் வான் (பாண்பெருமாள்) என்னும் பெயர் பெற்ருர். இவர் யாழ்ப்பாடலில் தேர்ச்சி பெற் றுத், திருவரங்கம் பெரிய பெருமாள் திருவுள்ளம் உவக்குமாறு பாடல் தொண்டு புரிந்து வந்தார். அதனுல் அவர்தம் இன்னருளுக்கு இலக்காகி, அவர் பணித்தருளியபடி லோகசாரங்கமாமுனி களின் தோள்களின் மேலே ஏறி, அப்பெரிய பெருமாளின் திருக்கோயிலுக்குள் சென்று, அவரைத் திருவடி முதல் திருமுடி வரை தனித் தனியாகவும் ஒரு சேரவும் தரிசித்து நன்கு அனுபவித்து, 'என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றென்றினைக் காணுவே' என்று நெஞ்சுருகப் பாடி, அவர் தம் திருவடிகளையே சார்ந்தவர். "அமலன் ஆதிபிரான்" என்பது, இவர் அருளிய திவ்வியப் பிரபந்தமாகும்.

## 7. மதுரகவியாழ்வார்

பாண்டிய நாட்டில், ஆழ்வார் திருநகரிக்கு அருகிலுள்ள திருக்கோளூர் என்னும் திவ்விய தேசத்தில், சித்திரை மாதத்துச் சித்திரை நட் சத்திரத்தில், கணநாதரான குமுதர் என்பவரின் அம்சமாகத் திருவவதாரம் செய்தவர், சூரியோ தயத்திற்கு முன்னர் நிகழும் அருணுேதயம் போன்று, நம்மாழ்வார் திருவவதாரம் செய் வதற்கு முன்பே, இவர் தோன்றியருளினர். இளமையிலேயே வேதம் முதலிய நூல்களை யெல்லாம் ஓதி உணர்ந்து மதுரம் மிகுந்த இனிய சிறந்த கவிகளைப் பாட வல்லவராக இருந்ததினுல், இவருக்கு மதுர கவிகள் என்னும் பெயர் வாய்ப்பதாயிற்று. இவர் "தேவு மற்றறி யேன் குருகூர்நம்பி பாவின் இன்னிசை பாடித் திரிவனே" என்று நம்மாழ்வாரையே குருவாகக் கொண்டு வாழ்ந்து உய்ந்தவர். "நண்ணித் தென் குருகூர் நம்பி என்றக்கால், அண்ணிக் கும் அமுதூறும் என்நாவுக்கே" என்று, நம் மாழ்வாரையே புகழ்ந்து, இவர் பாடியருளிய பிரபந்தம் "கண்ணிநுண்சிறுத்தாம்பு" என்னும் பிரபந்தமாகும். இது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் இடம் பெற்று நடுநாயகம் போல் சிறப்புற்று விளங்குகின்றது.

## 8. திருமங்கையாழ்வார்

சோழ நாட்டில், திருவாலித் திருநகரி என்னும் திவ்விய தேசத்திற்கு மிக அருகிலுள்ள திருக்குறையலூரில் சோழ மன்னனின் படைத் தலைவனுன ஒருவனுக்குக், கார்த்திகை மாதத் தில் கார்த்திகை நட்சத்திரத்தில், திருமாலின் சார்ங்கம் என்னும் வில்லின் அம்சமாய் அவ தரித்தார். 'நீலன்' என்னும் இயற்பெயர் பெற்றிருந்த இவர், தமது குலத்திற்கேற்ப இளமையிலேயே படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்று, சோழ மன்னனை அடுத்துப் படைத் தலைவராய் அமர்ந்து, பகைவர்களைப் போரில் வென்று, பரகாலன் என்னும் சிறப்புப் பெற்றிருந் தார். இவர் குமுதவல்லி என்னும் அமரமகளை மணம் செய்துகொள்ள விரும்பி, அவளது வேண்டுகோளுக்கு இணக்கித் திருநறையூர் நம்பியிடம் திருவிலச்சினை தரித்தவர். வயலாலி மணவாளனிடம் திருமந்திர உபதேசம் பெற்ற வர். திருவரங்கம் கோயிலுக்குச் சிறந்த பல திருப்பணிகள் புரிந்தார். திருமங்கை என்னும் நாட்டுக்கு மன்னராக விளங்கியவராதலின், இவருக்குத் திருமங்கை மன்னன் என்றும், திரு மங்கையாழ்வார் என்றும் பெயர்கள் வழங்கும். ஆலிநாடன் - அருள்மாரி - கலியன் - கலி கன்றி- நாலுகவிப் பெருமாள் முதலிய பெயர்களும் இவருக்கு உண்டு. இவர் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை. சிறிய திருமடல், என்னும் ஆறு பிரபந்தங்களை அருளிச் செய் துள்ளார். இவ் ஆறு பிரபந்தங்களும், நம் மாழ்வார் அருளிச் செய்த நான்கு வேதம் போன்ற நான்கு பிரபந்தங்களுக்கும், முறையே உரிய ஆறு அங்கங்களாக மதித்துப் போற்றப் படுகின்றன.

## 9. பொய்கையாழ்வார்

ஆழ்வார்கள் பன்னிருவருள், பொய்கை யார், பூதத்தார், பேயார் என்னும் இம்மூவரும் முதலாழ்வார்கள் எனப்படுவர். பொய்கையார்

காஞ்சிபுரத்தில், திருவெஃகா என்னும் திவ்விய தேசத்தில், பொற்றுமரைப் பொய்கையில், ஓர் அழகிய தாமரை மலரில், ஐப்பசித் திருவோண நாளில், திருமாலின் பாஞ்சசன்னியம் எனப் பெயர்பெற்ற சங்கின் கூறுக அவதரித்தருளி ஞர். பொய்கையில் அவதரித்ததனுல் இவருக் குப் பொய்கையார் எனப்பெயர் அமைந்தது. இவர் அருளிச்செய்த பிரபந்தம், முதல்திருவந் தாதி எனப்படும்.

## 10. பூதத்தாழ்வார்

தொண்டை நாட்டிலுள்ள திருக்கடல் மல்லை (மாமல்லபுரம்) என்னும் திவ்விய தேசத் தில், ஒரு குருக்கத்தி மலரில், திருமாலின் கௌமோதகி என்னும் கதாயுதத்தின் கூருக, ஐப்பசி அவிட்ட நட்சத்திரத்தில் தோன்றி யருளினுர், இவர் இறைவனை அறிதலாலேயே தாம் உயிர் (பூதம்) உளராகும் தன்மையை உடையவராய் இருந்தார். ஆதலால் இவருக் குப் பூதத்தார் என்று பெயர் அமைந்தது. இவர் திருவரங்கர் புகழ் பாடுதலில் மிகுதியான அன்புடையவர். இவர் பாடியருளியது இரண் டாம் திருவந்தாதி எனப்படும்.

## 11. பேயாழ்வார்

இவர் சென்னையிலுள்ள திருமயிலை என் னும் திவ்விய தேசத்தில், ஒரு கிணற்றில் மலர்ந்த செவ்வல்லிப் பூவில், திருமாலின் நந்த கம் என்னும் வாளின்கூருக, ஐப்பசியில் சதய நட்சத்திரத்தில் அவதரித்தார். "பேயரே எனக்கு யாவரும்; யானும் ஓர் பேயனே எவர்க் கும்; இது பேசி என்? ஆயனே அரங்கனே என்று அழைக்கின்றேன்; பேயனுய் ஒழிந்தேன் எம் பிரானுக்கே" என்று குலசேகரர் அருளிச் செய்தது போன்று, திருமாலின்பால் தாம் கொண்ட பேரன்பின் மிகுதியினுல், காண்பவர் கள் 'இவர் பேய் பிடித்தவர் போலும்' என்னும் படி இருந்ததினுல், இவருக்குப் பேயாழ்வார் எனப் பெயரமைந்தது.

பொய்கையார் பூதத்தார் பேயார் என்னும் இம்மூவரும், இராமன் பரதன் இலக்குமணன் என்னும் மூவரைப்போன்று அடுத்தடுத்த நாட் களில் அவதரித்து, சுத்த சத்துவ குணமுடைய வராய், ஒருநாள் தங்கிய இடத்தில் மற்றெருநாள் தங்காமல், ஓர் ஊரில் ஓர் இரவு மட்டும் தங்கி, தம்மில் ஒருவரை ஒருவர் அறியாமல் தனித் தனியே தலயாத்திரை செய்துகொண்டிருந்த னர். கருணைக் கடலாகிய திருமால் இவர்கள் மூவரையும் ஓரிடத்தில் சேர்த்து ஆட்கொண்டு, இம்மூவரால் உலகத்தை உய்விக்கத்திருவுள்ளம் பற்றி, மழை என்னும் ஒரு காரணத்தால், இம்மூவரையும் திருக்கோவலூரில் ஓர் இடை கழியில் ஒன்று சேரும்படி செய்தருளினுர். அங் ஙனம் ஓர் இடைகழியில் ஒன்று சேர்ந்த இம் மூவரும், திருமாலின் திருவருள் நலங்களை வியந்து தமக்குள் சொல்லியும் கேட்டும் மகிழ்ந் திருந்தனர். அப்போது திருமால் தாமும் அங் குச் சென்று அம்மூவருடன் சேர்ந்து, அவர் களுக்குப் பொறுக்கொணுத மிக்க நெருக்கத்தை உண்டாக்கினுர், அப்போது அவர்கள் நம்மை யொழியவும் இங்குப் போந்து புகுந்து, நம்மோடு நிற்பார் எவரேனும் பிறருண்டோ? என ஐயம் கொண்டனர். அப்போது பொய்கையாழ்வார் "வையம் தகளியா, வார் கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக" ஏற்றினுர். பூதத்தாழ்வார் "அன்பே தகழியா, ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை இடுதிரியா, நன்புருகு ஞானச்சுடர் விளக்கு" ஏற்றினுர். அவ்விரு விளக்குகளையும் கொண்டு பேயாழ் வார், தம்மோடு உடன் கலந்து ஒன்றி நின்ற திருமாலைக் கண்கூடாகக் கண்டு மகிழ்ந்து வணங்கி அனுபவித்துக் களித்தார்! "திருக் கண்டேன்; பொன்மேனி கண்டேன்; திகழும் அருக்கன் அணிநிறமும் கண்டேன்; செருக் கிளரும் பொன்னுழி கண்டேன்; புரிசங்கம் கைக் கண்டேன்; என் ஆழி வண்ணன்பால் இன்று" என்று பாடி மகிழ்ந்தார். பேயாழ்வார் பாடிய, பிரபந்தம் மூன்றும் திருவந்தாதி எனப் படும்.

## 12. நம்மாழ்வார்

இவர் பாண்டிநாட்டில், தாமிரபரணி யாற் றின் கரையில், குருகூர் அல்லது (ஆழ்வார்திரு நகரி) என்னும் திவ்விய தேசத்தில், திருமா லுக்கே தொண்டு பூண்டொழுகும் சிறப்பு வாய்ந்த வேளாண்குலத்தில், காரியார்க்கும் உடைய நங்கையார்க்கும், வைகாசி விசாகத் திருநாளில் திருக்குறுங்குடி நம்பியின் அருளால் விஷ்வக்சேனர் என்னும் சேனை முதலியாரின் அம்சமாகத் திருவவதரித்தார், உலகியல் வாழ்க்கையின் மயக்கமாகிய சடப்பொருள் உணர்ச்சி தம்மைப் பற்றுதவாறு கோபித்து ஒட்டி ஒழித்தவர் ஆதலால, இவருக்குச் சடகோபன் என்னும் திருப்பெயர் ஏற்பட்டது.

இவர் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள நம்பெருமாளால் "நம்மாழ்வார்" என்று உறவு கொண்டாடிப் பெரிதும் விரும்பிப்போற்றப் பெற்றவர். ஆதலால் இவருக்கு நம்மாழ்வார் என்றும் பெயர் வழங்கும். இவர்தம் இயல்பு உலகநடைக்கு மாருக இருந்ததனுல், மாறன், என்னும் காரணச் சிறப்புப் பெயரால் பெரியோர்கள் இவரைக் குறிப்பிடுவர். காரிமாறன், பராங்குசன், குருகைப்பிரான், வகுளாபரணன் முதலிய பெயர்களும் இவருக்கு உண்டு.

இலக்குமணன் அவதரிக்கும்போதே இராமபிரானிடம் பேரன்பு பெற்றிருந்ததுபோன்று, இவரும் அவதரிக்கும்போதே திருமாலிடம் பேரன்பு கொண்டு திகழ்ந்தவர். ஆதலால் இவரது பக்தியைச் 'சகச பக்தி' என்று பெரியோர்கள் புகழ்ந்து பேசுவர். இவர் இடையருது எம்பெருமானை எப்போதும் அனுபவித்து வாழ்ந்தவர். கண்ணபிரானிடம் அளவற்ற அன்பு பூண்டவர். ஏனைய ஆழ்வார்கள் எல்லாம் தமக்கு உறுப்பாக அமைய, இவர் உறுப்பியாகி, அவர்களுக்கெல்லாம் பெருமையும் முதன்மையும் கொண்டு திகழ்ந்தவர். திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு பிரபந்தங்கள் இவரால் அருளிச் செய்யப்பெற்றன.

—ஆசிரியர்.

---



சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்ற நினைவு அஞ்சலிக் கூட்டத்தில், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B,A., B,L., I.A.S. அவர்கள், உரை நிகழ்த்துதல். (10—12—71)

# ஞாயிறு போற்றுதும்

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள்

[ சென்னை ]

[தமிழர் திருநாள் ஆகிய பொங்கல் திருநாள் விழா, சூரியனைப் போற்றும் வகையில் நிகழ்வதொன்றுதலின், இக்கவிதை, இந்தத் தைம்மாதச் சிறப்பு மலரை அணி செய்கின்றது.
—ஆசிரியர்.]

பாலுள்ள கடலினிலே
பள்ளி கொண்டு
பழகியவர் அழகியவர்
பரிவு மிக்க
மால், உள்ளார் சூரியனின்
மண்ட லத்து
மத்தியிலே என்பார்கள்
வைண வர்கள் ;
சேல் உள்ள விழியாட்குப்
பாகம் தந்த
சிவனுள்ளார் அங்கென்று
சொல்வார் சைவர் ;
நாலுள்ள தென்னும்மறை
நயந்து போற்றும்
நாயகனுக் கிடமருளும்
நலமே வாழி! (1)

நீலநெடு நாரணனின்
சக்க ரம்போல்
நில்லாமற் சுழன்றிடுவான்
விரிவா னத்தில்!
ஜாலமிடும் ஏழுவண்ண
வில்வ ளைப்பான் ;
சந்தமுடன் துள்ளிவரும்
சொல்வி ளைப்பான் ;
ஓலமிடும் கடல்நீரில்
உப்பெ டுப்பான் ;
உணவுக்குச் சுவைதருவான் ;
உயிர் வளர்ப்பான் !

ஞாலமெனும் பெருந்தேரை
நடத்திச் செல்வான் !
ஞானத்தை அழகாக
எடுத்துச் சொல்வான் (2)

நண்ணிக்கை தொழ, அருளும்
தெய்வம் என்னும்
நம்பிக்கை மிகுந்ததிரு
நாட்டில், எண்ணும்
எண்ணிக்கைக் காறுமதம்
உண்டென் றுலும்,
எழுகைக்குத் துணைசெய்வ
தொன்றே ஒன்று,
விண்ணிற்கை பலகோடி
விரித்த வண்ணம்
விளங்குகதிர்த் தலைமையிலே
உள்ள தென்று,
மண்ணிற்கை தட்டி வர
வேற்கும் சௌர
மகிமையினை எந்தமதம்
மறுத்துப் பேசும்? (3)

புவிமாது தொழில்கொள்ள,
புள்சி லம்ப,
பூபாளத் தேரேறி,
புனித மான
கவிமாது வரவேற்புப்
பாட்டுப் பாட,
காரிருளாம் வல்லரக்கி
கலங்கி ஓட,

தவறாது நாள்தோறும்
வந்து, காட்சி
தருகின்ற ஒருதலைவன்,
இருவி ழிக்குச்
சுவையான விருந்தருளும்
சுடரின் மன்னன்
சூரியனுக்கு இணையாக
யாரைச் சொல்ல? (4)

உதிக்கின்ற சூரியனைத்
தெய்வம் என்று,
உணர்ந்துருகி நாள்தோறும்
கைகள் கூப்பி,
மதிக்கின்ற கொள்கையினோர்
வாழ்வில், இன்ப
மலர்பூக்கும்; மணம்கமழும்
விழிகள் மின்னும்;
துதிக்கின்ற பேர்களுக்கு
ஆயுள் நீளும்;
சொல்லரிய புகழ்கூடும்;
செல்வம் சேரும்;
எதற்கிந்த வாழ்க்கையெனும்
ஏக்கம் தீரும்;
எடுத்தசெயல் முழுவதுமே
வெற்றி எய்தும்! (5)

தொடங்குமொரு செயலுக்குத்
துணையே என்று,
சொல்லுவமேல் ஆதித்ய
இருத யத்தை,
முடங்கியதொ ராற்றலினை
நிமிர வைப்போம்;
முழுவெற்றிக் கெப்பொழுதும்
வழிவ குப்போம்;
திடங்கொள்ளும் மனம்பெற்றுத்
திகழ்வோம்; பத்துச்
சிரங்கொள்ளும் அரக்கனிடும்
ஆணைக் கெல்லாம்
அடங்கியிருந் திருட்காட்டில்
அலைய மாட்டோம்;
ஆனந்தப் பேரமுதை
அருந்தி நிற்போம்! (6)

ஏறுகின்ற திசையினையும்,
பணிமு டித்து,
இறங்கிடும்மேல் திசையினையும்
வணங்க வைத்து,
கூறுகின்ற தறியாத
புகழ்வ ரம்பில்]
குலவுகதிர்க் கோமானால்
கூடும் தெம்பு!
அவன் ஆறுகின்ற தறியாத
அனற்கு ழம்பு!
அந்தரத்தின் தனிலிங்கம்
அதுசு யம்பு!
தேறுகின்ற வழியில்நெஞ்
சே - தி ரும்பு!
தேயாத சூரியனை
யே-வி ரும்பு! (7)

148693

ஆற்றாத துயரெல்லாம்
ஆற்ற வல்ல
ஆகாயப் பெருமிதத்தை,
அருளொ ளிக்கோர்
ஊற்றான உன்னதத்தை,
பார்வை யாலே
உயிர்வளர்க்கும் நல்லுரத்தை,
ஒருவ ருஞ்சென்
றேற்றாத தீபத்தை,
தினமும் கண்ணுக்
கெதிரில்வரும் தெய்வத்தை,
வரவு கூறிப்
போற்றாத வீடெல்லாம்
நோய்க்கா டாகும்
புலிக்குகையாய் எலிவளையாய்
மாறிப் போகும்! (8)

கன்னத்தை வருட, இளங்
காலைப் போதில்
கமலத்திற் கென்னஉரைப்
பானோ காதில்?
அன்னத்தைக் காணா
திருந்து கண்ட
அன்றாடங் காய்ச்சியென
அவள்ம லர்வாள்;

என்னத்தைச் செய்தானோ?
அவளுள் ளத்தை
எப்படித்தான் கவர்ந்தானோ?
ஆமாம், காதல்
சின்னத்தை உதயத்தில்
எழுதி, வாடச்
செய்திரவில் பிரிவதிலே
சிறப்பு என்ன? (9)

கொலைகள்ளம் களவெல்லாம்
தலைவி ரித்துக்
கூத்தாடும் கதிரில்லா
இரவுப் போதில்!
நிலைகொள்ளும் பெருமையிலே
நிகரற் றேங்கும்
நெஞ்சகமும் எதையெதையோ
நினைக்கும்; ஏங்கும்;
அலைகொள்ளும்; நுரைதள்ளும்;
எழுந்து பொங்கும்
ஆசையினால் சீரழியும்;
குடியில் லாமல்
தலைகொள்ளும் போதையினை;
வீணே அற்பத்
தனத்தினிலே போய்ச்சூரத்
தனத்தைக் காட்டும்! (10)

சோம்பேறித் தனப்பட்டு,
சும்மா, ஏதோ
சொல்லாத குறையெல்லாம்
சொல்லி, கைக்கும்
வேம்பேறி மனங்கெட்டு,
விடிய வைக்கும்
வேலைக்கு வரமறுத்தான்
வெய்யோன் என்றால்,
காம்பேறி நிற்குமலர்ப்
பெண்ணா ரெல்லாம்
கதிகலங்கிப் போவார்கள்;
கட்டி ஈர்க்கும்
தாம்பேறி வருகின்ற
குடத்தில் எல்லாம்
தளும்புவது கண்ணீராய்த்
தானி ருக்கும். (11)

வேகம்பெற் றியங்குமுயர்
விண்ணின் செல்வன்;
விரிகதிரோன்; தாமரையாள்
விரும்பும் வெய்யோன்;
தேகம்பெற் றுள்ளதெனும்
புள்ளி எய்தும்
சிறு மாற்றம் பார்மகளைச்
சிதற டிக்கும்;
பூகம்பத் தைப்புயலை,
ஈர்க்கும் காந்தப்
புலனிலெழும் சீர்கேட்டைக்
கொணரும், கெட்ட
சோகந்தன தாக்கொள்ளும்
எண்ணம் ஏதும்
சூரியனுக் குதித்திடுமோ
சிலநே ரத்தில்? (12)

சீருக்குக் குறைவில்லாச்
செல்வ னுக்கு,
செழிப்பினடித் தளமாகத்
திகழ்வோ னுக்கு,
வேருக்கு வேராகி
விளங்கும் ஞான
விழிப்பருளும் கதிருக்குச்
சிரங்கு விப்போம்;
அவன்—,
பாருக்குக் கண்ணருளும்
பகல்வி ளக்கு;
பலவாயுக் கருவூலம்;
ஒளிக்கி டங்கு;
யாருக்கும் பொதுவான
ஒருவி ளக்கு;
அணையாமல் நின்றெரியும்
திருவி ளக்கு! (13)

அளவறியாப் பெருவலியான்;
ஆதி நாளான்;
அனலுடலான்; துயிலறியான்;
ஆவி சோரான்;
தெளிவகலாத் தண்ணீருக்
குள்ளே வந்து
தெரியுந்தன் உருவத்தைத்
தினமும் பார்ப்பான்;

களவறியா உள்ளத்தில்
கலந்து நிற்பான் ;
கடிகார மூலத்தான் ;
காலம் செல்லும்
உளவறியத் துணைபுரிவான் ;
உலகில் எந்த
உயிருக்கும் உயிராவான்
தெய்வம் ஆவான் ! (14)

சுடுநிலையான் ; கோள்எட்டும்
சுற்றப் பெற்றான் ;
சுறுசுறுப்புக் கதிபதியான் ;
சுகதுக் கத்தில்
நடுநிலையான் ; விழியிமையான் ;
நமக்கிங் கென்ன
நடந்தாலும் தடம்புரளான் ;
வாழ்வுத் தட்டில்
கடைநிலையான் குடிசையிலும்
நேரா நேரக்
கடமையிலே தவறிழையான் ;
கவிஞர் நெஞ்சைத்
தொடுநிலையான் ; முழுநேரத்
தொழிலான் ; கேள்வி
தொடுத்தறியான், விழுந்துபடுத்
தறியான் வாழி ! (15)

அல்லுக்குள் சிறைப்பட்ட
உலகை மீட்பான் ;
ஆகாயச் சோலையிலே
அழகாய்ப் பூப்பான் ;
மல்லுக்குத் தோள்வளர்ப்பான்
மனிதர் கட்கு ;
மருந்துக்குச் செலவின்றி
நோயைத் தீர்ப்பான் ;
புல்லுக்குள் பசுமையினைப்
புகுத்தி, வைரப்
புதுநகையைக் காலையிலே
பூட்டிப் பார்ப்பான் ;

சொல்லுக்குள் மந்திரத்தின்
வலிமை சேர்ப்பான் ;
சூனியத்துள் ஆன்மிகத்தின்
சுடரை மேய்ப்பான். (16)

கனவுகளில் நித்திரையில்
நிலைக லங்கிக்
கைதான உலகத்தைக்
கணத்தில் மீட்பான் ;
தினமெழுந்து வானத்தில்
திரிந்து, மேற்குத்
திசையினிலே போய்விழுவான் ;
தெளிவைத் தேடும்
மனமமுழ்ந்தும் விதமாகக்
காலம் ஓடி
மறைவதனைக் கவனத்தில்
கொண்டு வைப்பான் ;
இனுமமுழ்ந்திக் கிடவாதீர் ;
பக்தி யாலே
எய்திடுவீர் ஆன்மவிழிப்
பென்பான் ; வாழி ; (17)

நிழலிடுவான்—ஆசையிலே
நெருங்கிச் சென்றால்
நீங்கவைத்து வேடிக்கை
பார்த்து நிற்பான் ;
அழவிடுவான் கண்கலங்கி,
அதைவி டுத்து
அடசரிதான் வேண்டாம், போ
எனத்தி ரும்பில்,
தொழவிடுவான் நிழல்தொடர்ந்து
நமது காலைத்
தொடவிடுவான் ; அனுபவப்பே
ரறிவு தந்து
வழிவிடுவான் ; துறவுப்பால்
ஊட்டி ஊட்டி
வளர்த்திடுவான் வாழி! அவன்
மதமும் வாழி ! ! (18)



# திருப்புகழ்ப் பெருமை

தவத்திரு. சுந்தரசுவாமிகள், கௌமார மடாலயம், கோவை, 6.

புகழ் என்பது பொதுவாகவும், ''திரு'' என்ற சொல் சேர்ந்து சிறப்பாகவும் வழங்குகிறது. ''புகழ்'' என்ற சொல் கீர்த்தி, துதி, பெருமை, முதலான பல பொருள்களை உடையது. மலை, கடல், ஆறு, சோலை, மாட மாளிகை முதலியவற்றைச் சிறப்பித்துக் கூறுவது ஒன்றும், அரசர், செல்வர், கொடை வள்ளல்கள், முதலானவரைச் சிறப்பித்துப் பித்துப் பாடுவது, ஒன்றும் ஆக இருவகையும் ''புகழ்'' என்பதன் பகுதியேயாகும். இவை இரண்டும், ஒருகவிஞன் மற்ற புலவர்கள் படித்து மகிழ்ச்சி அடைவதற்காகவோ, தான் விரும்பும் பொருளை அடைவதற்காகவோ, பாடப் பெறுவது. இதனல் பாடிய கவிஞனுக்கு உடலின்பமடைவதேயன்றி, உயிருக்கு எவ்விதப் பயனும் உண்டாவதில்லை. எல்லாம் வல்ல இறைவனையோ, இறைவனோடு ஒத்த அருளாளர்களையோ, கூறும் புகழே புகழாகும். இந்தப் புகழ்தான் உயர்ந்த புகழ். இதற்குத்தான் ''திரு'' என்ற அடைமொழி சேர்த்து ''திருப்புகழ்'' எனச் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இதைப் படித்தலும் பூசித்தலும், உயிர்க்குறுதி பயக்கும் எனப் பலராலும் பாராட்டிச் சொல்லப்படுகிறது. ''திருப்புகழ்'' என்பது, தெய்வப் புகழாகும்.

அத்தகைய புகழ்ப்பாடல்களில் அப்பர், சம்பந்தர், சுந்தரர் அருளியவற்றைத் ''தேவாரம்'' எனவும், மாணிக்கவாசகர் அருளியவற்றைத் ''திருவாசகம்'' ''திருக்கோவையார்'' எனவும், ஆழ்வார்கள் அருளியவை ''திவ்வியப் பிரபந்தம்'' எனவும், நக்கீரர் இயற்றிய முருகன் பாடலைத் ''திருமுருகாற்றுப்படை'' எனவும், அருணகிரிநாத சுவாமிகள் பாடியவை, ''திருப்புகழ்'', ''திருவகுப்பு'' எனவும், வழங்குவது காண்கிறோம். இராமலிங்க சுவாமிகளும், ''அம்பலப் பாட்டே அருட்பாட்டு, அல்லாதார் பாட்டெல்லாம் மருட்பாட்டு'' என்றே கூறினர். அருளுடைய இறைவனைப் பாடாமல்; மருள் வயப்பட்டோரைப் பாடுவதும், படிப்பதும், பயனற்றதேயாம். ஆகவேதான் ''பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின்'' என்றார் சுந்தரர், ''வஞ்சகலோப மூடர்'' என்ற திருப்புகழில் ''வந்தியர் போல வீணில்— அலையாதே'' என்றார் அருணகிரிநாதர். இறைவன் புகழே பொருள் சேர் புகழ், அப்புகழ் பற்றியே பேசுவாரிடம் ''இருள் சேர் இருவினையும் சேரா'' என்று கூறினர் திருவள்ளுவர். அவ்வாறு இறைவன் புகழைப் பாடுவதே பயனுடையதென்னப் பல அருளாளர்கள் கூறுகின்றனர்.

குன்றுதோறுடும், குமரப் பெருமானைக் குன்றுருச் சந்தச் செந்தமிழால், ''திருப்புகழ்'' என்ற பெயராற் பாடிப் பரவியவர், அருணகிரிநாத சுவாமிகள் என்பது யாவரும் அறிந்த ஒன்று. அவர் பாடிய திருப்புகழைப் பாடி முருகனருள் பெற்றோர் பலர். திருப்புகழின் பெயரால், அதைப் பாடிய அருணகிரிநாதரின் பெயரால், பல மன்றங்களும், சபைகளும் இன்றும், நம்நாட்டில் உள்ளன. திருப்புகழைக் கேட்கும் செவி, ஏனைய புகழில் விருப்படையாது என்பதைத் ''கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன் திருப்புகழைக் கேட்கும் செவி'' என்றே உறுதி கூறினர். மேலும், ''திருப்புகழைக் கற்க, திருப்புகழை அர்ச்சிக்க, முத்தி எளிதாகும். ''கெர்ச்சிக்கலாம்'' என்றும் பாராட்டினர் என்றால், திருப்புகழ்ப் பாடலின் பெருமையை என்னென்று கூறி முடிப்பது ?

திருப்புகழைப் பாடுவதற்குச் சிந்தையில் ''வலு'' வேண்டுமென்பர். ஏன் ? சிந்தைவலுவுடன், தேக வலுவும் வேண்டும். தேக உரமிருந்தால்தான் சிந்தை உரமும் துணைசெய்யும். அப்பாடலை அன்புடன் பாடும்போது உரமற்றவர்கட்கும், சிந்தை உரமும், தேக உரமும், தானே வரும். அருணகிரிநாதர், திருப்புகழி

லுள்ள "விகடபரிமள" என்னும் பெரிய சந்தப் பாடலை அருணகிரிநாதரே பாடியபோது கேட்ட "வில்லிபுத்தூரார்" "கோடை இடி, இடித்தாற் போல் முழக்கம் கண்டார்" என்று கூறுவதறி கிறோம். அப்படிப்பட்ட ஒலியுடன் பாடக்கூடிய சந்தப் பாடலே, திருப்புகழ் ஆகும். இன்று தெய்வக் கோவில்களிலும், இன்னிசை அரங்கு களிலும் ஒரு சிறிய திருப்புகழாவது பாடியே நிறைவு செய்வதைப் பார்க்கிறோம்.

அருணகிரிநாத சுவாமிகளைப் போலவே, சந்தத் திருப்புகழ்ப் பாடல்களை மிகவும் பாடி யவர், "வண்ணச் சரபம்" அருண்மிகு தண்ட பாணி சுவாமிகளாவர். புதிதாகத் திருப்புகழ்ப் பாடல்கள், நூற்றுக்கணக்காக, ஒவ்வொரு சமயக் கடவுளர் மீதும் பாடினர். அது கண்ட புலவர்கள், "திருப்புகழ்ச் சுவாமிகள்" என்றும் இவரைக் கூறினர். அகப் பொருளின் துறை யமையப் பெரிய சந்தயாப்பில், பலவிதமான சந்த இணைப்புடன், பாடிய தன்மை கண்டு, "வண்ணச் சரபம்" என்றனர்; இளமையி லேயே, முருகனைப் பூசித்து, பாடி வழிபட்டுத் தாசனாகிய தன்மையால், "முருகதாச சுவாமி கள்" என்றனர். இவர், திருச்செந்தூர் முருகப் பெருமான் ஆணைப்படி பாடிய பதினாறு பிரபந் தங்களில், ஒன்று "கௌமார விஜயம்" என்ப தாகும். அதன் கண்—பல பகுதி உண்டு. "செவி கொடு வினவல்" என்பது ஒரு பகுதி. அதன் முதற் பாடலில், "அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாடலைக் கேட்டு மகிழ்ந்த நீ, என், திருப்புகழ்ப் பாட்டையும் கேட்டருள்க" என்று கூறுகிறார். அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாட லுக்கும், தன், திருப்புகழ் பாட்டுக்கும், உள்ள தகுதியைப் பல உவமைகளில் விளக்குகிறார்.

திருப்புகழின் தகுதி பெரிதாகவும், தன் பாடலின் தகுதி சிறியதாகவும் உள்ளது என்று கூறும் "பணிவு"—பாராட்டுக்குரியது. ஒரு பாடலையோ, ஒரு பொருளையோ பாராட்டியோ, தாழ்வுபடுத்தியோ கூறுபவர்—அப்பொருளின் இயல்பு முற்றிலும் அறிந்தவராதல் வேண்டும். இன்றேல் அதன் தன்மையை உள்ளபடி கூற முடியாது. உதாரணமாக இன்னிசைப் பாடகர் ஒருவர் அரங்கில் பாடுகின்றார். கேட்பவர் பலர் இருந்தாலும், இசை இலக்கணம் தெரிந்த, சங் கீத ஞானமுள்ளவர்கட்குத்தான் பாடகரின், உயர்வு தாழ்வு தெரியும், நன்றாகப் பாடினால் தலைதானே அசையும். கைகள் தாமாகவே தாளம் போடும்—வாய் பாராட்டுக் கூறும். சமைக்கத் தெரிந்தவன்தான், சமைத்த பண் டத்தின் உயர்வு, தாழ்வு, உயர்ந்த காரணம், இவற்றை அறிவான். இவைபோலத் திருப்புகழ்ப் பாடல்கள் பல பாடத்தெரிந்த, திருப்புகழ்ச் சுவாமிகள், தான், அருணகிரிநாத சுவாமி களின் பெருமை அறிவார். "செவிகொடு வினவல்" என்ற பகுதியின் முதற்பாடல் வரு மாறு:

பருப்பதத் தெதிர் ஒரு
பருக்கைக்கல் உறுவதில்,
பருதிஎதிர் ஒரு மின்மினிப்
பறவை உறலிற், பரவை
நீர்க்கெதிரில் ஆன் அடி
பதிந்தகுழி நீர்நிற்றலில்,
மருப்பொலி செழுங்கமல
மலரினெதிர் நெய்தலும்
மலர்ந்திடலின், மும்மதத்து
வாரணத்தெதிர் ஏனம்
ஆரவாரம் செயலில்,
மயில்எதிரில் வான்கோழியும்
விருப்புடன் நடித்திடலின்,
விதுவினெதிரிற்குலவும்
வெண்சங்க மணியில், அருணை
மேவிய கிளிப்புலவன்
ஓதிய திருப்புகழின்
வியனெண்ணி வெட்குறுமல்,
திருப்புகழெனச் சிறிய
னேனும் பிதற்றலைச்
செவிகொண்டுவினவி அருளே!
செம்பொன் மதில் சூழ்ச்
செந்தில் எந்தாய் நினது
செவிகொண்டு வினவிஅருளே.

பருப்பதம் - பெரியமலை; பருக்கைக்கல் - சிறிய கூழாங்கல்; பரவை - கடல்; ஆன் அடி பதிந்த-பசுவின் காற்குளம்பு அழுந்திய; ஏனம்- பன்றி; விது - சந்திரன்; கிளிப்புலவன் - கிளி வடிவுடனிருந்த அருணகிரிநாத சுவாமிகள்; பிதற்றல் - மழலைப்பேச்சு.

குறிப்பு: உவமை ஏழு, 1. மலையின்முன் சிறுகல்; 2. சூரியன்முன் மின்மினி; 3. கடல் நீரின்முன் பசுக் குளம்படிநீர்; 4. தாமரையின் முன்நெய்தற்பூ; 5. யானையின்முன் பன்றியின் ஆரவாரம்; 6. மயிலின்முன் வான்கோழி ஆடல்; 7. சந்திர ஒளிமுன் சங்கு மணியின் ஒளி, இவைபோல அருணகிரிநாதர் திருப் புகழின்முன் - தன்பாடல் என்பது. ஆயினும் நீ - செவி, ஏற்றருள வேண்டுமென்பது விண்ணப்பம். ★

# மூவர் தேவாரம்

வித்துவான் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமியடிகளார்,
பேரூராதீனம், பேரூர், கோவை - 10.

தமிழகத்தில் சிவநெறி தொன்று தொட்டுச் சிறந்து விளங்குகிறது. "தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன்" என்பதே நமது ஆன்றோர் நெறி. சங்கம் மருவிய சான்றோர்களும் பெரிதாகப் போற்றிய நெறி சைவ நெறி. சிவபெருமானது கோலம், தன்மை, ஆகியன சங்க இலக்கியப் பாடல்களால் நன்கு விளக்கப்படுகின்றன. வாழ்க்கையோடு ஒட்டிய சமயச் செந்நெறியாக விளங்கியது நமது சிவநெறி.

"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பில் தாருங் கொன்றை
ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு ஒருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்
பிறைநுதல் வண்ணமாகின்று அப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே
எல்லா உயிர்க்கும் ஏமமாகிய
நீரறி வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத்
[தோற்கே.

என்னும் பாடல், மாதொரு பாகன் வடிவத்தையும் தன்மையையும் உண்மை புலப்பட விளக்குகின்றன. அம்மை அப்பனாக விளங்கும் காட்சியைச் சங்க இலக்கியம் உள்ளவாறு உணர்ந்து "நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்" என்று போற்றுகின்றது. "தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தரும் பெருமான், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளும் தன்னடியார் நிலை காட்ட, அண்டி முறையிட்ட வானோரின் அச்சத்தையும் அவலத்தையும் போக்கக் கருவிடமுண்டு இருண்ட கண்டத்தை உடையவராயினார். இதனை, மனத்திற் கொண்டு தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் அதிகமானைப் புகழ்ந்து அவன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக இருக்கும் நிலைமையினை எண்ணி, 'நீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே' என்று வாழ்த்தியுள்ளார்.

தமிழ் நாட்டின், ஏன்? இமயம் முதல் குமரி வரையுள்ள இப்பெரு நாட்டின் பெரு நெறி சிவநெறிதான், என்பதைப் பண்டைச் சான்றோர்கள் விளக்கியுள்ளனர். சங்க காலத்திற்குப் பின் இடைக் காலத்தில் தமிழ் மக்கள் பிற சமயப் பிணைப்பால் மயங்கினர். நல்லாறு தெரிந்துணரும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. புத்தம், சமணம் முதலான புதுச் சமயங்கள் அரசுத் தொடர்பால் நாட்டில் புகுந்தன. ஆனால், அவற்றின் கொள்கைகள் தமிழ் நெறிக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஒத்தனவாக இல்லை. இத்தகைய அவலப் போக்கினை மாற்றுவதற்கெழுந்தனவே மூவர் தேவாரப் பாடல்களாகும். நாட்டின் உயர்வும், பண்பும், இனிமையும் ஓங்க நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினர். சிந்தைக்கும் செவிக்கும் இனிய தேவாரம் பாடிய மூவரும், சமுதாயச் சூழுறவை உருவாக்கினர். வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை நெறிக்குச் சிவநெறி தேவை என்பதை வலியுறுத்தினர். அவர்கள் பாடல்கள் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறி"ச் செலுத்தின.

முதல் மூன்று திருமுறைகள் அருளிய ஞானத்திருவுருவாகிய திருஞான சம்பந்தர், அம்மையின் திருஞானப் பாலுண்டுபாலருவாயராய், திருநெறிய தமிழ் பாடிய பெருந்தகையாவார். திருஞான சம்பந்தர் அறிவாற் சிவனே என்பதை "எனதுரை தனதுரையாக' என அவரே அருளியுள்ளார். இவர் முதிர்ந்து

விளைந்த சிவ புண்ணிய மேலீட்டால் இளமை யிலேயே சிவஞானம் கைவரப்பெற்ற செம்மல். ஆதலால் இவர் நாவால் மறித்து எம் செவி அமுதாகவார்த்த சுவையமுதம் முதன் மூன்று திருமுறைகளாகும்.

திருஞான சம்பந்தர் பாடிய முதற் பாடல்,

"தோடுடைய செவியன் விடையேறி
யோர்தூ வெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி
யென்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்
பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மா னிவனன்றே"

என்பதாகும். இப்பாடலின் விளக்கத்தைச் சேக்கிழார் பெருமான் முதலாகப் பின்வந்த அரும்பெருஞ் சான்றோர்களும் நன்கு விரித் துள்ளார்கள்.

'தோடுடைய'—எனத் தொடங்கியது ஓங் காரத்தை முதலாகக் கொண்டு. தோடு-மகளிர் அணிகலன்; ஞானப் பாலூட்டிய அன்னையின் நினைவை உட்கொண்டது என்பர். 'விடை யேறி' - 'பிறைசூடி' - 'பொடிபூசி' என்பன முறையே, படைத்தல், காத்தல், அழித்தல்- தன்மைகளையும், "உள்ளங்கவர் கள்வன் பணிந்தேத்த அருள் செய்த பெம்மான்"- என்பன மறைத்தல், அருளல் தன்மைகளையும் குறிப்பால் உணர்த்தி நின்றன என்று கூறுவர். விடையேறி, பொடிபூசி, உள்ளங்கவர் கள்வன், என்பன முறையே, உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூன்று திருமேனிகளைக் குறிப்பால் உணர்த்துவன எனவும் பொருள் கூறுவர். இன்னும் பல்வகையாக இறைவனது தூய குணநலன்களை எல்லாம் தன்னகத்தே கொண்டு நவில்தொறும் நயம் பயக்கும் இலக் கியப் பாங்கினை எடுத்துக் காட்டும் இப் பாடல். தேவாரப் பாடல்களனைத்திலுமே, இத்தகைய அரும் கருத்துக்கள் பொதிந்துள்ளன.

தேவாரப் பாடல்கள் வாழ்வாங்கு வாழும் மக்கள் ஒன்றிய உள்ளத்தினராய் வழிபட்ட தன்மையையும், வழிபடும் நெறியினையும் விளக் குகின்றன. இவை சமுதாயக் கண்ணோட்டத் துடன் பாடிய பாடல்கள் எனலாம். திரு ஞானசம்பந்தர், இறைவனது புகழைப் போற் றிச் சிறப்பிக்கும் இடத்து அத்தேயத்து மக்களைப் பற்றியும், அவர் வாழும் நெறி பற்றி யும் குறிப்பிடுவர்.

தலவழிபாட்டில் ஈடுபட்ட திருஞான சம்பந்தப் பெருமான் திருப்புகலூருக்கு எழுந் தருளுகின்றார். இதற்கு முன்பே பல தலங்களை யும் வழிபட்டு உழவாரத் திருத் தொண்டராய், செந்தமிழ்ச் சிவநெறி வளர்க்கும் அப்பரடிகளும் அங்கு எழுந்தருளினர். அப்பரடிகள், முருக நாயனர் முதலிய அடியார் பெருமக்களுடன் எதிர் கொண்டு திருஞான சம்பந்தரை அழைத் துச் சென்றனர். சிறுத் தொண்டர், திருநீல நக்கர் ஆகிய அடியார்கள் வணங்கி மகிழ்ந் தனர். அனைவரோடும் திருப்புகலூர்ப் பெரு மான் திருக்கோயிலுக்குச் சென்றனர். முத் தமிழ் விரகராகிய திருஞானசம்பந்தர் அங்குப் பாடிய பதிகப்பாடல்—

"பண்ணிலாவும் மறை பாடலினன்
இறைசேரும் வளையங்கைப்
பெண்ணிலாவவுடை யான் பெரியர்ர்
கழ லென்றுந் தொழுதேத்த
உண்ணிலாவியவர் சிந்தையுள் நீங்கா
வொருவனிட மென்பர்
மண்ணிலாவுமடி யார் குடிமைத்
தொழின் மல்கும் புகலூரே"

என்ற பாடலில் இறைவன் மாதொரு பாகன், அடியவர் உள்ளத்து நீங்காதவன், அவன் வீற்றிருக்கும் இடம் புகலூர் என்கின் றார். புகலூர் மண்ணில், சீரும் சிறப்பும் பெற்று நல்லவண்ணம் வாழும் அடியார்கள் ஒழுக்க முடைமையாகிய குடிமைத் தொழில் செய்கி றார்கள். அத்தகையோர் நிறைந்து விளங்கு வதனாற் சிறந்தது புகலூர் என்கிறார்.

நாட்காலையில் அடியார்கள் எவ்வாறு வழிபட் டனர் என்பதை,

"கொய்து பத்தர் மலரும்
புனலுங் கொடுதூவித் துதிசெய்து
மெய் தவத்தின் முயல்வார்
உயர் வானகம் எய்தும் புகலூரே"

என்ற பாடற் பகுதியால் விளக்குகின்றார். அக்காலச் சிவநெறிச் செல்வர்கள் தாமே சென்று மலர் பறித்து இறைவனுக்குச் சாத்தி னர். புனல் கொண்டு நீராட்டினர். துதித்த னர். இடைத் தரகர்கள் போல எவரும் குறுக்கிடவில்லை. இதனையே அப்பர் அடிகளும்

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன் எனத் தமது செயலாகவும், "யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்றபோது" போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவாரையும், அவர்பின் தாம் புகுந்து வழிபட்டுக் கண்ட காட்சியையும் கூறியுள்ளார். "போதொடு நீர் சுமந்து ஏத்தி" முன்னின்று அடிகையினுல் தொழவல்ல தொண்டர் அருவினையைத் துறந்து ஆட் கொள்வார் முக்கண் எம் பெருமான் என்பதைக் கீழைத் திருக்காட்டுப் பள்ளிப் பதிகப் பாடலால் குறிப்பிடுகின்ருர் ஆளுடைய பிள்ளையார்.

திருக் கோவில்களில் மகளிர் தம் துணைவருடன் இணைந்து சென்று வழிபட்டனர். புண்ணிய வாணரும் மாதவரும் புகுந்து வழிபட்டனர். இள மகளிர் இறைவன் புகழ் சேர்ந்த உயர்ந்த பாடல்களைப்பாடி இறைவனை வழிபட்டனர் என்பதை,

"பாடக மெல்லடிப் பாவையோடும்
படுபிணக் காடிடம் பற்றி நின்று
நாடக மாடு நள்ளாறுடைய
நம் பெருமானிது வென்கொல் சொல்லாய்
சூடக முன் கை மடந்தை மார்கள்
துணைவ ரொடுந் தொழு தேத்தி வாழ்த்த
ஆடக மாடம் நெருங்கு கூடல்
ஆல வாயின்கண் அமர்ந்த வாறே"

எனவும்,

"தண்ணறு மத்தமுங் கூவிளமும்
வெண்டலை மாலையும் தாங்கியார்க்கும்
நண்ணலரிய நள்ளர்றுடைய
நம் பெருமானிது வென்கொல் சொல்லாய்
புண்ணிய வாணரும் மாதவரும்
புகுந்துடனேத்தப் புனையிழையார்
அண்ணலின் பாடலெடுக்குங் கூட
லாலவாயின் கணமர்ந்தவாறே."

எனவும், தமிழ் ஞானசம்பந்தர் அருளியுள்ளார்.

உலக இன்பங்களைத் துய்த்து வாழும் ஆடவரும், பெண்டிரும், வழிபாட்டில் இணைந்து தொழுது ஏத்தி வாழ்ந்தனர். அறவோர்களாகிய புண்ணியர்களும், பற்றற்றுத் தவஞ் செய்யும் மாதவரும், கருவறை புகுந்து ஒன்றி வழிபட்டனர். அணி மிக்கு அழகுடன் தோன்றும் மகளிர் மொழிக்கு மொழி தித்திக்கும் அருட்பாடல்களை ஓதினர் என்றும் அவரது பாடல்கள் கூறும். இப்பாடல்களின் மூலம் அன்றைய சமுதாய நல்லுணர்வை நாம் அறிகிருேம். சமுதாயத்தை நன்னெறிப்படுத்தும் பெரு நோக்கமே ஞானசம்பந்தரது திருவுள்ளக்கிடக்கை என்பதை, மருகலில் விடம் உண்டிறந்த வணிக நம்பியை உயிர் பெறச் செய்து காதலித்து உடன் வந்த வணிக நங்கைக்கு அவ்விளைஞனை மணம் முடித்த செய்தியும், மதுரையில் சமண் நீக்கிச் சைவம் வளர்த்த செய்திகளும், நாம் உணரத் திகழ்கின்றன. "ஞாலம் நின் புகழே ஆக வேண்டும் தென் ஆலவாயுறை எம் ஆதியே" என்பது அவரது அருள்வாக்கு.

தேவாரப் பாடல்களில் நான்கு முதல் ஆறு வரை உள்ள திருமுறைகளை அருளிய பெருந்தகை, பார் வாழத் திருவீதிப் பணி செய்து,

"நாமார்க்குங் குடியேல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம்
பணிவோம் அல்லோம்
இன்பமே யெந்நாளும்
துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத்
தன்மையான
சங்கரன் நற்சங்கவெண்
குழையோர் காதில்
கோமாற்கே நாம் என்றும்
மீளா ஆளாய்க்
கொய் மலர்ச் சேவடி
யிணையே குறுகினேமே"

என வீர முழக்கத்துடன் மாதவம் செய்த தென் திசை வாழ்ந்திடத் திகழ்ந்த அருளாளர் அப்பர் அடிகள் ஆவார். இவர் வரலாற்றின் மூலம் அன்றைய சமுதாயம் இருந்த நிலையும், சமயச் சார்வும் நன்கு விளங்குகின்றன. மன்னன் மகேந்திர பல்லவன் ஆட்சி சமணக் குருமார்கள் போதனைப்படி நடைபெற்றது. செந்தமிழ்ச் சிவநெறியை யாரும் உணர்த்துமாறு இல்லை. இந்நிலையை, "நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினுல்" இவர் சமண சமயம் புகுந்ததாகச் சேக்கிழார் பெருமான் கூறுவார். சமண சமயத் தொடக்குற்ற அப்பர் அடிகள், திலகவதியார் இறைவனிடம் வேண்டிக் கொண்டமையாலும், முன்னமே முனியாகித் தவம் புரிந்தமையாலும் சூலை நோயால் தடுத்தாட் கொள்ளப்பட்டார். "திருவாளன் திருநீறு திலகவதி

யார் அளித்தமையால் சிவநெறிச் செல்வராகி, திருவதிகை வீரட்டானத்தில் தம் சூலை நோய் நீங்க,

''கூற்ருயினவாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்ருய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றுதுஎன் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே''

எனப் பதிகம் பாடி வழிபட்ட செய்தியைப் பெரியபுராணம் நன்கு விளக்குகிறது.

அப்பரடிகள் வரலாற்றில் பண்டை மகளிர் துறவு, இடைவிடா நற்பணி, சமயத் தலைமை யாகியன கொண்டு விளங்கினர், என்பதைத் திலகவதியார் குண நலன்கள் மூலம் விளக்கப் படுகிறது.

இன்றைய சமுதாய மறுமலர்ச்சிக்கு அன்றே வித்திட்டவர் அப்பரடிகள். இடையருப் பேரன்பும் மழைவாரும் திருவிழியும் உடைய அப்பரடிகள், சமண் சமய நெறி நின்ற பல்லவ ஞகிய முடிமன்னனுக்குக் கட்டுப்பட்டவர் அல்லர் என்பதையும், இறைவனிடத்து மீளா அடிமைத் தன்மை பூண்டவர் என்பதையும் ''நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்'' கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க் கொய்மலர் சேவடியிணையே குறுகினோமே'' எனக் குறிப்பிடுகிருர்.

தலவழி பாட்டில் ஈடுபட்ட அப்பரடிகள்,

''நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன்னடி யேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே''

என்ற உயர்ந்த குறிக்கோளுடன் திகழ்ந்த மையைப் பெரியபுராணம் திருவீதிப்பணி செய்தார், உழவாரப் பணி செய்தார் என்று பல் காலும் பேசுவதுடன், கைத் தொண்டாகும் அடிமையினல் திருவீழிமிழலையில் வாசியில் லாக் காசு பெற்றமையும் பெருமை திகழக் கூறுகிறது. அப்பரடிகள் ஊர் ஊராக அடியார் குழாங்களுடன் சென்ருர், வழிபட்டார், பணி செய்தார். அதுமட்டுமன்று, மிகச் சிறப்புற்றிருந்த தலங்களில், பலநாள் தங்கி அண்மையிலுள்ள மக்களைச் சமயநெறியில் வாழ ஆற்றுப்படுத்தி அண்மையிலுள்ள தலங்கட்குச் சென்று வழிபட்டுள்ளார். இதன் மூலம் நாம் அவரது சமுதாய நோக்கத்தை நன்கு உணரலாம். இன்றைய சமுதாயச் சூழ்நிலையை உருவாக்க ஊர் ஊராக நடந்து சென்று ''ஊரிலுள்ள நில மனைத்தும் உலகநாதன் உடைமை. எல்லோரும் ஒருமித்து வாழுங்கள் என்று கூறுகின்றனர்'' சமுதாய நலமும் சமய நலமும் சார்ந்த சான்ருேர்கள். இதனை ஏழாம் நூற்ருண்டிலேயே உருவாக்கியவர்கள் தேவாரம் அருளிய பெருமக்களாவார். சிறப்புமிக்க ஒரு தலத்தில் பல நாள் தங்கி அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் ஒன்றுபட்டு மனநிறைவுக்குரிய வாழ்க்கையைப் பின்பற்றுமாறு செய்து தமிழ் நெறி காத்த பெருந்தகை அப்பரடிகள் ஆவர்.

''ஒன்றி யிருந்து நினைமின்க
ளுந்தமக் கூனமில்லை
கன்றிய காலனைக் காலாற்
கடிந்தா னடியவற்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுட்
சிற்றம் பலத்து நட்டம்
என்று வந்தாயென்னு மெம்பெரு
மான்றன் றிருக் குறிப்பே''

என அதனை விளக்கியுள்ளார்.

அப்பரடிகள் சமய நலங் கனிந்த சமுதாய வளர்ச்சியை விரும்பினர் என்பது அவரது அடித் தொண்டராகிய அப்பூதி அடிகள் வரலாறு காட்டுகிறது சோலை, சாலை குளம், தண்ணீர்ப் பந்தல் ஆகியவற்றை அப்பரடிகள் பெயரால் இயற்றிய சமுதாயத் தொண்டர் அப்பூதி அடிகள். இச் செயல்கள் மன மகிழ்வையும் தெளிவையும் தருவன என்பதைத் திருஞான சம்பந்தர்,

''காவினையிட்டுங் குளம்பல
தொட்டுங் கனி மனத்தால்
ஏவினை யாலெயில் மூன்றெரித்
தீரென்றிரு பொழுதும்
பூவினைக் கொய்து மலரடி
போற்றுது நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்
பெறுதிரு நீலகண்டம்''

என்று குறிப்பிடுன்ருர்.

மனிதன் மெய்ம்மையுடன் வாழவேண்டும். அன்பை வளர்ப்பவனுக இருக்கவேண்டும்.

பொய்ம்மையைப் போக்க வேண்டும். எதனை யும் தாங்கும் பொறுமையுடையவனுக வேண் டும். கிடைத்த பிறவியின் தன்மையும், தான் செய்யும் செயலும், மேல் வரும் ஊதியமும் இது வென உணர்ந்து, தான் இத் தன்மையன் என உணர வேண்டும். பிறருக்காக வாழும் பெற் றிமையால் தகுதி மிக்கவராக வேண்டும். இத்தகைய வாழ்க்கை செம்மையான வாழ்க்கை. இவற்றை வற்புறுத்துவது திரு வள்ளுவர் அருளிய திருக்குறள். இந் நெறி நின்ருர், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, யான் எனது என்னும் செருக்கற்று வானேர்க் குயர்ந்த உலகத்தில், பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னும் செம் பொருள் காண் பார்.

இதனையே அப்பரடிகள்,

''மெய்ம்மையா முழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறையெனு நீரைப் பாய்ச்சித்
தம்மையு நோக்கிக் கொண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையு ணிற்பராகிற்
சிவகதி விளையு மன்றே.

என இம்மனித சமுதாய நெறிகளைக் கூறி இதுவே சிவகதிக்கு இன்றியமையாதது என் பதை விளக்கியுள்ளார்.

உலகியல் இன்பங்களையும்; இனிய இயற் கைப் பொருள்களையும் காட்டி இதனை ஒத்தது, இதனினும் மேலானது என்றெல்லாம் விளக்கு வார், அப்பரடிகள். இறைவன் இணையடி நிழல் மிகவும் இன்பம் பயப்பது, என்பதை விளக்கும் பாடல்,

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே''

என்னும் பாடலாகும். உலகியல் இன்பத்தி லும் தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தரும் இறைவன் இனியவன். குழந்தைகளுக்குக் கனிந்த திராட்சைப் பழம் இனிமையுடைய தாகத் தோன்றும். பல் முளைத்த இளம் பருவப் பிள்ளைகட்குக் கரும்பு மிக இனிமையாகத் தோன்றும். இப் பருவங்களில் இவற்றிலும் மேலான இனிமையுடைதாகப் பிற தோன்ருது. காளைப் பருவமுடைய ஒருவனுக்கு இள மங்கையுடன் மகிழ்ந்து வாழும் இனிமையே மேலானதாகத் தோன்றும். புகழ்பட வாழும் வாழ்க்கையே உலக இன்பத்தோடு பெற விரும்புவோர் நாடு முழுவதும் தனது ஒரு குடை நிழலில் தங்கியிருப்பதையே மேலான இன்பம் எனக் கருதுவர். ஆனல் இவ்வின்பங் களெல்லாம் அவ்வப் பொழுதிற்கு இன்பமாய்த் தோன்றி, நின்றுணரில் துன்பமாய் அழிவிற் குரியதாய் இருக்கும்.

எனவே இவ்வின்பங்களைப் போலன்றி, நினைத்தொறும் காணுந்தொறும், பேசுந் தொறும் எப்பொழுதும் இனிமை பயப்பவன் இறைவன் என்பதை,

''கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க்குழற் பாவை நல்லாரினும்
தனிமுடிகவித் தாளு மரசினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை
மருதனே''

எனக் கூறியுள்ளார்.

ஏழாம் திருமுறையாகிய 'சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரம்' இறைவனிடத்துத்தாம் கொண்ட தோழமையையும் வாழ்கையோடு ஒட்டிய சமய நெறியையும் ஒருங்கிசைத்துக் காட்டுவதாகும். சுந்தரர் வாழ்க்கை, சமய மறுமலர்ச்சியை வெளிப்படுத்துவதாகும். இறை வன் தடுத்தாட் கொண்டதை,

''கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்
காம கோபனைக் கண்ணுதலானைச்
சொற்ப தப்பொருள் இருள் அறுத்தருளுந்
தூய சோதியை வெண்ணெ நல்லூரில்
அற்புதப் பழ ஆவணங் காட்டி
அடியனு என்னை ஆளது கொண்ட
நற்ப தத்தை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந் தென் நினைக் கேனே''

என உளங்கலந்து பாடுகின்ருர். ''அருச்சனை பாட்டேயாகும்'' என்று இறைவனே விரும்பிப் பாடுமாறு கூறப் பாடியவர். வாழ்க்கை நெறி யில் ஒன்றிய அனைத்தும் இறைவனருளால் பெற்றவர் சுந்தரர். தனக்கு இறைவன் இசை வடிவமாகவும் அதன் பயனுகவும் விளங்குவ துடன் உற்ற தோழனுகவும் இருந்து மனை நலம் முதலியன அருளியாட் கொண்டமையை வியந்து,

"ஏழிசையாய் இசைப் பயனுய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும்
துரிசுகளுக் குடனுகி
மாழையொண்கண் பரவையைத்
தந்தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என் ஆரூர் இறைவனையே''

என்றும்,

''பண்மயத்த மொழிப்
பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றுய பெருமானே
மற்றுரை யுடையேன்
உண் மயத்த உமக்கடியேன்
குறை தீர்க்க வேண்டும்
ஒளி முத்தம் பூணரம்
ஒண் பட்டும் பூவும்
கண் மயத்த கத்தூரி
கமழ் சாந்தும் வேண்டுங்
கடல் நாகைக் காரோணம்
மேவியிருந் தீரென்று
அண்மயத்தால் அணி நாவல்
ஆரூரன் சொன்ன
அருந் தமிழ்கள் இவை
வல்லார் அமருலகாள் பவரே''

என்றும், தமது வாழ்வுடன் பொருந்திடும் அனைத்திற்கும் இறைவனையே துணையாகக் கொண்டார்.

திருப்புக் கொளியூர் அவிநாசியில், முதலை யுண்ட பாலனை எழுப்பிய வரலாறு அவரது கருணைத் திறத்தையும், சமுதாய நலங்கருதும் பாங்கையும் வெளிப்படுத்துவன. ஊழால் இறந்தவன் சிறுவன். அதற்காகத் தமக்குத் தொடர்பில்லாத அவன் பெற்றுேர் அழுது புலம்புகின்றனர். ஆனல் அவரது கருணை யுணர்வு,

''உரைப்பார் உரைஉகந் துள்க
வல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்கா டரவா ஆதியும்
அந்தமும் ஆயினுய்
புரைக்காடு சோலைப் புக்
கொளியூர் அவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை
தரச் சொல்லு காலனையே''

என அவிநாசியப்பரை வேண்டிச் சிறுவனை வர வழைக்கின்றது.

பொன்னும் மெய்ப்பொருளும் போகமும் திருவும் தருவான் இறைவன். அதில் நாம் நல்வழிப் படாமல் மூழ்கினுல் பிழை பொறுத்து ஆட்கொள்வான். மயங்கி அவநெறிச் செல் வோமானுல் பிழை தவிரத் தண்டிப்பான். இவை சுந்தரர் வாழ்க்கையில் நடந்தவை. சமய வாழ்வு சமுதாயத்தோடு ஒட்டி வாழ்வ தற்கு உறுதுணை என்பதற்குச் சுந்தரர் வரலாறு சான்ருகும். இறைவன் தமக்குத் துணை நிற் கும் தன்மையை,

''பொன்னும் மெய்ப் பொருளும் தரு
[வானைப்
போக மும்திரு வும் புணர்ப் பானைப்
பின்னை என் பிழையைப் பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணு
எம்மானை எளி வந்த பிரானை
அன்னம்வை கும் வயற் பழனத் தணி
ஆரூரானை மறக்கலு மாமே.

எனக் குறிப்பிடுகின்ருர்.

மூவர் தேவாரப் பாடல்கள், மனங் கனிந்து, வாழ்த்தவும், வழிபடவும் துணைபுரிகின்றன. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினர் மூவரும். தமிழ் நெறி தளர்ந்தபோது அதன் தளர்ச்சி போக்கி, செம்பொருட் செல்வமாம் சிவபரம் பொருளை எளிதில் அடைதற்குரிய வழி நமக்கு, நினைப்பதும், பண்ணின் இசையாக நிற்கும் அப்பெருமானைப் பாடுவதும் தான் என்பதை எடுத்துக் காட்டுவன தேவாரம். மூவர் தேவாரப் பாடல்களிலும் இறைவன் தமிழ் கேட்கும் இச்சையுடையவன் என்பதை அறிகிருேம். ''தமிழ் கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர்'' எனச் சுந்தரர் பாடு கின்ருர். இத்தமிழ்ப் பாடல்கள், பிறவிப் பிணிக்கு மருந்தாகும். அறியாமை இருள் போக் கும் விளக்காகும். காமுகர் இளமையும் அழகும் வாய்ந்த பாவை போன்ற மகளிரது சொற்க ளால் எவ்வாறு மகிழ்வார்களோ, அதுபோல இப் பாடல்கள் உமையொரு பாகனுகிய சிவ பெருமானை மகிழ்விக்கின்றன. இது முகமன் மொழியல்ல. உண்மை. காமனை எரித்த கண் ணுதற் பெருமான் அருள் பெறும் விருப்பம் உடையவர்களது பெருவிருப்பம் இதுவாகும் என்பதை,

"ஒழித்திடுகம் பவப் பகைவிரைநீ
தள்ளாமே யோது மூதுணர் வோர்முற்
பழிச்சு பாடலை யரற்கவை
விடர்க்கிளம் பாவையர்
[உரைபோலும்
கழித்திடேல் அசாரமென் றிதனை நீ
கட்டுரையெனக் கொள்வாய்
விழித்து மாரனை யெரித்ததே வருள்
பெறும் விருப்பினர் விருப்பதே"

என எம் ஆதிகுரு முதல்வர் சாந்தலிங்கப் பெருமான் அருளி உள்ளார். இப்பாடலுக்குத் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள். "பிறவி யாகிய பகையை அதிக சீக்கிரமாக ஒழிப் போம். மூவர், மாணிக்கவாசகர் முதலிய பேரறிவினை யுடையோர் முன்னுளிலே தோத்திரம் பண்ணிய பாடல்களை நெஞ்சமே நீ தோத்திரம் பண்ணுதி,-காமுகர்க்கு இளமைத் தன்மையினையுடைய பாவை போல்வார், கொஞ்சிக் கூறும் வசனம் போல அத் தோத்திரங்கள் சிவனுக்குப் பிரீதியாய் இருக் கும். இங்ஙனம் கூறிய மொழியை உப சார மொழி யென்று நீ கருதி விடாதே, உறுதி மொழி என்று நீ அறிந்து கொள்வாய். நெற்றிக் கண் விழித்து மன்மதனை யெரித்த கடவுளது திருவருளைப் பெறும் விருப்பத்தினையுடைய மெய் அடியாரது விருப்பமும் இத்தோத்திரங் களே என்று விவேகங் கூறிற்று"– என உரை கூறியுள்ளார்.

---

# சிறப்பியற் கூட்டம்

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பில், திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பரிபூரணம் எய்தியதை முன்னிட்டு, அவர்களின் அருள்நலம் போற்றும் சிறப்பியற் கூட்டம், 9—12—71 அன்று மயிலைக் கபாலீசுவரர் கற்பகாம் பாள் திருமண மண்டபத்தில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திருமிகு. **என். கிருஷ்ணசாமி ரெட்டியார்,** B..A, B.L., அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பேரவையின் தலைவர் **தவத்திரு குன்றக்குடி அடிகளார்** M.L.C. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள். வேலூர் தேவத்தானம் கட்டளை விசா ரணை சிவத்திரு இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், தருமை யாதீன 26-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிகபரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அனுப்பியருளிய ஆசிச் சிறப்புரையினை வாசித்தார் கள். அதன்பின் அறநிலையஅமைச்சர் மாண்புமிகு **திரு. மு. கண்ணப்பர்** அவர்கள் நினைவு மலரை வெளியிட்டார்கள். அறநிலைய ஆணையர் **திரு. கே. எஸ். நரசிம்மன்,** B.A., B.L., I.A.S., அவர்கள் "திருமுறைத் திவ்வியப்பிரபந்தத் திரட்டு" நினைவுநூலை வெளியிட்டார்கள். திரு. இராம. அரங்கண்ணல், M.L.A.. திரு. அகிலன், திரு. டாக்டர் மா. நடராஜன், திரு. காட்டூர் இராமையா, திரு. கீ. இராமலிங்கனர், M.A., திரு. கோ. நீ. சிங்காரவேலு, M.A., திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L., சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம், திரு. கி.வா. ஜகந்நாதன், M.A., திரு மதி சௌந்தராகைலாசம், பேரூர் ஆதீனகர்த்தர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆகிய பெருமக்கள், அருள்நலம் போற்றிச் சிறப்புரை யாற்றினர். வாழ்த்திசையுடன் விழா இனிது நிறைவேறியது.

—ஆசிரியர்

# கடவுளியல் விளக்கும் காட்சி

## தவத்திரு. குன்றக்குடி அடிகளார், M. L. C.

இறை, எல்லா உயிர்களையும்விட மிக்குயர்ந்து மேம்பட்டது. ஆற்றலாலல்ல; ஆட்பாலவர்க்களும் திறத்தால் மேம்பட்டது. கடவுளைக் காணுமல் போகலாம். கடவுளைப் பற்றி விவாதங்கள் நிகழலாம். ஆனுல் கடவுளியலைப் பற்றி விவாதங்கள் நிகழ முடியாது. இன்று எங்கும் கடவுளியலைப் பற்றிப் பேச்சில்லை; கடவுளைப் பற்றிய பேச்சே அடிபடுகிறது. கடவுளியலைப் போற்றிப் புகழ்ந்து பேணுவாரைக் காணேம். கடவுளைப் பூசிப்பார் பலருண்டு. தமது இயலை விரும்பாமல் தம்மை விரும்புவாரைக் கடவுளும் நாடார். கடவுளியல் தண்ணளியுடையது; வேறுபாடுகளைக் கடந்தது. விழுமிய ஒருமைப் பாடுடையது. நன்றென்றே வாழ்த்தப் பெறுவது.

எம்பெருமான் "நீலகண்டன்" என்றும் அழைக்கப்படுகின்ருர். அந் நீலகண்டத்தை வண்ணத்திற் காட்டமுடியாது போனுலும், வடிவத்தில் காட்டும் தோற்றமே ஒவ்வொரு மனிதரின் கண்டத்திலும் உருளும் உருளை என்று கூறுவர். எம்பெருமான் கண்டம் உயிர்களைக் காத்தது; இன்பத்தை வழங்கியது. ஆனுல், அதன் நினைவாக விளங்கும் கண்டத்தின் உருளைகள் வாழ்விக்கப் பயன்படுவதில்லை; வண்ணமில்லையல்லவா? வண்ணமில்லாத வடிவமும் வடிவமோ? பயன் தருமோ? பயணமே பயன்படுதல் நோக்கமுடையது. கருங்கடலினின்று தண்ணீர் ஆவியாக மாறிப் பயணம் செய்கிறது. பயணத்தால் அந்நீரும் தூய்மை பெறுகிறது. நிலவுலகத்தையும் தூய்மை செய்கிறது. வானினின்று மண்ணுக்குப் பயணம் செய்கிருன் இறைவன். ஏன்? மனிதர்களை ஆட்கொண்டு அருளுதற்காகவே! மனிதனின் வாழ்க்கைப் பயணம் என்ன ஆகிறது? அவன் பயணத்தின் பயன் கருதுவதில்லை; பயன் தரத்தக்க பணிகளை மேற்கொள்ளுவதில்லை. அவனுடைய வாழ்க்கைப் பயணம், வறிய பயணம் ஆகிவிடுகிறது. மனித வாழ்க்கையின் பயன் கடவுள் நலம் பெறுதலே யாகும். இந்த ஒப்பற்ற கடவுள் நலம்-இன்ப அன்பு நலம் எளிதில் கிடைக்குமா? பூசனையால் மட்டும் பெறமுடியுமா? தன்னல மறுப்பால் பெறலாம்; பிறர் நலம் பேணும் பெருந்தவத்தால் பெறலாம். இதுவே கடவுளியலின் உயிர் நாடி. இந்தச் சமய உயிரியலின் தன்மை இன்றையச் சமய வாழ்க்கையில் இல்லை. அதனுலேயே சமய நெறிகளைப் பற்றிச் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

பதவிக்குப் பலர் போட்டி போடுவர்; ஆனுல், பதவிக்குரிய தகுதி பேணர்; தக்க பணிகளைச் செய்யார். இது மனித உலகத்தின் இயல்பு மட்டுமல்ல, அமரர் உலகமும் அப்படியே! தக்கன் வேள்வியில் அமரர்கள் தலைமை வேண்டிப் பெற்றனர். ஆனுல், அலை கடலில் ஆலகால நஞ்சு எழுந்தபொழுது அலறி ஓடினர். எந்தை ஈசன் உண்ணற்கரிய அந்த நஞ்சை உண்டான்; அமரர்களைக் காப்பாற்றினுன். நஞ்சினைத் தொடர்ந்து அமுதும் வந்தது. அமரர்கள் நாவில் எச்சில் ஊறியது. நஞ்சைக் கண்டு நடுங்கி ஓடிய அமரர்கள் அமுதுண்ண நாவாசை காட்டினர். இறைவன், அமுதுண்ண விரும்பாது அமரர்களுக்கே அதனை வழங்கினுன். அமரர்களைப் போகத்தில் ஆழ்த்தினுன். வாழ்வித்தான். இஃதொரு புராண வரலாறு. ஆனுலும் தத்துவச் செறிவுடையது. நஞ்சனைய துன்பத்தை ஏற்றுக்கொள்; தொழிற்படு; மற்றவர்களை வாழ்வித்திடு; அதுவே வாழ்க்கையின் தவம் என்பது இந்த வரலாறு புகட்டும் வாழ்க்கைத் தத்துவம்.

இந்தத் தத்துவம் உண்மையிற் செயற்படும் பொழுதே கடவுளியல் காட்சியளிக்கும். அதனுலேயே பெருமான் விடைக்கொடி உயர்த்தியிருக்கிருன். கொடி என்பது கொள்கையின் சின்னம். இறைவன் விடைக்கொடி உயர்த்தியிருப்பதன் நோக்கம் என்ன? பொருள் என்ன? உயிர் வர்க்கத்திலேயே கடுமையாக உழைக்கும் இயல்பினது விடையாகிய எருது. உழைத்த பயனையெல்லாம் மனித உலகம் உண்டு மகிழ வழங்கிவிடுகிறது அது. ஆனுல், அந்த எருதோ வெறும் வைக்கோலைத் தின்று உயிர் வாழ்கிறது. அங்ஙனம், உயிர் வாழ்தலும்கூட மீண்டும் உழைத்து உலகத்தை வாழ்விக்கவேதான்? இதுவே இறையியற் கொள்கை; கடவுளியல் காட்டும் தவம். இத்தகு வாழ்க்கை முறையை மேற்கொண்ட அணை வரும் சமய நெறியாளர்கள். அவர்கள் நெஞ்சில் இறைவன் கோயில் கொள்வான். அதுவே, விடையூர்தல் தத்துவத்தின் விளக்கம். இத்தகு வாழ்க்கை முறை என்றைக்குத் தனி மனித வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் மேம்பட்டு விளங்குகிறதோ, அன்றே கடவுளியல் உலகத்தவரால் ஒப்புக்கொள்ளப்பெறும். வேறு எந்தவகையாலும் முறையாலும் உலகம் ஒப்புக் கொள்ளாது. இதனைத் திருஞான சம்பந்தர்,

"உண்ணற் கரிய நஞ்சையுண் டொருதோழந்
தேவர் விண்ணிற் பொலிய அமுதமளித்து
விடைசேர் கொடியண்ணல்"

(முதல் திருமுறை 74–7)

என்று பாடிப் பரவிப் போற்றுகின்ருர்.

---

## நினைவு அஞ்சலி :

சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீனச் சமயப் பிரசார நிலையத்தின் சார்பில், தருமையாதீனம் 25-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைசுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள் அவர்கள், வாரணசியில் சுத்தாத்வைத சைவ சித்தாந்த முக்திப்பேறு எய்தியது குறித்து, 19—12—71 அன்று காலையில் நினைவு அஞ்சலிக் கூட்டமும், மாகேசுவர பூசையும், அன்னம் பாலிப்பும் நடைபெற்றன. மாலையில் சென்னை உயர்நீதிமன்ற நடுவர் மாண்புமிகு **ஆர். சதாசிவம்,** B.A., M.L., அவர்கள் தலைமையில் நினைவு அஞ்சலிக் கூட்டம் சிறப்புற நிகழ்ந்தது. அறநிலைய ஆணையர் **திரு. கே. எஸ். நரசிம்மன்,** B.A., B.L., I.A.S, அவர்கள் அஞ்சலி விழாவினைத் தொடங்கி வைத்தார்கள். திரு. டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம், திரு. நல். முருகேச முதலியார், B.A., திரு. கீ. இராமலிங்கனர், M.A., திரு. டாக்டர். எம். நடராஜன், திரு. வி. இரத்தின முதலியார் B.A., B.L., திரு. மேயர் கே. கமலக்கண்ணன், திரு. டாக்டர் ந. சஞ்சீவி, M.A., திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L., திரு. கி. சந்திரசேகரன், B.A., B.L., திருமதி வித்துவான் மீனுட்சிசுந்தர சிவை, திருமதி பா. இராசராசேசுவரி, M.A., திரு. கே. சி. தியாகராசன் முதலிய அன்பர்கள் பலர், அஞ்சலி உரை நிகழ்த்தினுர்கள். ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், வரவேற்புரையும், நன்றியுரையும் நிகழ்த்தினுர்கள். வாழ்த்திசையுடன் விழா இனிது நிறைவேறியது.

—ஆசிரியர்.

# மதிப்புரைகள்

## (1) திருமந்திரம்

(முதன் மூன்று தந்திரங்கள், மூலமும் குறிப்புரையும்)

சைவத் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது, திருமூலர் அருளிய திருமந்திரம். "ஞானம் முதல் நான்கும் மலர் நற்றிரு மந்திரமாலை" என இதனைச் சேக்கிழார் பெருமான், தமது பெரிய புராணத்தில் போற்றி அருளிச் செய்துள்ளார். "சக்கரவர்த்தி தவராச யோகி எனும் மிக்க திருமூலன் அருள் மேவும் நாள் எந்நாளோ" என்று தாயுமானவரும். "சாத்திரங்களுள் சிறந்தது திருமந்திரம்" என்று இராமலிங்க அடிகளாரும், முறையே திருமூலரையும், அவர் அருளிச் செய்த திருமந்திரத்தையும் புகழ்ந்து போற்றியுள்ளனர். திருமூலர், தமது யோக ஞான அருள் அநுபவங்களை எல்லாம் திருமந்திரம் என்னும் கவிதை நூலாக வெளியிட்டருளினர். முடிவான சிறந்த மந்திரங்களும், அவற்றை உருவேற்றும் முறைகளும், அவற்றிற்காக அமைக்கப்படும் இயந்திரங்களாகிய சக்கரங்களும், அம்மந்திரங் களுக்குரிய அதி தெய்வங்களும், அவற்றை வழிபடும் நெறிமுறைகளும், தவ ஒழுக்கப் பாகுபாடுகளும் பிறவும், திருமந்திரத்தில் மிக நுண்ணிய முறையில் விளக்கப்பெற்றிருக்கின்றன.

சைவத் திருமுறைகளுள் திருமந்திரம் எத்துணை அரிய பெரிய கடினமான மறைபொருள் அநுபவ நூல் என்பது அனைவரும் அறிந்தது. இத்தகைய அரும்பெறல் நூலில் பெரிதும் ஈடுபட்டுத் தாமே பலகால் தனித்துப் பயின்றும், திருவாரூர்ச் சிவயோகி சிவத்திரு மா. இரத்தின சபாபதிபிள்ளை, சிதம்பரம் சித்தாந்தப்புலவர் திரு. ந. சிவப்பிரகாச தேசிகர் போன்ற நல்லறிஞர்கள் பலருடன் பலகால் சேர்ந்துப் பழகிப் பயின்று பாடங் கேட்டுணர்ந்தும், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் நிலையில், திருச்சிராப்பள்ளிப் புத்தூர் திருவள்ளுவர் நிலையம் திருக்குறள்வேள் செந்தமிழ்ப் புரவலர் திரு. ஜி. வரதராசபிள்ளை, B. A. அவர்கள், இக்குறிப்புரை விளக்க நூலை எழுதிப் பதிப்பித்து வழங்கியுள்ளார்கள். அருஞ்சொற்களுக்கும் தொடர்களுக்கும் சிறந்தமுறையில் குறிப்புரை வழங்கியிருப் பதுடன், ஒவ்வொரு பாடலுக்கும் தனித்தனியே இனிய சுருங்கிய முறையில் பொருத்தமும் விளக்கமும் மிக்க கருத்துரையும் அளித்திருப்பது, இந்நூலின் தனிப் பெரும் சிறப்பாகும். இந்நூலாசிரியர் முன்னரே திருக்குறள் திருவாசகம் சிவஞானபோதம் என்னும் மூன்று, சிறந்த செந்தமிழ்ப் பெருநூல் களுக்கும் இனிய நல்ல உரை எழுதி வெளியிட்டு, தமிழுக்கும் சமயத்திற்கும் அரும்பெரும் தொண்டாற்றி யுள்ளார்கள். அவர்களின் வாயிலாகவே திருமந்திரம் பற்றிய, இவ்வுரை விளக்க நூல், செவ்விய முறையில் வெளியிடப்பெற்றிருப்பது, மிகவும் போற்றி மகிழ்தற்குரிய செயலாகும். எஞ்சியுள்ள ஏனைய ஆறு தந்திரங்களும்கூட, விரைவில் வெளிவர உள்ளன. மிகவும் சிறந்த பயனுள்ள நல்ல நூல், திருத்தமான அழகிய பதிப்பு. விலை ரூ. 5/- தபால் செலவு 1-75. கிடைக்குமிடம்: திருவள்ளுவர் நிலையம், 32—அலுவலர் குடியிருப்பு, புத்தூர், திருச்சி. 17.

## (2) வள்ளற்பெருமான் பிள்ளைத் தமிழ்

இந்நூலில், பிள்ளைத்தமிழ் நூலுக்குரிய இலக்கணமும் சிறப்பும் எல்லாம் பொருந்திச் செவ் விதின் அமைந்துள்ளது. வள்ளற் பெருமானின் அருமை பெருமைகளையும், அவர்தம் கருத்துக் களையும் அழகுற விளங்குகின்றது. திருவருட்பாப் பாடல்களின் சொற்பொருள் நலங்களும், சுவை நுட்பங்களும், பெரிதும் பொதுளச் செம்மையுற யாக்கப் பெற்றிருக்கின்றது. நல்ல இலக்கிய மணமும், இனிய நடையழகும், சிறந்த பக்தியுணர்வும், செவ்விய கற்பனைத்திறனும் செறிந்து; இந்நூல் எழில் மிக்குத் திகழ்கின்றது. காலத்திற் கேற்ற பற்பல புதிய கருத்துக்கள், இந்நூலின்கண் இடையிடையே பொதிந்து வைக்கப்பெற்று அற்புதமாக மிளிர்கின்றன. இதனை இயற்றிய புலவர் திரு. மா. க. காமாட்சிநாதன் அவர்களின் சிறந்த புலமை நலமும், கவிதைத் திறனும், பிறவும் பெரிதும் போற்றுதற்குரியன. விலை ரூ. 1-25. கிடைக்குமிடம்: புலவர்திரு. மா. க. காமாட்சிநாதன். 50, பெரியண்ண முதலி தெரு, சென்னை—1. —ஆசிரியர்.

# ஆலயத் தூய்மைச் சுழல்கோப்பைப் பரிசு

அவ்வவ் வட்டாரத் துணையாணையர்கள், உதவியாணையர்களின் பெயருக்கு நேராகக் குறிக்கப்பெற்றுள்ள கோயில்கள், 1970ஆம் ஆண்டின் ஆலயத் தூய்மைப் பரிசளிப்பிற்கான சுழல் கோப்பையையும், நிலையாக வைத்துக்கொள்ளுதற்குரிய பரிசுக் கோப்பையையும் பெறுதற்குரியனவாக, ந. க. எண். 13387/71/எ2, 24—11—71 தேதியிட்ட அறநிலைய ஆணையரின் உத்தரவின்படி தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளன :

| தொடர் எண்கள். | வட்டாரத்தின் பெயர்கள். | | 1970ஆம் ஆண்டின் ஆலயத்தூய்மைப் பரிசளிப்பிற்காகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள கோயில்களின் பெயர்கள். |
|---|---|---|---|
| 1. | துணை ஆணையர், சென்னை-34. | ... | ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் ஆலயம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டம். |
| 2. | துணை ஆணையர், தஞ்சாவூர். | ... | ஸ்ரீ சுவாமிநாதசுவாமி ஆலயம், சுவாமிமலை, கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| 3. | துணை ஆணையர், மதுரை. | ... | ஸ்ரீ பூவணநாதசுவாமி ஆலயம், கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம். |
| 4. | துணை ஆணையர், கோயம்புத்தூர், | ... | ஸ்ரீபட்டீசுவரர் ஆலயம், பேரூர், கோயம்புத்தூர் மாவட்டம். |
| 5, | உதவி ஆணையர், சென்னை. | ... | ஸ்ரீகாமகலா காமேசுவரி ஆலயம், திருவல்லிக்கேணி, சென்னை-5 |
| 6. | உதவி ஆணையர், காஞ்சிபுரம். | ... | ஸ்ரீ ஊன்றீசுவரர் ஆலயம், பூண்டி, திருவள்ளூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம். |
| 7. | உதவி ஆணையர், வேலூர். | ... | ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயம், காங்கேயநல்லூர், குடியாத்தம் வட்டம், வட ஆற்காடு மாவட்டம். |
| 8. | உதவி ஆணையர், கடலூர். | ... | ஸ்ரீ தில்லைக் கோவிந்தராசர் ஆலயம், கள்ளக்குறிச்சி வட்டம், தென்னாற்காடு மாவட்டம். |
| 9. | உதவி ஆணையர், சேலம். | ... | ஸ்ரீ அழகிரிநாதசுவாமி ஆலயம், சேலம் டவுன் மற்றும் தாலுக்கா. |
| 10. | உதவி ஆணையர், கோயம்புத்தூர். | ... | ஸ்ரீ கங்குவடுகநாதசுவாமி ஆலயம், தாராபுரம் வட்டம்,கோயம்புத்தூர் மாவட்டம். |
| 11. | உதவி ஆணையர், கும்பகோணம். | ... | ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி ஆலயம், திருக்கருகாவூர், பாபநாசம் வட்டம், தஞ்சாவூர், மாவட்டம். |
| 12. | உதவி ஆணையர், நாகப்பட்டினம். | ... | ஸ்ரீ மெய்கண்டமூர்த்தி ஆலயம், நாகப்பட்டினம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| 13. | உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி. | ... | ஸ்ரீ ஆம்பிரவனேசுவரசுவாமி ஆலயம், மாந்துறை, லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம். |
| 14. | உதவி ஆணையர், மதுரை. | ... | ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயம், போடிநாய்க்கனூர், பெரியகுளம் வட்டம், மதுரை மாவட்டம். |
| 15. | உதவி ஆணையர், இராமநாதபுரம், மதுரை. | ... | ஸ்ரீ கருநெல்லிநாத சுவாமி ஆலயம், திருத்தங்கல், சிவகாசி வட்டம், இராமநாதபுரம். |
| 16. | உதவி ஆணையர், திருநெல்வேலி. | ... | ஸ்ரீவைகுண்டபதி ஆலயம், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம். |
| 17. | உதவி ஆணையர், சுசீந்திரம். | ... | ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம், களக்காடு, விளவங்கோடு வட்டம், கன்னியாகுமரி மாவட்டம். |

# தமிழ்நாடு தெய்விகப் பேரவை

இந்து சமூகக் குழந்தைகளுக்குச் சமயக் கல்வி கிடைப்பது அரிதாக இருக்கிற இந் நாளில், பள்ளிக் குழந்தைகளுக்குச் சமயக் கல்வி போதித்து அந்த வகையில் போட்டிகள் நடத் திப் பரிசுகள் வழங்க வேண்டும் என்பது, தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் கொள்கைகளில் ஒன்ருகும். இந்தக் கொள்கையை இந்துத் தனியார் பள்ளிகளின் தாளாளர்கள் அனைவரையும் உறுப்பினராகக் கொண்ட துணை அமைப்பு ஒன்று ஏற்படுத்தினல்தான் வெற்றிபெறச் செய்ய முடி யும் என்பதை உணர்ந்து, இதன் முதற் கட்டமாகச் சென்னையிலுள்ள இந்துத் தனியார் நிர்வாக ஆரம்பப் பள்ளிகளின் தாளாளர்கள்-தலைமை ஆசிரியர்கள் கூட்டம் ஒன்று 11-12-71 சனிக் கிழமை காலை தமிழ்நாடு தெய்விகப் பேரவை அலுவலகத்தில், பேரவைத் தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், M.L.C., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நகரிலுள்ள பிரபல தனியார் பள்ளித் தாளாளர்கள், தலைமை ஆசிரியர்கள், பள்ளி நிறுவனங்களின் நிர்வாகிகள் ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர். முதிர்ந்த அனுபவமும், ஆற்றலும் கொண்ட பல அன்பர்கள் தமது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

நம் சமயத்தையும், சமய வழிப்பட்ட நாகரிகத்தையும் பேணிக்காக்கவும், இந்துத் தனியார் பள்ளிகளில் சமய நீதி போதனை வகுப்புக்களை நடத்தவும், மேற்படி பள்ளிகளில் பயிலும் மாணவர் களுக்கிடையே சமய நீதி போதனைகளில் போட்டி நடத்தி முதல் மாணுக்கருக்குப் பரிசுகள் வழங் கவும், மேலும் மேற்படி பள்ளிகளில் பொதுவான கல்வித் தரம் உயரப் பள்ளி அதிகாரிகள் எடுக் கும்முயற்சிகளுக்குத் துணை செய்யவும் ''தமிழ்நாடு இந்துத் தனியார் பள்ளித் தாளாளர்கள் சம யப் பேரவை'' என்ற பெயர் கொண்ட அமைப்பை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. இது தமிழ் நாடு தெய்விகப் பேரவையின் துணை அமைப்பாக விளங்கும். தமிழகத்திலுள்ள எல்லா இந்துத் தனியார் பள்ளிகளும் இதில் உறுப்பினராகலாம். இந்த இந்துத் தனியார் பள்ளிகளின் தாளாளர் சமயப் பேரவைக்கு ஒப்புதல் அளித்து, நிதி உதவி முதலியன வழங்கி ஆக்கம் தரும்படி தமிழ் நாடு தெய்விகப் பேரவையைக் கேட்டுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பள்ளிகளில் சமயப் பாடத் திட்டத்தைத் தயார் செய்ய ஒரு துணைக்குழு தேர்ந்தெடுக் கப்பட்டது. எல்லா இந்துத் தனியார் பள்ளிகளிலும் வாரம் ஒரு முறை சமயக் கல்வி-சமயச் சார் பான நீதிபோதனை செய்வதெனவும், சமய நீதி வகுப்பிற்குரிய பாடத் திட்டங்களைத் தேர்ந் தெடுத்து அச்சிட்டு வழங்குவதெனவும், எல்லாத் தனியார் பள்ளிகளிலும் ஒரே மாதிரியாக ''வாஞகி'' எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடுவதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமெனவும், பண்ணோடு திருமுறை திவ்வியப் பிரபந்தப் பாடல்களைக் கற்றுக் கொடுக்கத் தக்க ஆசிரியர்களை நியமிக்கவும், மாணவர்களைப் பள்ளியில் சேர்க்கும் விண்ணப்பத்தாளில் தமது பிள்ளைகள் சமயக் கல்வி பெறுவதில் விருப்பம் கொள்வதாக ஒப்பம் பெற்றுக்கொள்வ தெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேற்படி தீர்மானங்களைச் செயற்படுத்த எல்லா உதவிகளையும் தமிழ்நாடு தெய்விகப் பேரவை வழங்குமெனவும் முடிவு செய்யப்பட்டது.

அ. நாராயணசுவாமி,
செயலர்,

# குடமுழுக்கு விழா:

திருப்பரங்குன்றம் மலைமேல் உள்ள ஸ்ரீ காசி விசுவநாத சுவாமி ஆலயத்திற்கு 5-12-71:ஆம் தேதியன்று காலை 9-30 மணியளவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஷ கோயில், திருப்பரங்குன்றம் மலையின்மீது இருக்கிறது. மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த கோயில் ஆகும். ஷ ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமி ஆலயத்தில் இருந்த விக்கிரகங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே யாரோ விஷமிகளால் அப்புறப்படுத்தப்பட்டு வெறும் கோயிலாக இருந்தது. இப்பொழுது அந்தக் குறை நீக்கி விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. ஷ கும்பாபிஷேகத்தன்று மதுரையிலிருந்தும், விருதுநகர் மற்றும் சிவகாசி முதலான இடங்களிலிருந்தும் அன்பர்கள் பெருந் திரளாக வருகை தந்து விழாவில் கலந்துகொண்டனர். அதை அடுத்து மதுரை உதவி ஆணையர் திரு. இராமச்சந்திரன் தலைமையில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஆலய நிர்வாக அதிகாரி உயர்திரு சி. எஸ். தீனதயாளு, பி.எஸ்.சி., பி.எல். யாவரையும் வரவேற்றுப் பேசினார். பேரூர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளாரும், மதுரைக் கோட்டாட்சித் தலைவரும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

பேரூர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் பேசும்பொழுது புராணச் சிறப்புடைய ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோயிலுக்கு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்ய முயற்சி எடுத்த ஆலய அறங்காவலர்களைப் பாராட்டிப் பேசி, நக்கீரர் காலத்தில் மதுரை எப்படி இருந்தது என்பது பற்றியும், நக்கீரர் திருமுருகாற்றுப் படையை இத்திருத்தலத்தில் பாடித் தன்னையும் தன்னுடன் இருந்தவர்களையும் இன்னல்களிலிருந்து எவ்வாறு முருகன் காப்பாற்றினார் என்ற வரலாற்றையும், மக்கள் நக்கீரரைப் போலவே பயன் பெறச் சிவபெருமான், பார்வதி, சமேதராய் குன்றின் மேல் வந்த விவரத்தையும் புராண மேற்கோளுடன் எடுத்துரைத்தார்.

ஷ நிகழ்ச்சியில் அறங்காவலர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களும் கலந்துகொண்டார். ஆலய அறங்காவலர் திரு. எஸ்.டி. ராவ் அவர்கள் நன்றி கூற, நிகழ்ச்சி இனிது முடிந்தது.

# கண்ணகிக் கோட்டம்

(கண்டுபிடிப்பு)

பேராசிரியர். திரு. சி. கோவிந்தராசனுர், கரந்தை

[சென்னையில் அண்மையில் (7—11—71) நிகழ்ந்த "இளங்கோவடிகள் சிலைத் திறப்பு விழா"வில், நமது தமிழக முதல்வர் மாண்புமிகு தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள், மலை நாட்டில் மங்கலாதேவி மலையில், கண்ணகி சிலை கண்டு பிடிக்கப் பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டதனை ஒட்டி, கடிதமூலம் தொடர்பு கொண்டு யான் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, நண்பர் அவர்கள், உரிய படங்களுடன் எழுதியனுப்பிய, அரிய இனிய இவ்வாராய்ச்சிக் கட்டுரை, இங்கு மகிழ்ச்சியுடன் வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்.]

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தின் நிலையினை உள்ளவாறு அறிந்துகொள்வதற்குரிய சிறந்த இலக்கியம் சிலப்பதிகாரமாகும். சிலம்பு காரணமாக விளைந்த உண்மை நிகழ்ச்சிகளை உயிரோட்டமாகக் கொண்டு, முத்தமிழும் மணக்க, கற்பனை மெருகிட்டு, அற்புத இலக்கியப் படைப்பாகச் செய்த புலவர் இளங்கோவடிகளாவர். கோவலன் கண்ணகி ஆகிய இருவரின் வாழ்க்கையினை எழுத்தோவியமாக்க நினைத்த அடிகள், தாம் பிறந்த சேர நாட்டிலிருந்தே செய்திகளைக் கேட்டு எழுதினர் என்பதற்கில்லை. கோவலன் கண்ணகி பிறந்து வளர்ந்து வாழ்ந்த பூம்புகார், அங்குள்ள மக்களின் பழக்க வழக்கங்கள், திகழ்ந்த கலைகள், புகாரிலிருந்து மதுரைக்குச் சென்ற வழி, இடையிடையே உள்ள இடங்கள், மதுரையின் அமைப்பு, ஆட்சி நிலை, அங்குள்ள மக்களின் வாழ்வியல் ஆகியவற்றுடன், மதுரையிலிருந்து மேற்கே செல்லும் வையைக் கரைவழி, நெடுவேள் குன்றம், வேங்கைக் கானல், கண்ணகி தெய்வமான இடம் ஆகியவற்றையும் தாமே நேரிற் சென்று, கண்டும் கேட்டும் அறிந்த பிறகே காப்பியமாக எழுதியுள்ளார். இதனை, மானிடமகளாகப் பிறந்து கற்பில் சிறந்து நின்று, பத்தினிக் கடவுளான கண்ணகியின் வரலாற்றை உணர்ச்சியோடு எழுதிய ஆசிரியர், காவியத்தைப் படிப்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கருத்தோட்டமான நடையில் சமயப் பொது நோக்குடன், செய்திகளை நாட்டுப் பாகுபாட்டுடன் வகைப்படுத்தி, மனித வாழ்க்கைக்குரிய நிகழ்ச்சிகளை உள்ளவாறு புலப்படுத்தி, அறவழியே நிலைபெறும் கருத்துக்களை அடைவு செய்து, நூலை அமைத்திருக்கும் திறத்தினைக் கொண்டு அறியலாம்.

## புகாரில் புகுந்தேன்

யான் இளமையில் சிலப்பதிகாரத்தில் விருப்புடன் செலுத்திய மனத்தின் வளர்ச்சியாக, கண்ணகியும் கோவலனும் பிறந்து வளர்ந்த காவிரிப்பூம்பட்டினத்தைக் காணும் அவாவினுல், கி. பி. 1947-ல் அங்கு சென்றேன். சிலப்பதிகாரத்தில் விளக்கப்பட்ட பட்டினமும், செல்வ வளங்கொழித்த காவிரித்துறையும் அங்குக் காண்பதற்கு இல்லை. ஒரு சிறு கிராமம் கடற்கரை மணல் பரப்பிடையே அமைந்த

சவுக்குத் தோப்புகள் சூழ, மீனவர் குடிசைகள் கடலின் அலைவாய்க்கு முன்நிற்க, "காவேரி பட்டனம்" என்று அங்குள்ளவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் காணக்கிடைத்தது. பட்டினப் பாலையும் சிலம்பும் பலவாறு சிறப்பித்துக் கூறும் 'காவிரிபுகும் பட்டினம்' முழுவதும் மறைந்து அதன் பெயரும் தேய்ந்து நிற்பதைக் கண்டு மயங்கினேனாயினும், சிலம்புச் செய்திகளில் ஊன்றிய மனம் மழுங்காததினால், தொடர்ந்து பல காலங்களில் அங்கு சென்று பல பகுதிகளை ஆராய்ச்சி செய்ததின் பயனாக, ஒரு பெரிய நகரம் வணிகத்தால் சிறந்த கடல் துறையுடன் இருந்து, கடல் கொந்தளிப்பாலும் காவிரியாற்று வெள்ளப் பெருக்காலும், கடலிலும் தரையிலும் அழிந்து புதைந்து நிற்பதை ஆங்காங்கே கண்டேன். ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர், செல்வ வளத்துடன் சிறந்து நின்ற ஒரு பட்டினம், இயற்கையின் விளையாடலுக்கு இரையாகிச் சிதைந்து, சின்னங்களாக வரலாற்றில் இடம் பெற்றிருப்பதும், வரலாற்றில் குப்த வாகாடக காலத்துப் பௌத்த விகாரங்களும், சிற்பத் திறனமைந்த சின்னங்களும் இன்றும் ஓரளவு அழியாமல் இருப்பதும் என் நினைவில் நிற்க, எண்ண அலைகள் திண்மை பெற்று ஆராய்ச்சி முயற்சிக்கு வளர்ச்சியாக அமைந்தன.

## ஆராய்ச்சி அரும்பியது

இவ்வளவில், ஓவியத்திறனும், புகைப்படமெடுக்கும் தகுதியும், கல்வெட்டுகளைப் படித்தறியும் பழக்கமும், பழம் பொருள் ஆராய்ச்சிக்குரிய அனுபவமும் ஓரளவு என்னிடம் அமைந்திருந்ததால், நாடு முழுவதும் சென்று ஆராய்ச்சி செய்து, தமிழக வரலாற்றில் இதுவரையில் வெளிவராது மறைந்து கிடக்கும் உண்மைகளைப் புலப்படுத்தவேண்டும் என்னும் ஆர்வம் உண்டாயிற்று. எனவே, சிலப்பதிகாரத்தில் விளக்கப் பெறும் இடங்கள், வழிகள், ஆறுகள், மலைகள், ஆகியவற்றை முறையாக ஆராய்ந்து கண்டறியும் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டேன். காலமும் கைப்பொருளும் கிட்டியபோதெல்லாம் தொடர்ந்து ஆராய்ச்சி செய்ய முற்பட்டேன்.

## ஆராய்ச்சியின் வளர்ச்சி

கோவலன் கண்ணகியுடன் பூம்புகாரை விட்டுப் புறப்பட்டு இடையே கவுந்தியடிகள் அறிவுத்துணையாக வர மதுரைக்குச் சென்றவரையில், இடையே உள்ள வழிகளையும் இடங்களையும் முறையே, புகார் முதல் அரங்கம் உறையூர் முதல் கொடும்பாளூர் அழகர்மலை மதுரை; மதுரைமாநகர் என்ற தொடர்நிலைப் பாகுபாட்டுடன் அமைத்துக்கொண்டு, அவ்வப்போது விட்ட இடத்தைத் தொடர்ந்து சென்று கால்நடையாகவே ஆராய்ச்சி செய்தேன். மதுரைவரையில் தொடர்ந்த என் ஆராய்ச்சிக்குப் பன்னிரண்டாண்டுகள் இடையே கழிந்தன. கண்ணகி கோவலனைப் பற்றிய செய்தியோ சின்னமோ கிடைக்கவில்லையாயினும், தமிழக வரலாற்றுக்குப் புதியதாகக் கல்வெட்டுகளும், முதுமக்கள் தாழிகளும், புதிய கற்கால மக்களின் வாழ்விடங்களும், பழங்காலச் சின்னங்களும் ஆங்காங்கே காணக் கிடைத்தன.* அவற்றுள் பல பழைய தமிழகத்தின் வரலாற்றினை விரிவு செய்வதற்கு ஏற்ப அமைந்திருந்தன. அவற்றைக் கண்ட அளவில், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் முறையே சோழ பாண்டிய சேர நாட்டு மக்கள் அறியும் நிகழ்ச்சியாகவும் தெய்வமாகவும் நின்ற கண்ணகிக்குரிய நினைவுச் சின்னங்கள் எங்காவது சிதைந்த நிலையிலாயினும் இருக்கக் கூடும் என்ற எண்ணம் என் மனத்தில் ஓரிடம் பெறலாயிற்று.

## கண்ணகியின் சிலையும், கோவலன் பரம்பும்

மதுரை மாநகரைத் துருவித் துருவி யான் ஆராய்ச்சி செய்தபோது, பழைய மதுரைக்குரிய வரலாற்றுச் செய்திகளும், பகுதிகளும் கிடைத்தன. அவற்றுடன் பாண்டிய மன்னனொருவனால் வழிபாட்டுக்குரியதாக அமைக்கப்பட்டதும் மானிட வடிவில் உள்ளதுமாகிய கண்ணகியின் கற்சிலை ஒன்றினை, வடக்கு மாசி வீதியிலுள்ள செல்லத்தம்மன் கோயிலில் கண்டேன். வலது காலைக் குத்திட்டு, இடது காலை மடக்கி அமர்ந்துள்ள பாங்கில், சுமார் மூன்றடி உயர அளவில், கொண்டையாக முடித்த கூந்தலுடனும், ஆபரணம் எதுவுமின்றித் தொங்கும் தொள்ளைக்காதுகளுடனும், இடது கையில் சிலம்பொன்றை ஏந்திய தோற்றமாக கருணை பொலியும் முகத்தோற்றத்துடன் அச்சிலை இருப்பதைக் கண்ட அளவில் என் மெய்சிலிர்த்தது. "கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்"—என்று புகார்க்காண்டத்தில் இளங்கோ

*"புகார் முதல் வஞ்சிவரையில்" என்ற தலைப்பில் யான் தமிழ்ப் பொழிலில் தொடர்ந்து எழுதியுள்ள கட்டுரைத் தொடரில் காணலாகும்.

வடிகள் உருக்கமாகக் கண்ணகயின் தனிமை நிலைமையைப் பற்றி உரைத்துள்ள செய்தி உரு வெடுத்துக் கற்சிலையாக என் முன் காட்சியளித் தைப் போன்று இருந்தது. இதுதவிர, திருப் பரங்குன்றத்திற்குச் செல்லும் வழியில், மதுரை யின் தெற்கு எல்லையாகக் ''கோவலன் பரம்பு'. என்று குறிக்கப் பெறும் திடல் உள்ளது. அப் பகுதியினை யான் நன்முறையில் ஆராய்ச்சி செய்தபோது முதுமக்கள் தாழிகள் பல அங்குப் பூமிக்கடியில் இருக்கக் கண்டேன். ஒரு காலத்தில் அப்பகுதி இடுகாடாக இருந் தது என்பதைக் கண்டறிந்தபோது, கொலைக் களப்பட்ட கோவலனின் உடலும் அக்கால வழக்கப்படி, தாழியில் அடக்கம் செய்யப்பட்ட சிறப்பினலேயே அப்பகுதி ''கோவலன் பரம்பு'' என்ற சிறப்புப் பெயருடன் குறிக்கப்பட்டுள் ளது என்பது தெளிவாயிற்று. இவைகளைத் தவிர மதுரையில் கண்ணகி கோவலனைப் பற்றிய செய்தியோ சின்னமோ வேறு கிடைக்க வில்லை.

## சிலம்பு தரும் செய்தி

கோவலனை மதுரையில் இழந்த கண்ணகி, கைம்பெண்ணுக வாழ மனமில்லாமல் வெறுப் புணர்ச்சி வெறியுணர்ச்சியாக மாறிய நிலையில், தனது வலது தனத்தின் முகப்பினைத்திருகி மதுரை மீது எறிந்து விட்டு மேற்குக் கோட்டை வாயில் வழியாக வெளியேறினுள். அங்கிருந்த கொற்றவைக் கோயில் வாயிலில் தன் கைகளி லிருந்ததும், மங்கலப் பெண்டிருக்குரிய அணி களில் நீக்கப் பெருதவைகளுள் ஒன்ருனதுமான வளையல்களை மோதி உடைத்தெறிந்தாள். நடந்தாள். வையையாற்றில் நீர் நிறைந்து பெருக்கொலியுடன் ஓடியது. அதன் ஒரு கரை யாகியதும், மதுரையின் மேற்குப்புறத்திலிருந்து தொடர்வதுமாகிய தென்கரை வழியாக, ஓடி யும் நடந்தும் அவலித்தும் சென்ருள். மேடு பள்ளம் என்று பாராது மேற்கு நோக்கியே சென்ற கண்ணகி எதிரே நின்ற நெடுவேள் குன்றத்தில் அடிவைத்து ஏறினுள். மலையின் மேல் தளமொன்றில் நின்ற வேங்கை மரத்தின் கீழ் ஏங்கிய சிலை போல் நின்ற கண்ணகியை, அம்மலைவாழ் குறவர்கள் கண்டார்கள். அந் நிலையில், மதுரையில் கோவலனை இழந்த நாள் முதலாகப் பதினுன்காம் நாளில், வானவர் தேவ வுருவுடைய கோவலனுடன் அங்கே எதிர் கொள்ள ஊனுடலை விட்டுத் தெய்வமானுள். இதுவே, இளங்கோவடிகள் மதுரைக் காண்டத் தில் கண்ணகியைப் பற்றிக் கூறும் செய்திகளைக் கொண்டு அறியப்படும் சுருக்கவுரையாகும். இச்செய்திகட்குரிய வையையாறு, நெடுவேள் குன்றம் ஆகியவற்றை ஆராய்ச்சி செய்யும் முயற்சியில் ஈடுபட்டேன்.

## கண்ணகி நடந்த வழி

மதுரையிலிருந்து வையையின் ஒரு கரை யாக அமைந்த தென்கரை வழியே நடந்தால், வையை ஒரு காட்டாறு என்பதை நன்கு அறிய லாகும். இப்பகுதியில் மேற்கிலிருந்து வரும் வையைக்குத் தென்புறம் நாகமலைத் தொடர் இணையாக நீண்டு தொடர்ந்துள்ளது. நாக மலைக்கும் வையையாற்றுக்கும் இடையே மேற்கு நோக்கிச் செல்லும் கரை வழியாகிய, சோழவந்தான் வழியே, சிலம்பின் குறிப்புப்படி அமைந்த வழியாகும். இவ்வழியே வையை யைச் சார்ந்த இடங்களையே தடமாகக் கொண்டு சென்ருல் ஏறத்தாழ நாற்பது கல் தொலைவில், தேனி என்னும் ஊருக்கு முன்ன தாகவே, தெற்கே உற்பத்தியாகி, வடக்கு நோக்கி ஓடிவரும் வையையாறு, கிழக்குநோக் கிய பாங்கில் திருப்பங் கொள்ளுகிறது. இத் திருப்பத்தில் குன்றூர் (குன்னூர்) என்ற பெய ருடன் ஒரு சிற்றூர் உள்ளது. இப்பகுதிக்குத் தெற்கே ஆண்டிப்பட்டி மலைத் தொடரும், வடக்கே பழநிமலைத் தொடரும் வானளாவி எழுந்து நிற்பதைத் தொலைக் காட்சியாகக் காணலாகும். குன்றூரிற்கு மேலே அமைந் துள்ள வையையாற்றுக்குக் கரைவழி என்ப தொன்றில்லை. ஏனென்ருல், காடு கறம்புகளின் இடையே, மலைகளிலிருந்து பல அருவிகள் வந்து இடையிடையே கூடிய நிலையில் வையை ஓடி வருகின்றது,

இவ்வளவு வரையில் வந்த எனக்கு, மேலும் வையை ஆற்றைத் தொடர்ந்து அதன் தோற்றத்தினைக் காண வேண்டுமென்னும் அவா உண்டாயிற்று. அதற்கென்று மதுரை மாவட்ட வரைப்படத்தைக் கொண்டு அதில் குறித்தபடி செயலாற்ற முற்பட்டேன். ''பள் ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது'' என்னும் பழமொழியின் உட்பொருளை வரைபடத்தினைப் பின்பற்றியதால் அறிய முடிந்தது. எனவே, வழக்கமாக நடந்து செல்லுவதற்கு ஏற்ற வழி களை அவ்வப்போது குறிப்பாகக் கொண்டு இரண்டாண்டுகளளவில் இப்பகுதிகளைப் பல வழிகளில் சென்று ஆராய்ச்சி செய்யலானேன்.

சைய மலையில் பிறந்து வழிந்தும் நெளிந் தும் குதித்தும் ஓடிவரும் வையை ஆற்றினைச்

சூழ்ந்த இயற்கை, அடுக்குத் தொடர் மலை களாகவே இருக்கின்றன. மலைகளின் அடி வாரப் பகுதிகளுடன் தொடர்ந்து பரந்து கிடக் கும் தரைப் பகுதியே கம்பம் பள்ளத் தாக்கு என்று பொதுவாகக் கூறப்படுவதாகும். கம்பம் பள்ளத்தாக்கின் தென்கிழக்குப் பகுதி ''வர்ஷ நாடு'' என்று பெயர் பெறும். இங்கு மழை மிகுதியாதலால் மழை (வர்ஷ) நாடு என்று பெயர் பெற்றுள்ளது.

## நெடுவேள் குன்றம்

இம் மழைநாட்டின் மலைச்சரிவே வையை யின் தோற்றப் பகுதியாகும். இங்குக் காடுகள் மிகுதியாக உள்ளன. யானைகளின் புழக்கமும் அதிகம். இப்பகுதியில் அமைந்த மலைகளைச் சுருளி மலைத்தொடர் என்று குறிப்பிடுவர். சுருளி மலைகளின் தொடர்ச்சியாகவே, வான ளாவிச் செங்குத்தாக இருக்கும் முகடுகளோடு கூடிய மலைகளை ஏழு மலை என்பர். அடர்ந்த காடுகளும், கொடிய விலங்குகளும் நிறைந்த இம்மலைகளின் முற்பகுதியில், காடுகளும் அருவி களும் நிறைந்த உச்சிச் சரிவொன்றின் தடத் தில், முருகன் கோயிலொன்று உள்ளது. இக் கோயிலே பழமையான முருகன் கோயிலாகும். இப்பகுதி யில் சித்தர்கள் இன்றும் நிலவுவதாக மக்கள் நம்புகின்றார்கள்.

பண்டைத் தமிழர் முருகனை, நெடுவேள் என்று குறித்திருப்பதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. எனவே, அக்காலத்தில் இம்மலை நெடுவேள் குன்றம் என்ற பெயருடன் விளங்கியிருந்ததென்பதை முருகன் கோயில் உள்ளதைக் கொண்டு ஊகித்தறிய முடிந்தது. இப்பெயர் காலப்போக்கில் செங்குன்று என்று மாறியுள்ளதை அடிவாரப் பகுயில் செங்குன் றூர் என்ற பெயருடன் ஊர் ஒன்று இருப்பதைக் கொண்டு அறிந்தேன். அப்பெயரும் நாளடை வில் வழக்கொழிந்து, சுருண்டுவிழும் அருவி யின் பெயரால் சுருளருவிமலை என்று குறிக்கப் பட்டு அதுவும் தேய்ந்து இன்று சுருளிமலை என்ற அளவில் குறிக்கப்படுகின்றது. இவ்வாறு, மக்களின் குறிப்பிற்கேற்ப அவ்வக் காலங்களில் ஏற்ற பெயர்களைப் பெற்றுள்ள மலையே நெடு வேள் குன்றம் என்பதைத் திட்டவட்டமாக அறிய முடிந்தது.

இம்மலைத் தொடரே நெடுவேள் குன்றம் என்பதற்கு இயற்கையமைப்பும் ஏதுவாக இருக்கின்றது. வர்ஷ நாட்டுப் பள்ளத்தாக் களவிலும் வையையின் கரையினை வழியாகக் கொண்டு வந்த கண்ணகி, மேலும் செல்ல வேண்டுமாயின் அடர்ந்த காடுகள் நிறைந்த அடிவாரப் பகுதி வழியாக மலைத் தொடரின் இடையே எங்காவது ஓரிடத்தில் ஏறுவதைத் தவிர வேறுவழியே இல்லை. அத்தகைய முறை யில், ஆண்டிப்பட்டி மலை என்ற பெயருடன் கிழக்கிலிருந்து தொடரும் மலை, சுருளி மலை யாகி, ஏழுமலையாகத் தெற்கே வளர்ந்து மேற்கு நோக்கித் திருப்பங் கொண்டு உயர் அடுக்குப் பெருமலையாக நீண்டு, மேற்குக் கோடியில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கித் தொடரும் பழநிமலைத் தொடருடன் இணைவு பெற்று மேற்குத் தொடர்ச்சி மலையின் தொடக்கமாக அமைந்துள்ளது. இவ்விணைவுப் பகுதி தாழ்ந் திருப்பதினாலேயே அங்கு குமுளிக்குச் செல்லும் மலைச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, சுற்றிவளைத்துச் சுவர் வைத்த தைப்போல மலைகள் சூழ்ந்துநிற்க, பள்ளத் தாக்கில் வைகை ஆற்றைத் தொடர்ந்து வந்த கண்ணகி மேலும் செல்ல முயன்றால், சூழ்ந்து நிற்கும் மலைத்தொடரில் எங்காவது ஓரிடத்தில் குறுக்கே மலைமேல் ஏறியே ஆகவேண்டும்.

சிலப்பதிகாரச் செய்திகட்குப் பொருத்த மான வையைக்கரை வழியும், மலையும் இவ் வாறு, இயற்கையாகவே அமைந்திருப்பதைக் கண்டு சிந்தித்தேனே தவிர, இப்பகுதிகளில் கண்ணகிக்குரிய சின்னமோ செய்தியோ கிடைக்கவில்லை.

## மங்கலதேவி -- கல்வெட்டு

எனவே, பலதடவைகள் அப்பகுதிகட்குச் சென்று ஆராய்ச்சி செய்ததின் பயனாக, கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள பழைய கோயிலொன்றின் புறத்தே ஒற்றைக் கற்பலகையில் வெட்டப்பட் டுள்ள கல்வெட்டொன்று கிடைத்தது. அதில் பிற்காலச் சேரமன்னருள் குலசேகரப் பெருமாள் என்ற பெயருடைய மன்னனின் அறமாக, மங் கலாதேவி அம்மன் கோயிலுக்கு நிபந்தமாக்கப் பட்ட நன்செய் புன்செய் நிலங்களைப் பற்றிய செய்தி குறிக்கப்பட்டிருந்தது,

மங்கலாதேவி என்பது, கண்ணகிக்குரிய பெயராகுமென்பதை, இளங்கோவடிகள், அடைக்கலக்காதையில் '' மங்கலமடந்தையை நன்னீராட்டி'' என்று குறித்திருப்பதைக் கொண்டும், வரந்தருகாதையுள், ''மங்கலா தேவி கோட்டம்'' என்னும் தொடருக்கு உரை யாசிரியர் '' கண்ணகிக் கோட்டம்'' என்று

பொருள் தருவதைக் கொண்டும், கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது, மங்கலாதேவி அம்மன் கோயில், கண்ணகிக்கு உரிய கோயிலாகும் என்பதை யுணர்ந்த நிலையில், அக் கோயில் எங்குளது என்பதை அறிய முற்பட்டேன்.

பலநாட்கள் ஊக்கமுடன் முயன்றதன் பயனாக, அங்குள்ள உயர் அடுக்குப் பெருமலை களின் இடையேயுள்ள ஒரு மலைக்கு மங்கலா தேவிமலை என்ற பெயர் உண்டு என்பதுடன், மலைமேல் காடுகளுக்கு இடையே இடிந்தகோயி லொன்று புதரடைந்து கிடக்கின்றது என்பதை யும் கேட்டறிந்தேன். அம்மலைப்பகுதி பாண்டிய நாட்டு எல்லையிலிருந்து தொடர்ந்து சேரநாட்டு எல்லைக்குள்ளும் வளர்ந்து செல்லும் சுருளிமலை உயர் அடுக்குத் தொடரில் சேரநாட்டெல்லையுள் இருப்பதாகும்.

அம்மலையையயும் அடிவாரத்தின் கிழக்குப் புறத்தில் தொடங்கி ஓடும் வையையாற்றின் இயல்பையும் ஒருங்கே கண்டு சிந்தித்தபோது வையையைப் பின்பற்றிவந்த கண்ணகி தொடர்ந்து அடிவைத்து ஏறிய மலைப்பகுதி இதுவேயாகுமென்பது என் கருத்திற்குத் தெளி வாயிற்று. அடிவாரப் பகுதியில் "பளிங்கர்" என்னும் பழங்குடிமக்கள் இன்றும் வாழ் கின்றார்கள். இவர்களின் மூதாதையர்களே சிலப்பதிகாரம் குறிக்கும் வேட்டுவர்கள் ஆவர்.

கி.பி. 1963ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் மங்கலதேவிமலைமீது சென்று, சிதைந்திருக்கும் கோயிலை ஆராய்ச்சி செய்ய ஆவன மேற் கொண்டேன். என் மாணவர் முத்து. கந்த சாமி என்பவருடன், 16-11-63 ஆம் நாள் அம் மலை யாராய்ச்சிக்கு இலக்காகக் கம்பம் பள்ளத் தாக்கி லமைந்த மேலக் கூடலூரில் சென்று தங்கினேன். மலை ஏறுவதற்கு உதவியாக, அம் மலைப்பகுதிகளில் வேட்டையின் பொருட்டுச் சென்று வருபவரும், மலைப்பகுதி முழுவதையும் நன்றாக அறிந்தவருமாகிய வேட்டைக்காரர் இராமன் என்ற கன்னட மொழியாளரைத் துணைக்கு அமர்த்திக்கொண்டேன்.

மறுநாள் (17-11-63-ல்) காலை நான்குமணி யளவில், மலையேறுவதற்குப் புறப்பட்டேன். அவ்வூர் இளைஞர் சிலரும் துணையாக அமைந் தார்கள். அடிவாரம் ஊரிலிருந்து மூன்றுகல் தொலைவாகும். இடையே குறுக்கிடும் முல்லை யாற்றையும் காட்டாற்றையும் கடந்து செல்ல வேண்டும். ஆறுகளைக் கடந்து செல்லும்போது தரையில், கூட்டமாக வந்து சென்றுள்ள யானை களின் அடிச்சுவடுகள் நிறைந்து காணப் பட்டன. அவைகளால் சிதைக்கப்பட்டிருந்த மரஞ்செடி கொடிகளைக் கண்ட அளவில் அண் மையில் யானைகள் இருக்கக்கூடுமென்ற அச்சம் உண்டாயினும், ஊக்கம் உறுதி கொள்ள மேலும் நடந்தேன். பசும்புற்களுடன் புதர்க் காடுகளும் நிறைந்த கரம்பிடங்களில் வருடை என்னும் மலையாடுகள் அங்கு மிங்கும் மேய்ந்து கொண்டிருந்தன. அடிவாரத்திலமைந்த கறடு ஒன்றிலிருந்து கிழக்கே பார்த்தபோது கண் ணுக்கெட்டிய தொலைவில் யானைகள் நின்று கொண்டிருந்தன. மலையின் அடிவாரத்திற்கு நாங்கள் வந்தபோது காலை மணி ஏழு ஆயிற்று.

அடிவாரப் பகுதியிலுள்ள காடுகளிலும், மேன்மேல் உயர்ந்து அடுக்கடுக்காக நிற்கும் மலையிலும் யானைகளின் புழக்கமும், புலி கரடி போன்ற விலங்குகளின் இருப்பும் அதிகமா யினும், பல நூற்றாண்டுகளாக மறைந்து நின்ற உண்மையொன்றினைக் கண்டுபிடிக்கும் ஆர் வத்திற்கு முன்னர் அச்சம் நிற்கவில்லை. அடி வாரத்திலிருந்து சரிவாக உயர்ந்து செல்லும் மலையில் ஏறிய பின்னர், தொடர்ந்து மடிப்பாக உயரும் மலைகளில் ஏறினோம். அங்கு ஓரிடத்தை உடன்வந்த இளைஞரொருவர் சுட்டிக்காட்டி "பத்து நாட்களுக்கு முன்னே விறகு வெட்ட வந்த ஆளைக் காட்டுயானை பிடிச்சு மிதிச்சுக் கொன்ற இடம் இதுதான், சேதிகேட்டு யானை போன பிறகு வந்து பார்த்தோம்" என்றார். செய்தியும் இடமும் சிந்தனைக்குரியதாயினும் முயற்சி குறையவில்லை. வழியென்று ஒன்று இல்லை. ஏறுவதற்கு இயைந்த பகுதிகளே வழி யாக அமைந்தது. மழைக் காலமாதலால், மழை பெய்து கொண்டே இருந்தது. வழியெல்லாம் "போதை" என்று பெயர் கூறப்படும் மலைப் புல் உயர்ந்து வளர்ந்து காடாகவே நிரம்பி நின்றது. புற்களுக்கிடையே வழிவகுத்துச் செல்லும்போது கால்களிலும் கைகளிலும் அட்டை என்னும் பூச்சிகள் கடித்துக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சிப் பருத்துத் தொங்கின. மேலும் ஏறினோம்.

மூன்றாவதாக உயர்ந்திருந்த அடுக்கமலை யின்மீது ஏறும்போது, மேகப் படலங்கள் மலையையும் எங்களையும் மறைத்துத் தவழ்ந்து சென்றன. இம்மேகப் படலங்களை அங்குள்ள வர்கள் 'மஞ்சு' என்பர். எப்படியோ மலை

உச்சிக்கு வந்து விட்டோம். உச்சியின்மேல் தளம் சற்றே பரப்புடையதாக அமைந்து செல்லு கின்றது. அப்பகுதி சேர நாட்டிற்கு (கேரளா விற்கு) உட்பட்டதாகும்.

## வேங்கைக்கானல்

உச்சிப்பரப்பில், தொலைக்காட்சியாக வான ளாவி உயர்ந்து திட்டாக நிற்கும் காடொன்று, மஞ்சு சூழ்ந்து அழகுடன் தெரிந்தது. கூப்பாடு போட்டால், எதிரொலி அக்காட்டிலிருந்து எதிரொலித்தது. அப்பொழுது வேட்டைக் காரர், எதிரொலிவரும் காட்டைச் சுட்டிக் காட்டி ''இதுதான் வேங்கைக் கானல்'' ''அதுக் குள்ளேதான் மங்கலாதேவி குடி இருக்கு'' என்றூர். (குடி-கோயில்). இவ்வுச்சிப்பகுதியின் உயரம் மதுரை மாவட்டக் குறிப்பேட்டில் (Madura District Gazetteer. A. D. 1906.) 8200— அடி என்று குறிக்கப்பட்டுள்ளது.

## பேரியாறு

இங்கிருந்து சுற்றிலும் பார்த்தால், கிழக்கே செங்குத்தாக உயர்ந்துள்ள முகடுகளிலொன்றி லிருந்து அழகான அருவியொன்று வானத் திலிருந்து வழிவதைப் போல் இரைச்சலுடன் விழுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக் கின்றது. அவ்வருவிவிழும் தடத்திலிருந்து மடிப்புமலைகளினிடையே பல சிறிய அருவிகள் வழிந்து வருவது, மலைக்கு வெள்ளித்தூண்கள் நிறுத்தியதைப்போல் தோற்றமளிக்கின்றன. இவ்வருவிகளோ வையையின் தோற்றத்திற்கு உரியதாகும். அடிவாரத்தில் பல குடிசைகள் காணப்பட்டன. அவைகள் 'பளிங்கர்' என்னும் வேடர்களாகிய பழங்குடிமக்களின் வாழ்விடமாகும். மலையின் மறு பக்கத்தில், தெற்கே பத்துக்கல் தொலைவில் அடுத்தடுத்து இறக்கமாக அமைந்து செல்லும் மலையமைப்பின் அடிவாரத்தில் காடுகளுக்கிடையே பள்ளத் தாக்கில் வளைந்தோடும் பேரியாறு (பெரியாறு) மெருகிட்ட வெள்ளிக்கம்பியை, கருத்து நிற்கும் காடுகளுக்கிடையே நெளித்து வைத்ததைப் போல் காட்சியளித்தது.

## மங்கல வாயில்

இத்தகைய மேலான வரலாற்றுச் சிறப் புடைய காட்சிகளைத் தொலைகாட்சியாகக் கண்ட பிறகு, வேங்கைக்கானலை நோக்கி நடந்தோம். வழியில் புதர்களுக்கிடையே சிற்ப வேலைப்பாடமைந்த மூன்று கற்கள் ஓரிடத்தில் கிடந்தன. அவைகள், மங்கலதேவி அம்மன் கோயில் இருப்பதற்குரிய அறிகுறியாக ஒரு காலத்தில் அமைக்கப்பட்டிருந்த மகரதோரண மங்கலவாயிலாகும். அவ்விடத்திலிருந்து அரை

கண்ணகிக் கோட்டத்தின் மேற்குவாயில்

நாழிகை நடந்தால் வேங்கைக்கானலை அடைய லாம். அப்பொழுது முற்பகல் மணி பதினொன்ரு யிற்று. வேங்கைக்கானலை அடைந்தோம். அங்கு புதரடைந்து கிடந்த கல்லடுக்குகளின் மேல், குறுக்கே ஒரு நீண்ட பாறைவைக்கப் பட்டு வாயிலாக அமைக்கப்பட்டிருந்த வழியைக் கண்டோம். அதுவே கோட்டத் திற்குரிய மேற்குவாயிலாகும். யானைகள் உள்ளேவராமல் அமைக்கப்பட்டிருந்ததால் வழி சிறியதாகவே இருந்தது.

## பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்

கோட்டம் ஏறத்தாழ இருநூறடி சதுரமாகக் கோலப்பட்டிருந்தது. சுற்றிலும் கற்பாறைகளை அடுக்கி அமைத்த மதில், காலத்தாலும் யானை களாலும் சிதைந்தும் சிதைக்கப்பட்டும் புதர டைந்து கிடந்தன. உள்ளே, மரங்களும் புதரும் போதைப் புற்காடும் நிறைந்திருந்தன. குவித்துவைத்ததைப் போன்ற புதர்கள் அங்கு மிங்குமாக நான்கு இருந்தன. அவைகளில் அடர்ந்து நின்ற செடி கொடிகளை ஓரளவு அகற்றிய போது மூடிக்கிடந்த கற்படை அறை கள், திரையை விலக்க, தெரிந்த பழைய சித்திரம்போல் காணப்பட்டன. இவ்வாறு கோட்டத்தினுள் இருந்த கற்படைக் கோயில் களுள் காட்சிக்குத் தலைமையானதாகத் தோன்றியதைக் கிடைத்துள்ள நேரத்திற்குள்

ஆராய்ச்சி செய்யலானேன். மழையும் பெய்து கொண்டே இருந்தது.

கோட்ட'த்தினுள்ளே சிறிய அறைகளாகவே தனித்தனியாக நான்கு கட்டிடங்கள் இருந்தன. அவைகளையே கோயில்களாகக் கூறலாம். அவைகளின் நடுவே மரங்கள் முளைத்தொழுந்து வேரூன்றிநின்றதால் கட்டிட அமைப்பு சிதைந்துள்ளது. கோட்டத்தின் நடுவாக அமைந்திருந்ததும் தோற்றத்திற்குப் பழமையானதுமான கோயிலின் வாயில் நிலைச் சட்டக்கற்களிலொன்றில் பழைய வட்டெழுத்துக் கல்வெட்டொன்று தேய்ந்து போன எழுத்துக்களுடன் இருந்தது. படியெடுத்துக் கொண்டேன். மூன்றடி உயரமுள்ள உள் மதிலில் உள்ள கற்களில், கி. பி. பத்தாம் நூற்றுண்டில் ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களின் தமிழ்க் கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. இவைகளேயன்றிக் கோட்டத்தின் உட்புறத்தே இடிபாடுகளுடன் கிடக்கும் கற்களிலும் தமிழ்க் கல்வெட்டுகள் ஆங்காங்கே கிடைத்தன. கோட்டத்தின் கிழக்கு வாயிலுக்கு அடிப்படையிட்டுத் தொடங்கிய வேலை சட்டக்கல் நிறுத்தப்பட்ட அளவில் அரைகுறையாக நின்று புதரடைந்து சிதைந்துள்ளது. அவ்வாயிலுக்கு உட்புறம் சுருள்யாளிக் கல்லடைவுகளுடன் அழகிய படிக்கட்டொன்று இருப்பதைப் புதர்களைக் களைந்து கண்டு பிடித்தேன். வாயிலும் படிக்கட்டும் பாண்டியர் காலச்சிற்பத் திறனுடன் இருந்தன. இப்பகுதியில் சந்தன மரங்கள் செழித்து வளர்ந்துள்ளன. அதைச் சார்ந்து வெளியே மிகப்பெரிய வேங்கை மரங்கள் அடர்த்தியாக வளர்ந்து புதரடைந்து நின்றன. எனவேதான் அம்மலையடவி, வேங்கைக்கானல் என்று பெயர் பெற்றுள்ளது. அடவியைச் சார்ந்துள்ள தடத்தில் சிறிய சுனையொன்றும் நீர் நிறைந்து நின்றது. இவற்றையெல்லாம் வரைபடமாகவும், செய்திகளாகவும் என் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொண்ட பின்னர், மலையைத் தழுவிய நிலையில் இடையீடின்றி எங்களையும் கோயில்களையும் மறைத்துச் செல்லும் மஞ்சு என்னும் மேகப் படலங்களுக்கு இடையில், ஓயாத மழையில் இயன்ற அளவில் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டேன்.

கற்படைக் கோயில்

கண்ணகிக் கோயிலின் ஒரு பகுதி

### பத்தினிப் படிமம்

கோட்டத்தின் நடுவே அமைந்த கோயிலின் உட்புறத்தில், இடிபாடுகளுக்கு இடையே, பெண்சிலையொன்று சிதைந்து கிடந்தது. அச்சிலை இரண்டுகைகளுடன் விரித்த முடி, குழையணிந்த காதுகள், இடதுகாலை

மடக்கி வலதுகாலை ஊன்றிய நிலையில் அமர்ந்த பாங்கு ஆகிய அங்கங்களுடன் அமைக்கப்பட்டிருந்தது. சிலை செய்யப்பட்டிருந்த கல் திண்மையற்றதாக இருந்ததால் பல பகுதிகளாக உடைந்துவிட்டது. சிலையின் முழு அமைப்பும் இரண்டடிக்குட்பட்ட அளவுள்ள ஒரே கல்லில் புடைப்புச் சிற்பமாகச் செய்யப்பட்டதாகும். சிலை வைக்கப்பட்டிருந்த பீடத்தில் பெண் பூதங்கள் சுமப்பதைப்போன்று சிற்பம் செதுக்கப்பட்டிருந்தன. சிலையின் அழகிய மார்பகத்தில் இடதுபுறம் சிறியதாகவும் வலதுபுறம் எடுப்பான தோற்றமுள்ளதாகவும் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



கோயிலின் முகப்பு

சிலையமைப்பு, சிற்பத்திறன், மார்பக வேறுபாடு, கோட்டத்தின் கட்டிட அமைப்பு, பழைய வட்டெழுத்துக் கல்வெட்டு, வேங்கைக் கானல், இவைகளுடன்; மலைவளங் காணவந்த சேரன் செங்குட்டுவனுக்கு மரியாதைப் பொருளாக அம்மலையில் வாழும் வேடர்கள் எடுத்துச் சென்ற, புலிக்குட்டி, கரடிக்குட்டி, யானைக் கன்று, அகில், சந்தனம், வருடை ஆகிய பொருள்கள் இன்றும் மலைவளப் பொருளாக அங்கு இருக்கும் இயற்கைநிலை ஆகியவற்றைக் கொண்டு, சிலப்பதிகாரச் செய்திகளோடு ஒப்பிட்டு, வாசகர்களே சிந்திப்பார்களாயின், கண்ணகி தெய்வமான இடத்தில் வேங்கைமர அடவியுள் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் சேர மன்னன் செங்குட்டுவன் ஆணையிட்டபடி நூல்நெறிமாக்கள் ''பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்'' இதுவேயாகும் என்பதும், அதில், இமயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கல்லில் கைவினை முற்றிய தெய்வப்படிவமாகச் செய்யப்பட்டதும், மங்கலதேவி என்று வழங்கப்பட்டதும், இன்று சிதைந்து கிடப்பதுமாகிய பெண்படிமமே கண்ணகிப்படிமமாகும் என்பது நன்கு புலனாகும்.

கண்ணகியின் சிலையமைந்த கோயிலுடன், பின்னர் பல்வேறு காலங்களில் அமைக்கப்பட்ட சிறிய கற்படைக் கோயில்களையும் யானைகள் சிதைக்காவண்ணம், அப்பரப்பிடத்தை வளைத்துக் கல்லடுக்கு மதிலால் காவல் செய்துள்ள தகுதியால் கோட்டம் என்று குறிக்கப்பெறும் கண்ணகிக் கோட்டம் இதுவேயாகுமென்பதும் தெளிவாகும்.

## மங்கலாதேவியே கண்ணகி

பூம்புகாரில், கோவலன் மாதவியிடம் இருந்தபோது தனித்து இருந்த கண்ணகி, ''மங்கல நாண் அன்றி மற்றை நாண் அணியாளாக'' இருந்தாளென்பதை ஆசிரியர் புகார்க் காண்டத்துள் புலப்படுத்துகின்றார். செல்வத்தால் சிறந்து வளர்ந்து, செல்வத்தால் உயர்ந்த கோவலனுக்கு மணம் முடிக்கப்பட்டு, விலையுயர்ந்த அணிகலன்களோடு விளங்கிய கண்ணகி, அவற்றை வினைவயத்தால் களைந்த போதும், மங்கலப் பெண்டிர்க்குரிய நாணினை மிகச் சிறப்பாகப் போற்றியணிந்திருந்தாள். அத்தகைய உயர்ந்த விருப்பத்தை மங்கல நாணில் வைத்து அணிந்திருந்த கண்ணகி, கோவலனை இழந்த நிலையில், அவ்வணியை இழந்து வாழ மனமில்லாமலேயே, கைவளையல் களை மட்டுமே உடைத்தெறிந்த நிலையில், மதுரையைவிட்டு, வையையின் ஒருகரை பற்றிச் சென்று, நெடுவேள் குன்றத்தின்மீது ஏறி, வேங்கை மரத்தின் நிழலில் நின்று தெய்வமானாள். அந்நிகழ்ச்சியை அம்மலைவாழ் குறவர்கள் நேரில் **கண்**டு,

> '' நிறங்கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரை
> நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
> தெய்வம் கொள்ளுமின் சிறுகுடி யீரே ''

என்றுகூறிக் கண்ணகிக்கு வழிபாடு செய்ததாக அடிகள் வேட்டுவவரியுள் கூறியுள்ளார். கண்ணகி என்ற பெயரை அறியாத மலைவாழ் வேடர்கள், மங்கல அணியுடன் நின்ற பெண்ணின் தோற்றத்தினைக்கொண்டே 'மங்கல மடந்தை' என்று பெயரிட்டு வழிபாடு செய்திருக்கவேண்டும். கண்ணகி தெய்வமான இடத்திலேயே

சேரன் செங்குட்டுவனும் கண்ணகிக்குக் கோயிலமைத்துள்ளதால், மங்கல மடந்தை என்ற பெயர் கால வழக்கில் மங்கலாதேவி, மங்கலாதேவி அம்மன் என்று, தெய்வச் சிறப்புடன் பெயர் பெற்றிருப்பது ஏற்புடையதேயாகும். இக்கருத்திற்கேற்பக், கேரள நாட்டில் கோழிக்கோடு நகருக்கு அருகேயுள்ள அங்காடி புரத்தில் பண்டைக்காலத்தில் கண்ணகி வழிபாட்டிற்கு அமைக்கப்பட்ட கோயில், தாலியம்மன் கோயில் என்ற பெயருடன் இருப்பது சிந்திக்கத்தக்கதாகும்.

## பழமைக்குரிய சான்றுகள் :

மங்கலதேவி கோட்டத்திலுள்ள இடிபாடுகளில், ஒரு பக்கம் சுவர்வைத்ததைப் போன்று எஞ்சிநிற்கும் பகுதியில் இருக்கும் கல் சாளரமும் கண்ணகியின் மானுட உடலை, மலைவாழ் குறவர்கள் அவ்விடத்திலேயே தங்களுடைய மரபு வழக்கத்திற்கேற்ப புதைவடை செய்து வழிபாடு செய்துள்ளதற்கு அறிகுறியாக, அடையாளத்துடன் அமைக்கப்பட்டதைப்போன்று நிற்கும் கல்லடுக்குக் கம்பமும் (நடுகல் என்றும் கொள்ளலாம்), கண்ணகியின் சிலையமைந்த கோயிலுக்கு முன்னர் அமைந்த சிறிய திருமுற்றத்தில் உள்ள அழகிய பலிபீடமும், கற்பலகை ஒன்றைத்தவிர வேறொன்றும் இல்லாத (சிலாதலம்) அறைக்கோயிலும், ஒரு கோயிலின் சிறிய விமான அமைப்பும், கோட்டத்தினுள் அச்சந்தரும் புதர்களுக்கிடையே இயன்ற வழியில் கண்டு ஆராய்ச்சி செய்த நான்கு கல்லடைவுக் கோயில்களுள் பழமையான கோயிலின் கட்டிட அமைப்பும், பழைய வட்டெழுத்துக் கல்வெட்டும், கல்லடுக்கு மதிலும், சிதைந்துள்ள கண்ணகி சிலையும் ஆகிய இவற்றையெல்லாம் பழம் பொருள், கல்வெட்டாராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு சிந்தித்துப்பார்க்க; ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட பழமைக்கு இவைகள் ஆதாரமாகவே அமைந்துள்ளன. இவ்வாறு, மங்கலதேவிக்கோட்ட ஆராய்ச்சியினை ஒருவாறு சிறப்புற முடித்துக்கொண்டு மாலை மூன்று மணியளவில் மலையிலிருந்து நண்பர்களுடன் இறங்கத் தொடங்கினேன். அடிவாரத்திற்கு வரும்போது மாலை மணி ஏழு ஆயிற்று. விலங்குகளின் தொல்லைகட்கு அஞ்சிய நிலையில் ஓட்டமும் நடையுமாகக் கூடலூர் வந்து சேர்ந்தோம்,

கி. பி. 1947-ல் புகாரில் தொடங்கிய என்னுடைய ஆராய்ச்சி, சிலப்பதிகாரம் குறிக்கும் வழிகளையும் ஊர்களையும் மலைகளையும் தொடர்ந்ததின் பயனாக 17—11—1962-ல் சேர நாட்டு எல்லையுள் மலைமேல் மங்கலதேவிக் கோயில் (கோட்டம்) என்னும் பெயருடன் இன்று குறிக்கப்படுவதும், சேரன்செங்குட்டுவனால் அமைக்கப்பட்டதுமாகிய பத்தினிக் கோட்டமெனும் கண்ணகிக் கோட்டத்தினைக் கண்டுபிடிக்கும் வாய்ப்பினை அளித்தது. இவ்வாறு வளர்ச்சியுற்ற ஆராய்ச்சிக்குரியதாக இடையே ஏறத்தாழப் பதினேழு ஆண்டுகள் கழிந்துள்ளன. தமிழகத்தின் கற்புத் தெய்வமாம் கண்ணகியின் கோயிலைக் கண்டுபிடித்து வெளியிடுவதற்குப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தனது பேச்சுமட்டுமின்றி மூச்சையும் சிலப்பதிகாரமாகக் கொண்டு தெய்வத் தமிழையும், தமிழ்க் கலைகளையும் வளர்க்கும் நமது முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழ்மரபைக் காக்கும் தகைமையால், தண்டமிழ் நல்லோர் விரும்பி அணிவித்த ''தமிழவேள்'' என்னும் மேன்மைக்கு முன்னர் நிற்கும் சிறிய விருதாகும் என் கண்ணகிக் கோட்டக் கண்டுபிடிப்பினை, தமிழன்னையின் திருவடிக்கு ஆராய்ச்சியுரையாம் மலர்களால் அணி செய்கின்றேன்.



# வழிபாட்டுக்கு அயல்மொழி - வங்காளிக் குழந்தையின் வியப்பு

திரு. கீ. இராமலிங்கனுர், M. A.,
"தமிழ்மணம்", சென்னை-30.

வழிபாடு என்பது, உணர்ச்சியோடு செய்யப்பெற வேண்டிய ஒன்று. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' அன்போடு வழிபாடு செய்பவர்களே நன்னெறிக்கு ஆளாகக் கூடியவர்கள். 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுபவரே' இறைவன் அளிக்கும் ஈடிலா இன்பத்தை இனிது நுகர வல்லவர் களாவர். கடவுளை நெஞ்சகம் நைந்து நினைப்பதே உண்மை வழிபாடாகும். உள்ளம் ஈடுபடாமல், உணர்வு ஊற்றெடுக்காமல், செய்வது வழிபாடு என்று சொல்லக்கூடாது.

உள்ளம் தோயவும், உருக்கம் பிறக்கவும் வேண்டுமானுல், வழிபாட்டுக்குரிய மொழி, வழிபாடு செய்பவரின் தாய்மொழியாக இருக்க வேண்டும். தாய்மொழியே உள்ளத்தைத் தொடக்கூடியது,உணர்வை எழுப்பக்கூடியது. புரியாத மொழியாயின், நெஞ்சம் நைவதற்கு இடமே இராது. குழந்தையிடம் கொஞ்சுவதும், மனைவியிடம் காதலுரையாடுவதும், பொருள் விளங்காத அயல்மொழியில் இருக்குமானுல், கொஞ்சுவதாலும் காதலுரையாடுவதாலும், முழுப்பயன் விளையுமென்று எதிர்பார்க்கலாமா?

இந்த உண்மை, ஒரு குழந்தைக்கும் விளங்கக் கூடியது என்பதை, மாமுனிவர் இரவீந்திர நாததாகூர் நிறுவியசாந்திநிகேதனத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியால், அறியலாம். அந்நிறுவனத்தில்; ஒவ்வொருநாளும், காலையிலும் மாலையிலும் அன்பர்கள் கூடி வடமொழி மந்திரங்களை ஓதி வழிபாடு ஆற்றுவார்கள். ஒருநாள், மாலை வழிபாட்டின்போது, ஒரு வங்காளிப் பெரியவர், தம் பேத்தியை அழைத்துக்கொண்டு, அங்குச் சென்றிருந்தார். புதிதாக அவ்வாசிரமத்திற்கு வந்த அக் குழந்தை, இப்படிப் பலர்கூடி வழிபாடு செய்வதை அதற்குமுன் பார்த்தது கிடையாது.

"இவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிருர்கள்"? தாத்தா என்று, தன் பாட்டனுரை அக்குழந்தை கேட்டது. "கடவுளை வழிபடுகிருர்கள், அம்மா" என்று தாத்தா சொன்னுர். "என்ன மொழியில் வழிபடுகிருர்கள்?" என்று, அக்குழந்தை மேலும் வினவிற்று. 'சமஸ்கிருதத்தில் வழிபாடு செய்கிருர்கள்" என்று பாட்டையா பகர்ந்தார். குழந்தை வியப்படைந்தது. "ஏன் தாத்தா, கடவுளுக்கு வங்காளி மொழி புரியாது என்பதனுலா?" என்று அது பொறுமையாகக் கேட்டது.

இந்தச் செய்தியை, மகாத்மா காந்தியடிகளாரால் வெளியிடப் பெற்று வந்த 'அரிசன்' இதழில், 7-5-1948-ல், அதன் ஆசிரியர் திரு. மாசறுவாலா குறித்து வைத்துள்ளார். அந்தத் தாளின் 13-6-1948 இதழில், அவ்வாசிரியர் பெருமகனுர் எழுதியுள்ள இன்னெரு செய்தியும், இதுபோது சிந்திக்கற்பாலதாகும். வாசகர் ஒருவர் பின்வரும் கேள்வியைக் கேட்டிருந்தார்.

கேள்வி: நமது நாடு நம்முடையதாகிவிட்ட இந்த நேரத்தில், அறிவுக் கருவூலங்க

* Q. ... Now that we have gained our own, shall we not encourage the language of our ancients, who have given us the Vedas - the stores of knowledge?".

A. "... If religious prayers have to be effective, (i.e.) provide real spiritual food to the praying individual and if religious scripture

ளாகிய வேதங்களை நமக்கு அளித்த நம் முன்னோர்களின் மொழியை நாம் ஆதரிக்க வேண்டாவா?'' இவ்வினாவுக்குத் திரு. மாசருவாலா பின்வரும் விடையைத் தந்தார்.

விடை: ''சமைய வழிபாடுகள், பயனுடையவையாக இருக்கவேண்டுமாயின், அதாவது வழிபடுவோர்க்கு அவை உண்மையான உயிர் ஊட்டம் அளிக்கவேண்டுமாயின், மற்றும் சமையப் பனுவல்கள் அவற்றைப் படிப்போர், ஓதுவோரின் மனத் தெளிவுக்காக ஏற்பட்டவையாயின், அவை விளங்காத மூடப் பழங்கங்கள் சார்ந்த வழக்கங்களாக இருந்து வருவதை நிறுத்தவேண்டும். வழிபாடுகளும், சமய நூல்களும், மூலமாயினும் மொழி பெயர்ப்பாயினும், மக்கள் புரிந்து கொண்டு அவற்றைத் தம்முடையனவாக ஆக்கிக் கொள்ளும் மொழியில் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும்''

சமுதாயச்சார்புள்ளசமையச்சடங்குகளையும் நாம் நமக்கு விளங்காத மொழியில் நடத்தி வருவதை, அந்த வங்காளிக் குழந்தை காணுமாயின் உண்மையில் பெரிதும் வியப்படையாமல் இராது. 'தமிழர்கள் தான் இதைப் பற்றிச் சிந்தனையில்லாமல் இருக்கின்றார்கள்' என்று அக்குழந்தை, வளர்ந்து அறிவு நிரம்பிய நிலையுற்றதும், எண்ணி வியந்திருக்கும்.

இதுபோது தென்னாப்பிரிக்காவில் நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றி, என் நண்பர் திரு. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் கூறிய பின்வரும் சுவையான செய்தி என் நினைவுக்கு வருகிறது. அவர் அங்கு ஒரு கல்விக் கூடத்தின் முதல்வர். ஒரு செல்வந்தர் தம் மகளை, அப்பெண் விரும்பாத ஒரு வயதான பணக்காரருக்கு மணஞ் செய்து வைத்தார். பி.ஏ., பட்டம் பெற்ற அச் செல்வி, மணவினை முடிந்ததும் அறமன்றத்தில் ஒரு விண்ணப்பம் சேர்ப்பித்தாள். ''மணம் செல்லாது'' என்று ஆணை பிறப்பிக்குமாறு. அறமன்ற மாநடுவர் ஒரு மேல் நாட்டவர். பெண்ணின் பெற்றோர், மாப்பிள்ளை, மணம் செய்து வைத்த வங்காளி சாத்திரியார், திருமணத்திற்கு வந்திருந்த பெரியோர்கள், பலரையும் கேட்டாய்வு செய்தார். திருமணம் முறைப்படி நடந்ததாக அவருக்கு முதலில் தோன்றியது. இறுதியாகப் பெண்ணை வினவினார். தனக்குப் புரியாத வடமொழியில் சடங்குகள் நடந்தன என்று பெண் கூறியதைக் கேட்டதும், வங்காளிக் குழந்தையைப் போல் அவரும் வியப்பில் ஆழ்ந்தார். மணமகனுக்கோ, பெற்றோருக்கோ, மணத்தைக்காண வந்த பலருக்கோ, வடமொழி சிறிதும் தெரியாது என்று கேட்டுத் தெரிந்து கொண்டதும், வாழ்க்கையின் மிக முக்கியமான திருமணச்சடங்கை, மணமக்களுக்கு விளங்காத அயல் மொழியில் நடத்தியதால், அம்மணம் செல்லாது எனத் தீர்ப்பளித்தார்.

நமது அறமன்றங்கள் இவ்வாறு தீர்ப்பளிக்கும் நாள் என்று வருமோ, என்று அறிஞர் உலகம் அவாவி எதிர்நோக்கியிருக்கின்றது. அதற்கு உகந்தவகையில், சட்டதிட்டங்கள் அமையும் நாளையும், ஆவலுடன் எதிர்பார்த்தபடியிருந்து வருகிறது. புரியாத மொழியில் மந்திரங்கள் இருப்பதால், அவற்றைச் சொல்லுகிறவர்கள் திருத்தமாகச் சொல்லுகிறார்களா என்று தெரிந்து கொள்ளவும் முடியாதபடியிருக்கின்றது.

ஒரு சிற்றூரில் அலுவல் முறையில் நான் தங்கியிருக்க நேர்ந்தபொழுது, எதிர் வீட்டில் இருந்த ஒரு பள்ளிச் சிறுவன், விடுமுறை நாட்களில் சடங்குகள் செய்துவைப்பான். அவனை ஒருநாள் கேட்டேன்; திருமணம் செய்து வைத்ததாகவும், திருவடிப் பேற்று நிகழ்ச்சியை நடத்திவைத்ததாகவும் சொன்னான். மந்திரங்கள் தெரியவேண்டுமே? என்றேன். 'சில வடமொழிப் பாடல்கள் தெரியும், அவற்றைச் சொல்லி அடித்துத் தள்ளிவிடுவேன்' என்றான். கேட்கமாட்டார்களா? என்றேன். அவர்களுக்கு என்ன தெரியும்? கவுண்டர்கள் தாமே! என்றான். இன்னொரு செய்தியும் இது தொடர்பாக நினைவில் நிகழ்கிறது. நாகப்பட்டினத்தில் ஒரு திருமணம். மணமகன் படித்த பள்ளியிலிருந்து ஆசிரியர்கள் பலரும் வந்திருந்தனர். புரோகிதர் திருமணச் சடங்கில், ஒரு சமயம் அபரக்கிரியை மந்திரங்களை ஓதினார். இதைச் செவிமடுத்த பள்ளியின் சமஸ்கிருத ஆசிரியர் விரைந்து சென்று, புரோகிதரை விறைத்து நோக்கி அதட்டினார். பிறகு விழித்துக்கொண்டு,

---

are meant to enlighten those who read or recite them, they should cease to be unintelligent semi-Superstitious practices. Prayers and scriptures, whether original or translated, must reach the people in a language which they understand and can master''.

K. G. Mashruwala,
'Harijan', Vol. XII, No. 15, dt. 13-6-48.

புரோகிதர் மந்திரத்தை மணச் சடங்குக்குரிய தாக மாற்றினுர்.

புரியாத பிறமொழியில் சொல்லப்படும் மந் திரங்கள் திருத்தமாகவே ஓதப்பெற்ருலும், அவை நமது பண்பாட்டுக்குப் பொருத்தமான வைதாம் என்று கூறமுடியுமா என்பதற்குத் திட மாக விடை பகர இயலாமல் இருக்கின்றது,

புது தில்லியிலிருந்து வெளிவரும் ''கார வான்'' என்னும் இரு வார ஆங்கிலத்தாள், 1970 ஜூன் இதழில் திரு. இராம ஐயர் என்பவர், நமது 'சிரார்த்த மந்திரங்கள்' என்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார். தந்தைக்கு ஈமக் கடன் செலுத்தும் மகன், தன் தாயின் ஒழுக் கத்திலும், பாட்டி இரண்டாம் பாட்டி நேர்மை யிலும், ஐயங்கொண்டுள்ளதாக மந்திரங்கள் சொல்வது அந்நேரத்தின் பெருமைக்கு எவ் வளவு கேடு விளைவிப்பதாகவும் மானக் குறை வாகவும் இருக்கிறது என்பதை, எடுத்துக் கூறு கிருர். அம்மந்திரங்களை அப்படியே எழுதியும், அவற்றிற்கு உரை விளக்கம் செய்தும், தெளிவு படுத்துகின்ருர். இம்மந்திரங்களை இன்னமும் நாம் சொல்லிச் சொல்லி வருவது எதனுல்? அவற்றின் பொருளைச் சடங்கு செய்விப்போரும், சடங்குக்கு உரியவரும் அறியாமையினுல்தான் அன்ருே?

மக்கள் அனைவரும் இனி வடமொழி பயின்று கொண்டால், வழிபாட்டுக்கும், சமு தாயச் சடங்குகளுக்கும் உரிய மந்திரங்களைத் திருத்தமாகச் சொல்லவும், பொருள் புரிந்து கொள்ளவும், பொருந்தாதவற்றைக் களைந்திட வும் வழிகோலுமே என்று சிலர் நினைக்கலாம். இது நடவாத செயல். வடமொழி 3500 ஆண்டு களுக்கு முன்பு செய்யப் பெற்றபோதே, எளிதில் அனைத்து மக்களும் பயின்று கொள்ளக்கூடிய எளிமையான முறையில் செய்யப் பெறவில்லை. மறைவாக வைத்துக்கொள்ளும் கருத்துட னேயே, கடுமையான ஓசைகளை அமைத்துச் செய்யப் பெற்றதாகவும் சொல்லப்படுகிறது.

'முன்பு எக்காலத்திலாவது, மக்கள் அனை வரும் வடமொழியில் பயிற்சி பெற்றிருக்க வில்லை. பயிற்சி அளிக்க முயற்சியும் செய்யப் படவில்லை. இனி எக்காலத்திலாவது அம் மொழியை அனைவரும் பயின்று கொள்ளவும் முடியாது.'' இவ்வுண்மையை நமது மதிப்புக்கு உரிய பேரறிஞர் சர். எஸ். வரதாசாரியார் அவர்கள், ''வடமொழியில் மக்கள் தொடர்ந்து பற்றுக்கொள்ள வேண்டும் என்று கிளர்ச்சி செய்பவர்களது நம்பிக்கை பயனற்றது. அவர் கள் கவனிக்க வேண்டிய வலிமையான காரணங்கள் மூன்று உண்டு'' என்று கூறுகிருர். அவற்றில் ஒன்று ''வடமொழி பொதுமக்கள் கற்பதற்கு எட்டக்கூடிய மொழியாக முன்பு என்றுமே இருந்ததில்லை. இனி என்ருவது இருக்கவும் முடியாது'' என்பதாகும்.*

இவ்வுண்மைகளை உணர்ந்த பின்பாவது, நம்மனோர்க்கு அந்த வங்காளிக் குழந்தையின் வியப்பு அரும்பிடவேண்டாவா? பிறகே அது மலர்ந்து காய்த்துக் கனியாக ஆவன செய்யும் முயற்சி முகிழ்க்க முடியும்.

---

*"It (Sanskrit) had never been and never would be within the reach by the masses''

—Sir S. Varadachari,

(Chairman of the Income-tax Evasion Enquiry Commission) Bombay, April 27, 1950.

The Indian Express, 29th April; 1950

# சென்னைப் பட்டணத்துச் சட்டம்

(முற்றுெடர்ச்சி)

21. தஸ்தாவேசுகளை வரவழைக்கவும் உத்தரவுகள் பிறப்பிக்கவும் ஆணையருக்குள்ள அதிகாரம் :—(1) ஆணையர் எந்த நடவடிக்கை சம்பந்தமாய் வழக்குத் தொடரலாமென்று அல்லது ஒரு கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளலாமென்று இச் சட்டத்தில் நிபந்தனை கண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட ஒரு நடவடிக் கையாயிராமல், இச் சட்டத்தின் படிக்கான வேறு யாதொரு நடவடிக்கை கிரமமானதுதான் அல்லது அதில் பிறப்பிக்கப்பட்ட யாதொரு தீர்ப்பு அல்லது உத்தரவு சரியானதுதான் அல்லது சட்ட ரீதியானதுதான் அல்லது நியாய மானதுதான் என்று தாம் சந்தேகமறத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, அந்த நடவடிக்கை விஷயமாய் யாதொரு பிராந்தீயக்குழுவின் துணை அல்லது உதவி ஆணையருடைய அல்லது ஒரு அற நிலையத்தின் யாதொரு தர்மகர்த்தா வுடைய தஸ்தாவேசை வரவழைத்துப் பரி சீலனை செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொரு தீர்ப்பு அல் லது உத்தரவு துணை அல்லது உதவி ஆணையர் ஒருவரால் மடம், அல்லது ஒரு மடத்தோடு இணைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளை, 46-வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டி யலில் சேர்க்கப்பட்டுள்ள அறநிலையமல்லாத வேறொரு நிலையத்தின் தர்மகர்த்தாவால் பிறப் பிக்கப்பட்டிருந்து, அத் தீர்ப்பையேனும் உத்த ரவையேனும் மாற்ற வேண்டுமென்றே ரத்து செய்யவேண்டுமென்றே நிராகரிக்கவேண்டு மென்றே புனராலோசனைக்காகத் திருப்பி அனுப்பவேண்டுமென்றே ஆணையர் கருதினல் அவர் அந்தப் பிரகாரமே உத்தரவு பிறப்பிக்க லாம்.

(3) (a) யாதொரு பிராந்தீயக்குழுவால் அல்லது 46-வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற யாதொரு அறநிலையத்தின் தர்மகர்த்தாவால் அப்படிப் பட்ட ஒருதீர்ப்பு அல்லது உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தால், ஆணையர் தமக்குத் தகுதியாகத் தோன்றுகிற பட்சத்திலே, ஷை தீர்ப்பு அல்லது உத்தரவைப்பற்றிப் புனராலோசனை செய்வதற் காக ஷை விஷயம் சம்பந்தமாய்த் தமது அபிப் பிராயங்கள் சகிதமாக அவ்விஷயத்தை ஷை குழு அல்லது தர்மகர்த்தாவுக்குத் திரும்ப அனுப்பி, அது சங்கதியை ஆணையரால் இது விஷயமாகக் குறிப்பிடப்படும் காலத்துக்குள் அவருக்கு அறிக்கை செய்யலாம்.

(b) அப்படிப்பட்ட ரிப்போர்ட் வந்து சேர்ந்து அதைப்பற்றி ஆலோசனை செய்தபிறகு, ஆணையர் சந்தர்ப்பத்துக்கேற்றபடி அத் தீர்ப்பு அல்லது உத்தரவையாகிலும் மேற்சொன்ன வாறு புனராலோசனை செய்த பிறகு மாற்றப் பட்டபடியுள்ள தீர்ப்பு அல்லது உத்தரவை யாகிலும் மாற்றலாம், ரத்து செய்யலாம் அல்லது நிராகரிக்கலாம்.

(c) ஷை ரிப்போர்ட்டானது குறிப்பிடப் பட்ட காலத்துக்குள் அல்லது அதற்கு மேற் பட்டு ஆணையரால் அனுமதிக்கப்படக்கூடிய காலத்துக்குள் அவரிடம் வந்து சேராவிட்டால், ஆணையரானவர் சந்தர்ப்பத்துக் கேற்றபடி பிரஸ்தாப பிராந்தீயக் குழுவின் அல்லது தர்ம கர்த்தாவின் தீர்ப்பு அல்லது உத்தரவை மாற்ற லாம். ரத்து செய்யலாம் அல்லது நிராகரிக் கலாம்.

(4) (a) இச்சட்டத்தின் படிக்கான (எந்த நடவடிக்கை சம்பந்தமாக இச்சட்டத்தில்

வழக்கு அல்லது அப்பீலுக்கு ஏற்பாடு செய்யப் படவில்லையோ அத்தகைய நடவடிக்கையல்லாத) யாதொரு நடவடிக்கை சம்பந்தமாக, ஒரு மடம் அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளையின் யாதொரு தர்மகர்த்தாவுடைய ரெக்கார்டை அதில் பிறப்பிக்கப் பட்டுள்ள யாதொரு தீர்ப்பு அல்லது உத்தரவு சட்ட சம்பந்தமானதா எனச் சந்தேகமறத் தெரிந்து கொள்வதற்கு ஆணையர் வரவழைத்துப் பரிசீலனை செய்யலாம்.

(b) ஒரு மடம் அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளையின் தர்மகத்தாவால் சட்ட சம்மதமில்லாமல் யாதொரு தீர்மானம் அல்லது உத்தரவு, பிறப்பிக்கப்பட்டு, ஷை தீர்மானம் அல்லது உத்தரவு மாற்றப்படவேண்டும், ரத்து செய்யப்படவேண்டும், நிராகரிக்கப் படவேண்டும் அல்லது மீண்டும் ஆலோசனைக்காக அனுப்பப்பட வேண்டுமென ஆணையருக்குத் தோன்றினல் அவர் அவ்வாறே உத்தரவு பிறப்பிக்கலாம்.

(5) ஆணையர் யாதொரு கட்சிக்காரர் சொல்லிக்கொள்வதைக் கேட்காமல் அல்லது அவர் சொல்லிக்கொள்ள வேண்டியவற்றைச் சொல்லிக்கொள்ள அவருக்கு நியாயமான அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்காமல், (2) உட்பிரிவின்படியாவது (3) உட்பிரிவில் கண்ட (b) பகுதியின் படியாவது (c) பகுதியின்படியாவது அவருக்கு விரோதமாக எந்த உத்தரவையும் பிறப்பிக்கக்கூடாது.

(6) ஆணையர் (1) உட்பிரிவில் அல்லது (4) உட்பிரிவின் (a) பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிற தன்மையுள்ள யாதொரு தீர்ப்பு அல்லது உத்தரவு விஷயமாய் (2) உட்பிரிவின்படியாவது (3) உட்பிரிவின்படியாவது (4) உட்பிரிவின் (b) பகுதியின்படியாவது தமக்குள்ள அதிகாரங்களைச் செலுத்துகிறவரையில் அத்தீர்ப்பு அல்லது உத்தரவு நிறைவேற்றப்படுவதை நிறுத்தி வைக்கலாம்.

(7) இப்பிரிவின்படி தமக்குள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்காக ஆணையருக்கு அனுப்பப்படுகிற ஒவ்வொரு விண்ணப்பமும், சம்பந்தப்பட்ட விண்ணப்பம் விஷயமான உத்தரவு அல்லது நடவடிக்கை விண்ணப்பதாரருக்கு அனுப்பப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கொடுத்துக்கொள்ளப் படவேண்டும்.

22. ஆணையருக்குள்ள இதர அதிகாரங்கள் :—(1) ஆணையர் எந்தத்தசையிலாகிலும்;

(a) ஒரு துணை அல்லது உதவி ஆணையருக்கு முன் பைசலாகாமல் நடந்துகொண்டிருக்கிற யாதொரு நடவடிக்கையைத் தமது சொந்தக் கட்டுக்கு மாற்றிக்கொண்டு அதைத் தானே பைசல் செய்யவோ.

(b) பைசல் செய்யப்படுவதற்காக அதை மற்ருெரு துணை அல்லது உதவி ஆணையருக்கு மாற்றவோ அதிகாரமுடையவராவர்.

(2) ஒரு துணை அல்லது உதவி ஆணையர் செலுத்தியிருக்க வேண்டிய அல்லது செய்திருக்கவேண்டிய யாதொரு அதிகாரத்தை அவர் செலுத்தவோ அல்லது யாதொரு கடமையை அவர் செய்யவோ தவறிவிட்டிருக்கிருரென்று ஆணையர் சந்தேகமறத் தெரிந்து கொண்டால், ஷை ஆணையர் தாமே அவ்வதிகாரத்தைச் செலுத்தலாம் அல்லது அந்தக் கடமையைச் செய்யலாம்.

(3) ஒரு பிராந்தீயக் கமிட்டியார்.

(a) அவர்கள் செலுத்தியிருக்கவேண்டிய அல்லது செய்திருக்கவேண்டிய யாதொரு அதிகாரத்தைச் செலுத்தவோ, யாதொரு அலுவலைச் செய்யவோ தவறிவிட்டிருக்கிருர்களென்ருவது,

(b) எக்காரணத்தினுலேனும் யாதொரு அதிகாரத்தைச் செலுத்தவோ, யாதொரு கடமையைச் செய்யவோ முடியாதவர்களாயிருக்கிருர்களென்ருவது;

ஆணையர் சந்தேகமறத் தெரிந்துகொண்டால், அவர் தாமே அவ்வதிகாரத்தைச் செலுத்தலாம் அல்லது அந்தக் கடமையைச் செய்யலாம் அல்லது அவ்வாறு செலுத்த அல்லது செய்ய உதவி ஆணையருக்கு அனுமதி கொடுக்கலாம்.

ஆனுல், (a) பகுதியின் கீழ்வரும் விஷயங்களில், ஆணையர் அந்தப் பிராந்தீயக் குழுவினர் ஷை அதிகாரத்தைச் செலுத்துவதற்காக அல்லது ஷை கடமையை நிறைவேற்றுவதற்காக முதலில் ஒரு கால அளவை நிச்சயிக்க வேண்டும்; மேலும் அவர் அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட கால அளவுக்குள் அந்தப் பிராந்தீயக் குழுவினர் ஷை அதிகாரத்தைச் செலுத்தா

விட்டால் மாத்திரமே அல்லது ஷை கடமையை நிறைவேற்றுவிட்டால் மாத்திரமே, இவ்வுட்பிரிவில் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற உரிமையைச் செலுத்தவேண்டும்.

மேலும், (b) பகுதியின்படி நடவடிக்கை எடுக்கும் முன் ஆணையர், உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கையை ஏன் எடுக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டப் பிராந்தீயக் குழுவினருக்கு ஒரு நியாயமான வாய்ப்பை அளிக்க வேண்டும்.

(4) இச்சட்டத்திலே என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஒரு துணை அல்லது உதவி ஆணையருடைய உத்தியோகம் காலியாயிருந்தால், ஆணையர் அந்தக் காலி இடம் பூர்த்தி செய்யப்படுகிறவரையில்;

(a) துணை அல்லது உதவி ஆணையருக்கு இச் சட்டத்தினுல் அல்லது இதன்படிக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களைத் தாமே செலுத்தலாம். விதிக்கப்பட்டுள்ள கடமைகளைத் தாமே நிறைவேற்றலாம், அல்லது,

(b) ஷை அதிகாரங்களைச் செலுத்தவும் மேற்படி கடமைகளைச் செய்யவும் மற்ருெரு துணை அல்லது உதவி ஆணையருக்கு அனுமதி கொடுக்கலாம்.

(5) எந்த உத்தரவின் பேரில் ஒரு வழக்குத் தொடரலாமென்று அல்லது ஒரு கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாமென்று இச் சட்டத்தில் நிபந்தனை கண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட ஓர் உத்தரவாயிராமல், (1) (a), (2), (3) அல்லது (4) (a) உட்பிரிவின்படி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட ஓர் உத்தரவினுல் துன்பமடைந்திருக்கிற யாதொரு கட்சிக்காரர், அவ்வுத்தரவு தம்மிடம் வந்து சேர்ந்த தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் அரசாங்கத்தாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

ஆனுல் யாதொரு கட்சிக்காரரின் முறையீடுகளைச் சொல்லிக் கொள்வதற்கான நியாயமான வாய்ப்பு அவருக்கு இருந்தாலன்றி அரசாங்கத்தார் அவருக்கு விரோதமாக எவ்விதமான உத்தரவையும் பிறப்பிக்கக் கூடாது.

## அத்தியாயம் III

### அறநிலையங்களின் பொது ஷரத்துக்கள் :

23. மதசம்பந்தமான கட்டளைகள் விஷயமாக ஆணையருக்குள்ள அதிகாரங்களும் கடமைகளும் :—இச்சட்டத்தின் ஷரத்துக்களுக்குட்பட்டு, மதசம்பந்தமான கட்டளைகளின் பரிபாலனம், ஆணையரின் பொதுவான மேற்பார்வைக்கும் ஆதிக்கத்துக்கும் உட்பட்டதாகும்; மேற்படி கட்டளைகள் சரிவரப் பரிபாலிக்கப்படுகின்றனவென்றும் அவைகள் எந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டனவோ அல்லது ஏற்பட்டிருக்கின்றனவோ அக்காரியங்களுக்காக அவைகளின் வருமானம் கிரமமாகச் செலவிடப்படுகின்றன வென்றும் நிச்சயித்தறிந்து கொள்ள அவசியமென்று கருதப்படக்கூடிய எந்த உத்தரவையேனும் பிறப்பிப்பதற்கான அதிகாரமும் அத்தகைய மேற்பார்வையினும் ஆதிக்கத்திலும் அடங்கும்.

24. அறநிலையங்களில் நுழைய அதிகாரம் :—(1) ஆணையரும், துணை ஆணையர்களும், உதவி ஆணையர்களும், இது விஷயமாய் ஆணையரிடமிருந்தாவது பிராந்தீயக் குழுவினரிடமிருந்தாவது அதிகாரம் பெற்றிருக்கக்கூடிய இதர அதிகாரிகளும், இச்சட்டத்தின் அல்லது இதன்படிச் செய்யப்பட்ட விதிகளினுல் கொடுக்கப்பட்டிருக்கிற யாதொரு அதிகாரத்தைச் செலுத்துவதற்கேனும் விதிக்கப்பட்டிருக்கிற யாதொரு கடமையைச் செய்வதற்கேனும் யாதொரு அறநிலையத்தின் வளவிலாகிலும் வழிபாட்டுக்குரிய யாதொரு இடத்திலாகிலும் பிரவேசிக்க அதிகாரமுடையவராவார்கள்.

(2) மேற்படி அதிகாரத்தைச் செலுத்துகையிலாவது மேற்படி கடமையைச் செய்கையிலாவது அப்படிப்பட்ட யாதொரு அதிகாரி தடுக்கப்பட்டால், அதிகார வரம்புள்ள மாஜிஸ்ட்ரேட்டானவர் அவ்வதிகாரியிடமிருந்து எழுத்துமூலமான வேண்டுகோளை வரப்பெற்றுக்கொள்வதன் பேரில், ஸப்-இன்ஸ்பெக்டர் தகுதிக்குக் குறையாத தகுதியுள்ள யாதொரு போலிஸ் அதிகாரிக்கு, மேற்படி அதிகாரத்தைச் செலுத்துவதற்கேனும், மேற்படி கடமையைச் செய்வதற்கேனும் அவ்வதிகாரிக்குத் தேவையாயிருக்கக்கூடிய உதவியைச் செய்யும்படிக் கட்டளையிட வேண்டும்.

(தொடரும்)

# திருவருளும் வேண்டும்

மறைத்திரு. மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள்,

சிவராஜயோகமடம், பூம்புகார், மேலையூர்.

உலகமே சதம் என்று நினைப்பவர்கள், போகம் பொருள் பதவி புகழ்இவற்றை விரும்பிப் பெற்றிட முயற்சி செய்கிறார்கள். கல்வி அறிவு சிறந்தவர்கள், அன்பு அறம் ஒழுக்கம்இவற்றை விரும்பி இந்த நெறியில் நன்மையை அடைய முயல்கிறார்கள். இவ்விருசாராரும் தெய்வத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள். மேலே சொல்லிய போகம் முதலியவையும் அன்பு முதலியவையும் அனைத்துமே, திருவருளும் துணை செய்தாற்றான் நிறைவேறி நிலைத்து நின்று பயனைத்தரும் என்று அருளாளர்கள் சொல்லுகின்றார்கள். நமது அனுபவத்தில் இந்த உண்மை புலப்படுகின்றதா என்பதை ஆராய்வோம்.

போகம் பொருள் பதவி புகழ் முதலியவற்றைத் தமது திறமையால் உலக சாதனங்களால் பெற்றுவிடலாம் எனப்பலரும் கருதுகிறார்கள். சிலர் அவ்வாறு பெற்றும் விடுகிறார்கள். ஆனால் நிலையாக அவற்றை அனுபவித்து மகிழ்கிறார்களா? என்றால், அதுதான் இல்லை. ஏதாவது ஒரு பெரும் நலன் அல்லது சிறப்பு ஒருவருக்குக் கிடைத்து விட்டால்; அந்த நலனைப்பெற விரும்பிய மற்றவர்கள் அந்தரங்கமாகவோ பகிரங்கமாகவோ, அவர் பால் பகைமை பாராட்டுகிறார்கள். தவிரவும் ஒரு சிறப்பு நிலையில் இருப்பவர் தம்மைச் சார்ந்த எல்லோரையும் திருப்தி செய்ய முடியாத காரணத்தால், அவரைச் சார்ந்தவர்களும் அவர்பால் பகைமை பாராட்டுகிறார்கள். இவ்வாறு அகத்தும் புறத்தும் பகைமை வளர வளர, அதனை அழிப்பதற்காக நேர்மையில்லாத வழியையும் பின்பற்ற நேருகிறது. இல்லையானால் தமது செல்வாக்கினை இழக்க நேரிடுகிறது. தம் புகைழையும் செல்வாக்கினையும் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தம் விருப்பமின்றியே, ஏதாவது தவறுகளை அவர் செய்யவேண்டியவர் ஆகிறார். அந்தத் தவறுகள் உடனடியாகவோ சிறிது காலந்தாழ்த்தோ அவருக்குத் துன்பம் விளைவித்து விடுகின்றன. ஆதலால் உலகத்தை மட்டும் நம்பி நல்லதே நினைத்து நல்லதே செய்தாலும்கூட, அவர்கள் எண்ணம் ஈடேறுவதில்லை. நல்லவர்களை உலகம் வாழவைத்ததே இல்லை என்பது தொன்று தொட்ட வரலாறாக இருக்கின்றது.

அமெரிக்காவில் ஜான்கென்னடி சகோதரர்கள், நீக்ரோ தலைவர், காங்கோவில் லுமும்பா, இலங்கையில் பண்டாரநாயகா இவர்களெல்லாம் உலகறிந்த நல்லவர்களாக இருந்தும், சுட்டுக் கொல்லப்பட்டு விட்டதை நமது தலைமுறையிலேயே கண்டுவிட்டோம். ஏன் நேரு சாஸ்திரி போன்றவர்கள் இறப்பதை உலகமும் விரும்பவில்லை. அவர்களும் விரும்பவில்லை. இயற்கையின் கொடிய நியதிக்கு அவர்களும் இலக்காகி விட்டார்கள். அருளாளர்கள் இறக்கவில்லையா என்ற கேள்வி இங்கே எழலாம். அவர்கள் இறப்பதற்கு வருந்தவில்லை. தவிரவும்; தங்கள் கடமையை, சேவையை மக்கட்குச் செய்துவிட்டோம் என்ற மன நிறைவோடு அவர்கள் மறைந்தார்கள். பெருஞ்செல்வர்கள் பலர் தீராத நோய்க்கு ஆளாகிப் போகத்தை இழந்தே வாழவேண்டிய நிலைமையை நாம் அனுபவத்தில் கண்டும் கேட்டும் இருக்கிறோம். கோடிக்கணக்கான சொத்துள்ள செல்வர் ஒருவர், தொழுநோயினால் பற்றப்பட்டு உலகமெல்லாம் சுற்றியும், பல இலட்சங்கள் செலவிட்டும், அந்நோயினின்றும் விடுபடாமலே மறைந்தார். இளம் பருவத்திலேயே கொடிய நோய்க்கு இலக்காகி வேதனைப் படுகின்றவர்களையும் கண்ணாரக் காண்கிறோம்.

## அன்பு :

அன்புடையார் எல்லோரும் மகிழ்ச்சியோடு வாழ முடிவதில்லை. இளைஞன் ஒருவன் இள நங்கை ஒருத்தியை விரும்புகின்றான். அந்த நங்கை இவனை விரும்பவில்லை. முடிவு இளைஞனின் தற்கொலையாகி விடுகிறது. இருவரும் ஒருமித்த காதலர்களாக இருந்தாலும், சாதி-சமயம் முதலிய சமூகச் சூழ்நிலை அவர்களைக் கலந்து வாழ அனுமதிக்காதபோது, அவர்கள்

இருவருமே தற்கொலை செய்து கொள்கிருர்கள். இது மட்டுமல்ல. நீண்டகாலம் அன்போடு கலந்து வாழ்ந்து வந்த கணவன் மனைவி மக்கள் இவர்கட்குள்ளும், முரண்பாடுகள் நேர்வதும், அவற்றின் விளைவாகத் தற்கொலைகளோகொலை களோ நிகழ்வதும் செய்தித் தாள்களில் அடுத் தடுத்து வருவதை நாம் பார்க்கிருேம். அன்புடைமைக்கு இதுதாளு பரிசு என்று கேட் கத் தோன்றுகிறதல்லவா ?

### அறம் :

சாக்ரடீஸ் என்ற கிரேக்க நாட்டுச் சான்ற வர், ஒரு குற்றமும் செய்யாமல் மக்களை விழிப் புணர்ச்சி உள்ளவர்களாகச் சிந்திக்க வைத்த காரணத்தால், நீதிபதிகளால் நஞ்சு கொடுக்கப் பெற்ருர். கௌதம புத்தர், ஒரு விருந்தில் பன்றி எலும்பு தொண்டையில் சிக்கிக்கொள்ள, அதனுல் ஆவி பிரிந்தார் என்று கூறப்படு கின்றது. ஏசுநாதரைக் கொடியவர்கள் சிலு வையில் அறைந்தார்கள். இவை போன்ற வரலாறுகள் மிகக் குறைவாக இருந்தாலும், இவைகள் பேருண்மைகளைப் புலப்படுத்துவன வாக உள்ளன. நல்லோர்களை உலகம் என்றுமே வாழவைத்ததில்லை என்பதும், திரு வருள் பெற்றோர்கள் உலகத்தை எதிர்த்து நின்று தங்கள் கொள்கையை நிறைவேற்றிக் கொண்டவர்கள் என்பதும், இங்கே சிந்தித் துணர வேண்டியனவாகும். கற்புடைமை ஒரு பேரறம். கண்ணகி கோவலனிடத்தில் அன்பு செலுத்தினுள். கற்பு நெறி தவருதிருந்தாள். கோவலனே மாதவியிடத்தில் மயங்கிப் பொரு ளெல்லாம் தோற்ற பின்னர்க் கண்ணகியை நாடி வந்தான். காற்சிலம்பைக் கொடுத்து, மதுரைக்கும் வழி நடந்து சென்ருள் கண்ணகி. முடிவு கோவலனைப் பறி கொடுத்ததும் தான் இறந்ததுமாக ஆயிற்று. கண்ணகி பாண்டிய னிடம் வாதிட்டதும், மதுரையை எரித்ததும் எல்லாம், ஒருபுறம் இருக்கட்டும். கற்புடைமை என்ற அறத்தை உறுதியாகப் பின்பற்றிய ஒரு கற்பரசி, மகிழ்ச்சியோடு வாழ்ந்ததில்லை என் ருல், அறம் என்பதை நாம் ஏன் ஒத்துக்கொள்ள



வேண்டும் என்றல்லவா கேட்கத் தோன்று கிறது.

### ஒழுக்கம் :

தாருகவனத்து முனிவர்கள் ஒழுக்க சீலர் கள். அவர்கள் மனைவியரும் கற்பு நெறியில் உறுதிப்பாடுடையவர்கள். திருமால் மோகினி யாக வந்த வடிவத்தைக் கண்டு முனிவர்கள் மனஉறுதி குலைந்து மயங்கி, மோகினியைப் பின் தொடர்ந்தார்கள். முனிவர்களின் மனைவி மார்கள், பிச்சைத் தேவராக வந்த சிவபெரு மான் வடிவத்தைக் கண்டு மையல் கொண் டார்கள். முனிவர்களும், அவர் தம் மனைவி மார்களும் தாங்களே ஒப்புக்கொண்டு பின்பற்றி வந்த அற ஒழுக்கத்தைத் தாங்களே கைவிட் டார்கள். மனம் தங்கள் கட்டுப்பாட்டில் இயங்கவில்லை என்பது, இதனுல் உணர்த்தப் படும் உண்மையாகும். போர்க்களத்தில் முரு கப் பெருமானுடைய பெரும் பேருருவத்தைச் சூரபத்மன் காண்கிருன். கண்டு விம்மிதம் அடைகின்ருன். மெல்ல மெல்லத் தன்னிலை மாறிப் பேரன்பு மீதூர, உலையிலிட்ட மெழுகு போல என்பெலாம் குழைந்துருகி நிற்கின்ருன். பின்னர்த் தன்னிலையை நினைவு கூர்ந்து பின் வருமாறு சொல்லுகின்ருன்.

ஒன்னலர் பொருட்டா லேகி
உருசம ரிழைத்த செம்மல்
தன்னுரு அதனைக் காணின்
முனிவதே தகுதி யாகும்
வன்னிகொள் வெண்ணெ யேபோல்
வலியழிந் துருகிற் றென்ருல்
என்னுடை வயத்த அன்ருே
உணர்ச்சியும் யாக்கை முற்றும்

—கந்தபுராணம்.

ஆகவே, மனம் நாம் விரும்பிய நெறியில் உறுதி யாக நிற்பதற்கும், திருவருள் துணை வேண்டும் என்பது புலனுகின்றது. மனித சத்தியால் அல்லது மனித முயற்சியால் பின்பற்றப்படும்

அன்பு அறம் ஒழுக்கம் இவை நிறைவேறுமலோ அல்லது தீங்கு தருவதாகவோ முடிகிறது. காரைக்காலம்மையார்—திலகவதியார்—மங்கையர்க்கரசியார் இவர்கள் உலக அறநெறிகளைக் கைவிடாமல், திருவருளையும் உறுதியாகப் பற்றி நின்றார்கள். அதனால் அவர்கள் தாங்களும் வாழ்ந்து, பிறரையும் வாழவைக்க முடிந்தது' அருளாளர்கட்குப் பரம்பரையும், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்குப் பின்பற்றுவோரும் இருக்கின்றனர். ஏனைய உலகப் பெரியவர்கட்கு அவ்வாறில்லை.

நாம் செய்யும் வினைகளை ஏற்றுக்கொண்டு, அவை நல்லனவா தீயனவா எனப்பகுத்தறிந்து, அவற்றின் பயனை நாம் அடையும்படி செய்வது சிவசக்தி என்பது சைவசித்தாந்தம். ஆதலால் புறத் தோற்றத்திற்கு நல்லனபோலத் தோன்றுபவை, திருவருட்குறிப்பில் தீயனவாகக் கணக்கிடப்படலாம். அவ்வாறே புறத்தோற்றத்திற்குத் தீயனபோலத் தோன்றுபவை; திருவருட்குறிப்பில் நல்லனவாகக் கணக்கிடப்படலாம். சண்டீசர் தாதையைக் கொன்றது நல்வினையாகவும், தக்கன் வேள்வி செய்தது தீவினையாகவும், திருவருட்குறிப்பில் மாறியதாக உதாரணம் காட்டப்படுகிறது. ஆதலால் நல்லது நினைப்பவர்கள், நல்லனசெய்ய விரும்புகிறவர்கள், திருவருளை நம்பித் திருவருளைப் பிரார்த்தித்து அதனைச் செய்வார்களானால், நிச்சயம் நல்ல பயனைப் பெறுவார்கள். "எப்பொருளும் ஆக்குவான் ஈசனே" என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு. திருவருளைப் பற்றிச் சிந்தித்தறியுமுன், உலக நடைமுறைகள் நமக்கு என்ன உண்மையை உணர்த்துகின்றன என்று, அறிஞர்களைச் சிந்திக்குமாறு தூண்டவே இக்கட்டுரை எழுதப் பெற்றது.

# காவிரிக் கோட்டம்

(காவிரியம்மன் கோயில்)

**திரு. சன்மார்க்க தேசிகன் அவர்கள்**

தலைவர், திருச்சி மாவட்டச் சன்மார்க்க சங்கம்

"தண்ணீருங் காவியே தார்வேந்தன்
சோழனே மண்ணுவதுஞ் சோழ
மண்டலமே"

என்பது ஔவையார் திருவாக்கு, கங்கையிலும் காவிரி புனிதமானது என்பர் தொண்டரடிப் பொடியாழ்வார்.

கங்கையிற் புனித மாய
காவிரி நடுவு பாட்டு
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கந் தன்னுள்
எங்கள் மால் இறைவ னீசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்
ஏழையே னேழையேனே.

என்பது அவ்வாழ்வார் அருள் வாக்கு. இக் காவிரியைப் புலவர்கள் வான் பொய்ப்பினும் தான்பொய்யா வளத்ததென்று பாராட்டுவர்.

'வசையில் புகழ்வயங்கு வெண்மீன்
திசைதிரிந்து தெற்கே கினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைய கடற் காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்'.

என்பது பட்டினப் பாலை.

'கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை'

என மணிமேகலை கூறும். சோழ நாடு வற்றா வளங் கொழிக்கும் காவிரியைப் பெற்றுள்ளதால் நீர் நாடு, புனல் நாடு, காவிரி நாடு, பொன்னி நாடு என்ற பெயர்களை உடையதாயிற்று. சோழவள நாடு சோறுடைத்து என்ற பழமொழி காவிரியின் வளத்தையன்றோ காட்டுகிறது. அகத்திய முனிவரின் கமண்டலத்தினின்றும் காவிரி உற்பத்தியாயிற்றென்பது புராண வரலாறு.

'கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் றனது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை'

என மணிமேகலை கூறும். கவேரர் என்ற முனிவர்க்கு மகளாயினமையின் காவிரி என்று பெயர் பெற்றதாக ஆக்னேய புராணம் காவேரி மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. கவேர முனிவரைப் பற்றிய குறிப்புகள் மணிமேகலையி னுள்ளும் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம் கானல் வரியுள் ஆற்றுவரியாக வருபவை நவில் தொறும் இன்பம் பயப்பனவாம்.

'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப் பூ வாடையது போர்த்துக்
கருங் கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி!'

'பூவர் சோலை மயிலாலப்
புரிந்து குயில்களிசை பாடக்
காமர் மாலை யருகசைய
நடந்தாய் வாழி காவேரி'

'வாழி யவன்றன் வளநாடு
மகவாய் வளர்க்குந் தாயாகி
ஊழி யுய்க்கும் பேருதவி
யொழியாய் வாழி காவேரி'

—சிலப்பதிகாரம்
—கானல்வரி—ஆற்றுவரி.

இலக்கியங்களிற் காணும் காவிரிச் சிறப்பையெல்லாம் கூறப்புகின், அஃது காவிரியினும் பெரிதாக நீளும். பழங்காலந் தொட்டே தமிழ் மக்கள் காவிரியைத் தெய்வமாகவே போற்றி வருகின்றனர். ஆடித் திங்கள் பதினெட்டாம் நாள், காவிரியன்னையைப் போற்றி வணங்கும் விழா நாளாதலைச் சிறுவரும் அறிவர். காவிரியைத் தெய்வமாகப் போற்றுவதோடமையாது அதற்குக் கோயிலெடுத்து வழிபாடும் ஆற்றினர்.

திருச்சிராப்பள்யில் காவிரிக்குத் தனிக் கோயில் ஒன்றுள்ளது. காவிரியம்மன் கோயில் என்று வழங்கப்பெறும் அது, சின்னைய பிள்ளை சத்திரம் சாலையில் அச்சத்திரத்திற்குச் சற்று தெற்கே மேல் சிறகில் அமைந்துள்ளது. சின்னைய பிள்ளை சத்திரம் சாலையில் பட்டர்வொர்த் ரோடுக்கு நேர் எதிரே உள்ளதென்றும் கூறலாம். கோயில் சிறியது. கிழக்கு நோக்கியது. கருவறை பதினைன்றே முக்காலடிச் சதுர மானது. கருவறையின் மேலுள்ள விமானம் வட்ட வடிவமானது. கருவறையின் முன்னர் உள்ள ஒரே முன் மண்டபம் இருபத்தைந்தடி நீளமும் பதினைன்றே முக்காலடி அகலமும் உடையது. பக்கத்துக்கு மூன்றாக ஆறு தூண்கள் இம்மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. தூண்கள், மண்டபத்தின் மேல்தளம், கருவறை ஆகிய எல்லாம் கருங்கற்களாலானவையே. கோயிற் கட்டிடமும் அதனைச் சூழ்ந்து கோயிலுக்குச் சொந்தமாகவுள்ள மனையும் சேர்ந்து கோயிலின் பரப்பளவு 5213 சதுர அடியாகும். இக்கோயிலின் பழைமையை நோக்கின் இது குறைந்த அளவு ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகலாம்.

கருவறையிலுள்ள காவிரியம்மனின் திருவுருவம் கருங்கல்லாலானது. நான்கு கைகளையுடையது. ஒருகை அபயமுத்திரையுடனும் இன்னொன்று வரத முத்திரையுடனும் மற்ற இரு கைகள் தாமரை மலரைப் பிடித்தனவாகவும் உள்ளன. அமர்ந்த நிலையிலிருக்கும் அம்மனின் இடது கால் பீடத்தின் மீது மடித்து வைக்கப்பட்டிருக்க, வலது கால் தொங்கவிடப்பட்டிருக்கிறது. கீழே தொங்கும் பாதத்தைப் பீடத்திலிருந்து மலர்ந்த ஒரு தாமரை மலர் தாங்குகிறது. முகத்தின் இரு பக்கமும் சடைகள் விரிந்திருக்கின்றன. மகுடமும் சடாமகுடமாகவே உள்ளது. அம்மனுக்கு ஆடை அணிகலன்களைச் சிற்பி அழகுற அமைத்திருக்கிறர்.

காலை மாலை இருவேளையும் அம்மனுக்குப் பூசை நடைபெறுகிறது. கோயிலைப் பரிபாலித்து வருகின்ற அந்தணரே, பூசையும் செய்கிறர். ஆண்டுதோறும் ஆடித் திங்கள் பதினெட்டாம் நாளில் சிறப்பான அபிடேகங்களும் அருச்சனைகளும் செய்யப்பெறுகின்றன. காவிரியம்மன் கோயில் என இப்படி ஒரு கோயில் இருப்பதையே பலர் அறியார். இக்கோயிலின் வரலாறு காலம் முதலியவை ஆராய்ச்சிக்குரியனவாம்.

# ஆண்டாள் பெருமை


**திரு. சி. சானகிராமன்**

**சிக்கல், நாகை வட்டம்**


"ஆண்டாள்" எனும் இச்சொல் 'ஆள்' என்னும் பகுதியினடியாகப் பிறந்த பெண்பாற் படர்க்கை வினையாலணையும் பெயர். இப்பெயர் இவருக்கு எப்போது வழங்கப் பெற்றது? எம்பெருமான் ஒருநாள் இரவு பெரியாழ்வார் கனவில் தோன்றி "உம்மிடம் வளர்ந்து வரும் சிறுமி, பூமகளின் அம்சம். அவள் இவ்வுலகத்தை ஆள வந்தவள். யாம் விரும்புவன அவள் சூடிக் கொடுத்த மாலைகளே", எனத்திருவாய் மலர்ந்தருளி மறைந்தனன். தம் எண்ணத்தை அர்ச்சையிலும் தெளிவித்துக் காட்டினன், இச்செயலைக் கண்ட ஆழ்வார், "எம்மை ஆண்டாள் இவளே!" எனத் தம் மகளாரைத் தழுவிக் கொண்டனர். அன்றையிலிருந்தே இத்திருநாமம் இவருக்கு வழங்கலாயிற்று.

இறை பக்தியில் ஆழ்ந்து நின்ற காரணத்தால் ஆழ்வார்கள் எனப்பெற்ற பன்னிருவருள் ஆண்டாளும் ஒருவராதலின், இவர் பக்தியைப் பற்றி நாம் பகரவேண்டிய அவசியமில்லை. ஆனால், மற்றவர்களைப் போன்று நம் பூங்கொடியார் எம்பெருமான் பக்தியோடு மட்டும் நின்றிலர். உலக உயிர்களையும் இறைவனையும் ஆளுந் திறமையையும் பெற்றிருந்தனர். இதைத் தெள்ளிதிற் குறிக்க எழுந்ததே ஆண்டாள் என்னும் இத் திருநாமம்.

இவர் உயிர்களை எங்ஙனம் ஆள்கிறார்? இறையின் இயல்புகள், அவன் உத்தமக் குணங்கள் ஆகியவற்றை இவர் இயற்கையோடும், உலகப் போக்கோடும் கலந்து உயிர்களுக்கு ஊட்டுகிறார். அவற்றைச் செவி ஏற்ற மங்கையர் திரள் திரளாக இவரிடம் வந்து குழுமுகின்றனர். அவர் தம்மைக் கொண்டுபோய் இவர் எம்பெருமானிடம் ஒப்புவிக்கிறார். அவர்கள் கைங்கரியப் பயனைப் பெற்று உய்கின்றார்கள். இச்செயலைத் திருப்பாவையில் காணலாம்.

இவர் இறைவனை ஆளுதல் எங்ஙனம்? இறைவன் சேதனரைத் திருத்துதற் பொருட்டுப் பல பிறவிகளையும் எடுத்துப் பல முயற்சிகளையும் மேற்கொண்டான். பலன் கிடைத்திலது. நம் அன்னையாரோ, மக்கள் குற்றங்களைக் கண்டு சினமுற்றிருக்கும் இறைவனை நல்லுரைகளால் மகிழ்வித்துச் சேதனரை ஆட்கொள்ளுமாறு செய்கிறார். இதனால், இறைவன் சேதன லாபத்தைப் பெறுகின்றான். இங்ஙனம் இருபாலாரையும் தக்கமுறையில் ஆளுகின்றமையின் "ஆண்டாள்" என்னும் திருநாமம் எத்துணைப் பொருத்த முடையதாயிற்று! இச்செயலை மற்ற ஆழ்வார்களும் மேற்கொண்ட போதிலும், அவர்களுக்குப் பயன் கைகூடிற்றிலது. இது நிற்க!

இறைக்குப் பரமபதம், பாற்கடல், அவதாரம், அந்தர்யாமித்துவம் (உயிர்களின் உள்ளுறைதல்), அர்ச்சாவதாரம் என ஐந்து நிலைகள் உண்டு. இவற்றுள் அர்ச்சாவதாரமே கடவுட் குணங்கள் யாவும் நிரம்பப்பெற்ற இடம் என்பதற்குப் பல சான்றுகள் உள. இது சாத்திரங்களும், ஆராய்ச்சியாளர்களும் ஒப்புக் கொண்ட ஒன்று. மக்கள் எம்பெருமான் திருவருளைப் பெறுவதற்கு இதுவே தக்க இடம். ஆகவே, நம் பொற்புடையாருக்கு அர்ச்சாவதாரத்தின் அமைந்த பெயர் எது? 'ஆண்டாள்' என்பதே! அறிந்தவரோ அறியாதவரோ ஆண்டாள் சந்நிதி, ஆண்டாள் நீராட்டம், ஆண்டாள் திருக்கல்யாணம் என இப்பெயரையே இட்டுச் செப்புவதைக் காண்கிறோம். உய்யக்கொண்டாரும், 'அன்னவயற் புதுவை ஆண்டாள்' எனவே வழங்குகின்றார்.

நம் ஆண்டாள் நாச்சியார், முக்காலத்தி லுள்ள மக்களையும் ஆளுந்திறமை வாய்ந்த வராவர். முன்புள்ள ஆயர் மங்கையராகவே தம்மைப் பாவித்துச் செயலிற்றியமையின், அஃது அம்மங்கையர்களுக்கு நலமளித்தது. இவர் காலத்திலிருந்த உலகமும் இவரால் இறை யருளைப் பெற்றுச் செம்மையடைந்தது. பிற் காலத்தவரும் எல்லாத் தலைமுறையும் இவர் வரைந்து வைத்துப்போன உயர் கருத்துக் களால் பண்புற வழியுள்ளது. ஆதலின், இத் இத்திருப்பெயர் எத்துணைச் சீர்மையுடைய தாகும். தெய்வத்தன்மை வாய்ந்த இப் பெயரை, மற்ற ஆழ்வார்களின் பெயர்களோ டும், இவருக்கு அமைந்த மற்றப் பெயர்களோ டும் ஒப்புக்கூறல் யாங்ஙனம் இயலும்! இதன் சிறப்பே தனிப்பட்டதாகும்.

நம் ஆண்டாள், தாமும் மக்களோடு ஒருவ ராய் இருந்து செயல் செய்யத் தொடங்கினர். உபதேசம் மட்டும் பெரும் பயன் அளியாது என்பது இவர் உறுதிப்பாடு. ஆதலின், தாமே போந்து எல்லோரையும் அஞ்ஞானத் துயிலி லிருந்து எழுப்பி, "சங்க மிருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்" என எம்பெருமானிடம் கொண்டுபோய்ப் பேரின்பத்தைத் துய்க்கச் செய்கிறார். இது மட்டுமோ? எம்பெருமானை யும் "உம்பர் கோமானே! உறங்காது எழுந் திராய்" எனத் துயிலெழுப்புகிறார். மற்ற ஆழ்வார்கள் அறிவைக் காட்டிலும் இவர் அறி வின் மாட்சியை என்னென்பது.

திருப்பாவையை அருளிச்செய்த ஆண்டா ளின் அளப்பரும் சிறப்புக்களை 'வியாக்யான கர்த்தாக்கள்' பலவகையிற் புகழ்ந்து போற்றி யுள்ளனர்.

"திருத்துழாய் பரிமளத்தோடே கூட முளைக்குமாபோலே, ஆண்டாளும் பால்ய யௌவநாவஸ்தைகள் தோறும் வளருகிற பர பக்தி பரஞான பரம பக்திகளை அதிகமாக உடையவள் ஆகையாலே, பகவத் விஷயப் பிராவண்யம், அல்லாத ஆழ்வாரைக் காட்டில், இவளுக்கு மிகவும் அதிசயித்திருக்கும்".

"பத்து ஆழ்வார்களுடைய ஸார பூதையா கத் திகழ்பவள் ஆண்டாள். பதின்மருடைய ஞானமும் ஸ்த்ரீதனமாக இவள் பக்கலிலே யிறே குடிகொண்டது. பத்துப்பேர்க்கு ஒரு பெண்பிள்ளையிறே".

"ஆழ்வார்களுக்கும் எம்பெருமான் மயர் வற மதிநலம் அருள வேண்டிற்று. எம்பெரு மானை எழுப்பித் தன் குறையை எம்பெருமா னுக்கு விண்ணப்பம் செய்கையால், இவள் தான் எம்பெருமானுக்கு மயர்வற மதிநலம் அருளினள்".

"இளையபெருமாள்படி ஆழ்வார்களது. ஸ்ரீபரதாழ்வான்படி பெரியாழ்வாரது. ஸ்ரீசத்ருக் நாழ்வான்படி அவர் திருமகளது. ஆழ்வார் களும் இளைய பெருமாளும் பகவத் அநுபவத்தை ஆசைப்பட்டார்கள். ஸ்ரீபரதாழ்வானும் பெரி யாழ்வாரும் பகவத் ஸம்ருத்தியை ஆசைப் பட்டார்கள். ஸ்ரீசத்ருக்நாழ்வானும் ஆண் டாள் நாச்சியாரும், பாகவத சேஷத்வத்திலே நின்றார்கள்".

"தேகாத்மாபிமாநிகளுக்கும் ஆத்மஸ் வரூபம் கைவந்திருக்கும் ரிஷிகளுக்கும் பர்வத பரமாணு வோட்டை வாசி போரும்; ரிஷிகளுக் கும் ஆழ்வார்களுக்கும் அத்தனை வாசி போரும். பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் அத்தனை வாசி போரும்".

"அவர்களில் இவருக்கு வாசி என்? என் னில், "அநாதிமாயயா" என்கிறபடியே, ஸம் ஸாரத்திலே யுறங்குகிறவர்களை எழுப்பி எம் பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டார் கள் ஆழ்வார்கள். இவள் தானே சென்று எம் பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித் தாள். ஆகையாலே, அவர்களைக் காட்டிலும் இவள் மேலானவள் ஆவாள்".

"அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித்து எழுந்தஎன் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கு என்றே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன் ஒல்லை
விதிக்கிற்றியே"

என்கிறபடியே, பிறந்ததன் தொடக்கமே பிடித்து ஆண்டாள் பகவத் குணங்களிலே ஈடு பட்டுப் போந்தாள். மேலும் புருஷன் புரு ஷனைக்கண்டு ஸ்நேகிப்பதனைக் காட்டிலும், ஸ்திரி புருஷனைக்கண்டு ஸ்நேகிக்கை பள்ள மடையாகையாலே, ஆழ்வார்களிற் காட்டிலும் எம்பெருமான் பக்கல் பரம பக்தியுடையவள் ஆண்டாள்." என்பது தெளிவு.

(வெண்பா)

அஞ்சு குடிக்கொரு சந்ததியாய்,
ஆழ்வார்கள் தஞ்செயலை
விஞ்சிநிற்கும் தன்மையளாய்—பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் பக்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து.

# ஐங்கறி யமுது

(கோயிலில் வழங்கிய பண்டைய உணவு வகை)

**திரு. ரா. கோபாலன் அவர்கள்,** M. A.,

சரித்திரத்-தொல்பொருள் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

கி. பி. எட்டாம் நூற்றுண்டு முதல் பதினைந்தாம் நூற்றுண்டு வரை, தமிழ் நாட்டில் கிடைத்திருக்கும் கோயில் கல்வெட்டுகளிலிருந்து பல அருமையான சரித்திரக் குறிப்புக்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் அன்ருட வாழ்க்கையில் கோயிலில் நிவேதிக்கப்பட்ட உணவு வகைகளைப் பற்றிய பல சுவையான செய்திகள் காணப்படுகின்றன. இக்கட்டுரையில் தமிழ் நாட்டில் கோயில்களில் குடிகொண்டிருக்கும் மூர்த்திகளுக்கும், வேதம், திருவாய்மொழி முதலிய திருப்பதிகங்கள் பாராயணம் செய்பவர்க்கும், கோயில் தொண்டு செய்யும் அடியவர்களுக்கும், அளிக்கப்பட்ட உணவுப் பொருள்களைப் பற்றியே பெரும்பாலும் விவரிக்கப்படுகின்றது. தென்னிந்தியக் கல்வெட்டுக்களில் பிரசுரிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்களைக் கொண்டே கோயிலில் அளிக்கப்பட்ட திரு அமுது விவரங்கள் இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றன.

இறைவனுக்குத் தினந்தோறும் நிவேதிக்கப்பட்ட உணவினைத் ''திருஅமிர்து'' என்றனர். இனிப்பு கலந்து செய்யப்பட்ட அரிசிச் சோறு 'அக்கார அடிசில்' என வழங்கப்பட்டது. இவை ஒன்பதாம் நூற்றுண்டு முதல் தமிழ் நாட்டுக் கோயில்களிலும், கேரள நாட்டு ஆலயங்களிலும் நாள்தோறும் படைக்கப்பட்டவையாகும்.தென் ஆற்காடு மாவட்டம், திருவாமாத்தூர்க் கோயிலில் பொறிக்கப்பட்ட சோழ மன்னன் முதலாம் இராசராசனின் 26-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி.பி. 1011) அக்கோயில் இறைவனுக்குத் தினமும் ''அக்கார அடிசில்'' படைக்கப்பட்ட செய்தியினைத் தெரிவிக்கின்றது. கி. பி. 9-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்திருந்த வைணவ ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் தமது ''நாச்சியார் திருமொழி'' யில் ''அக்கார அடிசில் '' ஒரு தலைசிறந்த உணவாகக் குறிப்பிடுகின்ருர். சீவக சிந்தாமணியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ''அக்கார அடலை'' யும் இதுவே போலும். (சீவக, சி. 928). இன்னும் ''பயற்றுப் போனகம்'' என்னும் உணவு வகை, முதலாம் இராசராச சோழ மன்னர் காலத்தில் (985-1014) தமிழ் நாட்டில் பல கோயில்களில் இறைவனுக்கு நிவேதிக்கப்பட்டது. இவ்வகை தற்பொழுது வழங்கும் வெண் பொங்கல் என்றவகையினைச் சார்ந்தது எனத் தோன்றுகிறது. இது பெரும்பாலான கோயில்களில் சிறுகாலை சந்திக்கு இறைவனுக்கு உகந்ததாகப் படைத்தனர். பிற்காலத்தில் ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் விஷ்ணு ஆலயங்களிலே வெண்பொங்கல் படைக்கப்பட்டுக் கோயிலில் குழுமியிருக்கும் மக்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் 'கும்மாயம்'' 'கும்மாய அமிர்து' 'வெண்புழுக்கு' என்றும் 'சர்க்கரை அமுது' என்றும் கல்வெட்டுகளில், கோயில்களில் அளிக்கப்படும் உணவு வகைகளைப் பற்றிக் காணப்படுகின்றது. இவற்றுள் கும்மாயம் என்பது இன்றும் வைணவ ஆலயங்களிலே வழக்கினில் இருப்பதாக அறிகிறோம். இது உடைத்த பச்சைப் பயற்றினைக் குழையச் சமைத்துச் செய்யப்படுகின்றது எனத் தெரிகின்றது. கும்மாய அமிர்தில் அக்காலத்தில் சேர்க்கப்பட்ட பொருள்களைப்

பற்றி விளங்கவில்லை. இது பெரியாழ்வார் பாசுரங்களில் "கும்மாயத்தோடு வெண்ணெய் விழுங்கி" என்று கண்ணனுக்கு உகந்த சிற்றுண்டியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கும்பகோணம் நாகேசுவர சுவாமி கோயிலில் உள்ள இராசகேசரி வர்மன் கல்வெட்டொன்று கும்மாயத்தை உத்தம போசனத்தின் ஒரு பகுதியாகக் குறிக்கின்றது.

ஒரு தனிப்பட்ட சிவயோகிக்குத் தினந்தோறும் கோயில்களில் அளிக்கப்பட்ட உணவு வகைகளிலே கும்மாயம், காய்கறிகள், வெண்புழுக்கு, புளிங்கறி, பொறிக்கறி, தயிர் ஆகியவை இடம் பெறுகின்றன. இவையே உத்தமாக்கிரம் எனப்பட்டது. சில உயர்ந்த கறிகள் அடங்கின உணவு, ஐங்கறியமுது எனப்பட்டது. பக்குவம் செய்த சோற்றுக்கும் கறிக்கும் தேவைப்படும் முக்கியப் பொருள்களையும் சேர்த்து உப்பமுது, பருப்பமுது, மிளகமுது, நெய்யமுது என்றனர். வெற்றிலையமுதும், அடைக்காய் அமுதும், திருநீற்றமுதும், வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பைக் குறிப்பன.

ஒன்பதாம் நூற்றுண்டில் பாண்டியன் வரகுணவர்மனின் (தெ. இ. சா. Vol. XIV, No. 13) 16-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட அம்பாசமுத்திரக் கல்வெட்டில் கோவில்களில் ஒரு வேளை உணவுக்குத் தேவையான அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. அவை: அரிசி செந்நெல் தீட்டல் நானுழி, கும்மாயத்துக்குப் பயற்றுப் பருப்பு 1 உரி, நிவேதிக்கப் பசுவின் நறுநெய் உழக்கு, பசுவின் தோய் தயிர் 1 உரி, கருவாழைப்பழம் நான்கு, சர்க்கரை 1 பலம், ஐங்கறியமிர்துக்குத் தேவைப்பட்டவை, காய்கறி ஒன்று, புளிங்கறி இரண்டு, புழுக்குக்கறி ஒன்று, பொரிக்கறி ஒன்றுஆக, கறி ஐந்தினுக்கும் 10 பலம் கறிதுமிக்கவும் பொரிக்கவும் பசுவின் நறுநெய் ஒரு ஆழாக்கு, கூட்டுக்குப் பசுவின் தோய் தயிர் ஒரு உரி, காயம் இருசெவிடு, இவற்றுள் காய்கறி என்பது பச்சைக் காய்கறி போலும். புழுக்குக்கறி திட்டமான தண்ணீரில் ஆவியில் வெந்த கறிவகை. பொரிக்கறி என்பது புளிசேராமல் சமைக்கப்பட்ட கறிவகை. மேற்கூறிய கறிவகைகள் இக்காலத்திலும் தமிழகத்தில் வழக்கில் இருக்கின்றன.

மேலும் "அப்பமுது", "எண்ணும்பூரி", "அவலமுது" "குதகளி", "சர்க்கரை வட்டு" என்று உணவுப் பண்டங்கள் கோயில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. குதகளி என்ன உணவு என்று தெரியவில்லை. சர்க்கரை வட்டு என்பது ஒருவித இலட்டு போலும். எட்டாம் ஒன்பதாம் நூற்றுண்டில் விளங்கிய ஆழ்வார் பாசுரங்களில் அன்றுடம் தமிழ் நாட்டில் இருந்த பல உணவுப் பொருள்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. "உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும்" "சோறும் தயிரும் கறியும்", "பாற்சோறு மூட நெய் பெய்து" "செந்நெல் அரிசி சிறுபருப்புச் செய்த அக்காரம்", "நெய்யிடை நல்லதோர் சோறும்". "அப்பங்கலந்த சிற்றுண்டி", "காரெள்ளின் உருண்டை", "அட்டுவத்தோர்டு சீடை" என்று ஆழ்வார்கள் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அப்பக் காய்கறி என்பதும் பண்டைக்காலத்து ஒருவகைக் கறி. இதற்குத் தேவையானவை பழைய அரிசி, பருப்பு மிளகு கடுகு சீரகம் நெய் பால் போனகம். அடை அமுது; அப்பப் பிரசாதம், அக்காளிப் பிரசாதம், அதிரசம், வடை, சுகியன் பலசம்பாரம், தோசை ஆகிய பல சிற்றுண்டி வகைகளும் வழக்கில் இருந்தன என்பதனைக் கோயில்களிலே காணப்படும் விசயநகர மன்னர்களின் தமிழ்ச் சாசனங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

148693
600 008.

தருமையாதீனத்தின் 25ஆம் குரு முதல்வர் அவர்களின் அருள்நலம் போற்றும் சிறப்பியற் கூட்டத்தில், அறநிலைய ஆணையர் அவர்கள் "திருமுறை திவ்வியப் பிரபந்தத் திரட்டு" நினைவு நூலை வெளியிட்டு, மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களிடம் முதற்படியினை வழங்குதல். (9—12—71)

அருள்நலம் போற்றும் சிறப்பியற் கூட்டத்தில், தவத்திரு குன்றக்குடி அடிகளார், M. L. C. அவர்கள், வரவேற்புரை நிகழ்த்துதல். (9—12—71)

Vol. 15 No. 4. THIRUKKOIL Regd. No. M 7039

அருள்நலம் போற்றும் சிறப்பியற் கூட்டத்தில், சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும், திருமதி சௌந்தரா கைலாசம் அம்மையார் அவர்களும் உரை நிகழ்த்துதல். (9—12—71)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34. Printed at Sivarts Printers, 119, Strahans Road Madras-12. Editor: N. R...